பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணு

மலர் 1 | ஞாயிறு 23-7-'39 | இதழ் 3

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
தனித்திருக்க முடியாது		3
கோரக் காட்சிகள்		8
சுபாஷின் குற்றமா?		11
பாரததேவி பேசுகிறாள்		13
அழகு என்பது என்ன?		16
பெற்றோர்களின் பள்ளி		17
காமதேனுதாசன்—எடிசன்	வே. ம.	21
ஆளுக்குள்ளே ஆளு எத்தனை ஆளு?		26
டென்ட்ஸின்		29
என்னென்ன எதிர்பார்க்கலாம்?		32
பரதேசத் தபால்		33
கலைஞான வரலாறு		36
சட்டம் சட்டமே!	சீதாபதி	40
திரும்பிய உயிர்	ஆர். ஷண்முகசுந்தரம்	43
கல்வாழை நாகரிகம்	கரிச்சான்	47
சி. ராஜகோபாலாசாரியார்	நீடூழி	49
அகத்தியன்		54
'ஹெவியாக இருக்கு'	அசுவதி	58
யாருக்கு வெற்றி?	"ரஞ்சனன்"	61
ஹாயி பாஸ்டர்	பொன்னி	65
வேண்டாத விடுதலை	சி. சு. செல்லப்பா	75
ஜென்ம நக்ஷத்ர பலாபலன்கள்		81
படுத்த படுக்கையில்	ராஜம்	90
அபாக்கியவதி	பு. வே. சுப்ரமண்யம்	95
ஒரு நிமிஷக் கதைகள்		98
கோசாரபலன் என்பது என்ன?		99
திரைப்படச்செய்திகள்		102

தனித்திருக்க முடியாது

இந்தியாவில், இப்போது எல்லாம் பிரச்னைகளாகி விட்டன. எந்த நேரமும் நெருக்கடிதான். பிரச்னைகளும் நெருக்கடிகளும் மலிந்து போனதற்குக் காரணம் என்ன? நம்மவர்களின் யோசனைக் குறைவே, முக்கிய காரணமாகும்.

இப்பொழுது, பிரச்னைகளாக மலிந்துவிட்டவைகளில், இந்திய-இலங்கை பிரச்னை ஒன்று. "ராம-ராவண யுத்தக்காலத்திலிருந்தே, இந்த பிரச்னை இருந்து வருகிறதே! இதற்கு திடீரென்று என்ன மகத்துவம் வந்துவிட்டது" என்று விஷயங்களை முழுதும் தெரிந்து கொண்டதுபோல, சிலர் தலையை அசைக்கலாம்.

எவ்வளவு காலத்துக்கு முன்னிருந்து, ஒரு பிரச்னை தொடர்ந்து வந்தாலென்ன? இப்பொழுது அதற்கு நெருக்கடி வரக்கூடாதா? இந்த இலங்கை—இந்திய பிரச்னை என்பது என்ன? இந்தியர்கள், பிழைப்புத் தேடியோ, செல்வம் சம்பாதிப்பதற்கோ, இலங்கைக்கு வரக்கூடாது என்றும், இந்தியர்களால், இலங்கையின் செல்வம், ஏராளமாக, இந்தியாவுக்கு, மூட்டை கட்டிக்கொண்டு வரப்படுகிறது என்றும் இலங்கை வாசிகளான சிங்களவர்கள் எண்ணுகிறார்கள்.

இதற்கு அவர்கள் கூறும் மருந்தென்ன? இந்தியர்கள், இலங்கைக்கு வாராமலிருந்தால், தங்களுக்கு க்ஷேமம் என்பது போல் நினைக்கிறார்கள்.

இந்தியர்களின் கட்சி என்ன? "தமிழர்கள் ஒரு சமயம் இலங்கையை அரசாண்டிருக்கிறார்கள். தற்போது சிங்களவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள், வங்காளத்திலிருந்து,

இலங்கையில் குடியேறிய இந்தியர்களின் சந்ததிகள்தான். இந்த உறவைக்கூட, நாங்கள் வற்புறுத்தவில்லை. நாங்கள், சொந்தமாகவும், இங்கிலீஷ்காரர்கள் அழைத்தும் இலங்கைக்குப் போனோம். இலங்கையை அரசாண்டது, இப்பவும் உண்மையில் அரசாளுவது, இங்கிலீஷ்காரர்கள்தான். ஆகவே, அழைப்புக்கிணங்க, நாங்கள் இலங்கைக்குப் போனதால், எங்களுக்கு சட்டப்படி சில பாத்தியங்கள் உண்டு" என்று இலங்கை இந்தியர்கள் கட்சி சொல்லுகிறார்கள்.

சிங்களவர்கள், இலங்கை தங்களுடையது என்று சொல்லி, சாசுவத பாத்திய முறையில், இந்தியர்களை வெளியேற்ற வேண்டுமென்கிறார்கள். இந்தியர்களிடம் இவ்வளவு வேண்டாவெறுப்பு, அவர்களுக்கு ஏற்படாமல் இருந்திருக்கலாம். ஏற்பட்டது விசனத்துக்குரியதாகும்.

வேண்டா வெறுப்பு, இந்தியர்களை அலட்சியம் செய்து, அவமதித்துப் பேசுவதிலும், ஆத்திரத்தோடு வெறுப்பதிலும் விரிவடைந்த பின்னர், இந்தியர்கள் தங்கள் உரிமைகளை, சட்டத்தின் மூலமாக, ரூபிக்கப் பார்க்கிறார்கள்.

"நாங்கள் இலங்கைக்குச்சென்று, காடாக இருந்த பூமிகளை தோட்டங்களாக்கினோம். வர்த்தகமே குன்றிக்கிடந்தகாலத்திலே, வர்த்தகத்தைச் செழிக்கச்செய்தோம். சுகவாசிகளாக வாழ்ந்த சிங்களவர்களுக்கு, நாணயச் செலாவணிமுதல் எல்லாவகைச்சௌகரியங்களையும் செய்து கொடுத்தோம். சிங்களவர்களுக்கு நாகரிகம் சொல்லிக்கொடுத்ததே நாங்கள். எங்களை அவர்கள் ஏன் வெறுக்க வேண்டும்? வெறுப்பதாயிருந்தால், எங்களுக்கு சட்டப்படி பரிகாரம் தேடிக் கொடுத்துதான் ஆகவேண்டும்" என்று இந்தியர்கள், கொஞ்சம் உயர்ந்த சுருதியில், தங்கள் கட்சியைச் சொல்லுகிறார்கள்.

பிரச்னை இவ்வளவு விபரீதமான போக்கை அடைந்துவிட்டது. இவ்வளவு வெறுப்பையும் சிங்களவர்கள் இதுவரையிலும் எங்கே அடக்கிவைத்துக்கொண்டிருந்தார்கள்? ஏன் அடக்கிவைத்துக்கொண்டிருந்தார்கள்? இப்பொழுது ஏன் வெளியே விடவேண்டும்?

இங்கிலீஷ்காரர்கள், சிங்களவர்களுக்கு சுயராஜ்யம் கொடுத்துவிட்டதாகப் பெயர் பண்ணியிருக்கிறார்கள். ஸரம்புஸ்

தானமா யிருக்கிற எல்லா வியாபாரங்களும் பதவிகளும் தொழில்களும், இலங்கையில், இன்னும் இங்கிலீஷ்காரர்களின் கையில்தானிருக்கின்றன. அவர்களை அசைக்க, சிங்களவர்களால் முடியவில்லை. ஆகவே, இரட்டிப்பு ஆத்திரத்தோடு, சிங்களவர்கள் இந்தியர்களைப் பகைக்கிறார்கள்.

இப்படி இந்தியர்களின் பேரில் ஆத்திரம் வருவது தகுமா என்று கேட்கலாம். சரியல்லதான். ஆனால், உலக நாடுகளில் இப்பொழுது இருக்கிற தீய உணர்ச்சிகளினால், யாருக்கும் முதலிலே ஆத்திரம் வருவதுதான் இயற்கை என்று தோன்றுகிறது. அதுவும் ஒரு காரியத்தை, குறிப்பிட்ட ஒரு ஆசையை, பூர்த்தி செய்துகொள்ள வல்லமையை இழந்துவிடின், மனிதனுக்கு இரட்டிப்பு மடங்கு ஆத்திரம் உண்டாவதும் 'இயற்கை'.

இந்த ஆத்திரத்திலே, இந்தியர்களும் சரி, இலங்கையர்களும் சரி, ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது. இந்தியாவில், கட்சி பேதங்களும், ஜாதிபேதங்களும் மற்றும் எத்தனையோ பேதங்களும் பார்வைக்கு இன்றைக்குப் பெரிதாக, மலைகளைப்போலத் தோன்றினாலும், இந்தியா விரைவில் சுயராஜ்யம் அடையப்போவது நிச்சயம். இந்தியாவுக்கு சுயராஜ்யம்வந்துவிடுமாயின், அப்பொழுது, இலங்கையின் நிலைமை என்ன?

இலங்கை எப்பொழுதும் தனித்து, தன் வல்லமையைக் கொண்டு வாழமுடியாது. அது எந்தப் பெரிய நாட்டோடாவது ஒட்டிக்கொண்டுதான் வாழவேண்டும். கால சக்கரத்தின் போக்கால், இப்பொழுது, "யூனியன் ஜாக்" கொடியின் கீழ், இலங்கை சொந்தக்கொடி யில்லாமல், இங்கிலீஷ்காரர்களின் ஆதிக்கத்துக்கு கட்டுப்பட்டிருக்கிறது. இந்தியா விடுதலை பெற்றுவிடுமாயின், இலங்கை, இந்தியாவோடு ஒத்துவாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஏன்?

இந்தியாவுக்கு தெற்கே சமுத்திரம்; நீண்ட தூரத்துக்கு சமுத்திரம். இந்தியாவுக்கு அருகில், இந்தியாவை ஒட்டினாற் போல இருப்பது இலங்கை. இலங்கைக்கு, இந்தியாவைத் தவிர, வேறு எந்நாட்டின் ஆதரவும் இருக்கமுடியாது. இந்தியாவும்,

இலங்கையை வேற்ருர் வசம் விட்டுவிட்டு, எப்பொழுது அந்தப் பக்கத்தால் அபாயம் வருமோ என்று கனவு கண்ட வண்ணமாக இருக்கமுடியாது. ஆகவே, சௌஜன்யமான முறையில், இலங்கையும் இந்தியாவும் ஒத்துப்போக வேண்டும்.

சுமார் முப்பத்தாறு கோடி சுதந்திர இந்தியர்களின் ஆதாவைக்கொண்டுதான், இலங்கை எதிர் காலத்தில், அன்னியர்களின் ஆக்கிரமிப்பு பயமில்லாமல் வாழ முடியும். சர்வ தேச சங்க வேஷத்தையும் ஒப்பந்தங்களின் விநோதத்தையும் நம்பி, இலங்கை வாழ முடியாது. சிங்களவர்களின் எதிர்ப்பும் வெறுப்பும் இந்தியாவின் தெற்குக் கோடியில் இருப்பின், அது சுதந்திர இந்தியாவுக்கு, சாசுவத முள்ளைப்போல இருக்கும்.

ஆகவே, சிங்களவர்கள், எதிர் காலத்தில், இந்தியர்களில்லாமல், வேறு அன்னியர்களை அண்டியும் நம்பியும் வாழலாம் என்று கனவு கண்டுகொண் டிருந்தால், அந்தக் கனவை, தூது போயிருக்கும் பண்டித ஜவஹர்லால் நேரு, உடைத்தெறிந்து, நிலைமையை உள்ளபடியே விளக்கிக் காண்பிப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவினின்றும் பணத்தை, வியாபார மூலமாயும் வேறு பல துறைகளின் மூலமாயும் சுரண்டிக் கொண்டு போகிறார்கள் என்று குற்றப் பத்திரிகை சாட்டும் இந்தியர்கள், அதே குற்றத்துக்கு ஆளாகக் கூடாது என்பதை நன்ருக உணர்ந்து கொள்ளவேண்டும். இலங்கையாக இருந்தால் என்ன? பர்மாவாக இருந்தால் என்ன? மலாய் நாடாக இருந்தால் என்ன?

ஆனல், "இந்தியர்கள் எந்த நாட்டிலும் அவமானத்தை அடையப்படாது. அதைப் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டேன்" என்று பண்டித ஜவஹர் கொழும்பில் சொன்னதை, இந்தியா, ஒற்றுமைப் படைத்த இந்தியா, பேசுவதாக, இலங்கை வாசிகள் என்று தங்களை எண்ணிக்கொண் டிருக்கும் சிங்களவர்கள், நன்ருக மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

நமது தோழர்கள் குணசிங்கா, சேனநாயகா, பண்டார நாயகா போன்ற பெரியார்களை, நாம் நேரில் அறிவோம். அவர்

களோடு, நீண்ட நேரம், இந்த பிரச்னையைப்பற்றி, நாம் வாதாடியிருக்கிறோம். அவர்களுக்கும் அவர்களைப் போன்ற சிங்களத் தலைவர்களுக்கும் இந்தியர்களிடம் எவ்வளவு அலட்சிய புத்தியும் வெறுப்பும் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். ஆனால் இலங்கையில், இந்தியாவைப்பற்றி யாரும் உண்மையான பிரசாரம் செய்யவே இல்லை.

மேலும் சிங்களவர்களின் நேர்த்தியான குணங்களை, இந்தியர்களும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. விபீஷணனுக்கு வழங்கின பட்டத்தை, திரும்பவும் இந்தியர்கள் கேட்கமாட்டார்கள். கொடுத்தது கொடுத்ததுதான். இலங்கையை இந்தியாவுக்கு அடிமைப் படுத்த இந்தியாவில் யாருமே எண்ணம் கொள்ள மாட்டார்கள். இதுவரையிலும், இந்தியர்கள் அடிமைகளாக இருந்தது போதாதா? அவர்கள், இனி, மற்றவர்களை அடிமைப் படுத்தவும் வேண்டுமா?

இந்தியாவும் இலங்கையும் ஒன்று. இப்பொழுது மட்டுமல்ல. எப்பொழுதும். அதைப் பிரிக்க பார்க்கிறவர்கள் பாவிகள், போக்கிரிகள். எவ்வளவு பிரிக்க முயற்சி செய்தாலும், அந்த பிரயத்தனம் தாற்காலிகமாக வெற்றி பெறலாம். முடிவில், அந்த முயற்சி தோற்றே போகும்.

இந்தியாவும் இலங்கையும் ஒன்று. பாரத தேவியின் பாத கமல மல்லவா இலங்கை?

கோரக்காட்சிகள்

டான்சிக்கில் நெருப்பு மழை; டீன்ட்ஸினில் குண்டு மழை. இதாலிய அந்நிய நாட்டுமந்திரியும் ஸ்பெயின் தேசத்து சர்வாதிகாரி சேனுபதி பிராங்கோவும் கைகுலுக்கி, பிரிந்திருக்கிறார்கள். சேனுபதி பிராங்கோவுக்கு, இதாலியில் கிடைக்கப்போகும்—வருகிற செப்டம்பர் மாதத்தில் கிடைக்கப்போகும்—வரவேற்பினின்றும் இங்கிலாந்தும் பிரான்சும் கொஞ்சம் நெஞ்சு கலங்காமல் இருக்க முடியாது என்று ஒரு இதாலியப் பத்திரிகை எழுதுகிறது.

பிரான்ஸ் தேசத்தில் மிக்க பரபரப்பு. சுமார் நான்கு கோடி ஜனத்தொகையுள்ள பிரான்ஸ் தேசம், எட்டரைக்கோடி ஜனத்தொகைகொண்ட ஜர்மனியை எதிர்த்துப் போராடுவது எப்பொழுதும் சிரமம் என்பதை உணர்ந்து, பக்கபலம் தேடிக்கொள்வதற்காக, சில யுக்திகள் செய்தது. பழைய ஜர்மனியைக் கூறுபோட்டு, அதன் பக்கத்திலேயே, புதிதாக, சிறிய நாடுகளை அமைத்து, அவைகளுக்கு பொருள் உதவி செய்து, அவைகளை கைதூக்கி விட்டுக் கொண்டு வந்தது.

இங்கிலாந்தின் பிரியாநட்பை எப்படியேனும் கொள்ளவேண்டும் என்பது பிரான்ஸின் ஆசை. ருஷியாவையும் தனக்குத் துணையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பதும் பிரான்ஸின் ஆவல். புதிதாக அமைக்கப்பெற்ற போலந்து தேசத்தின் சேனையை, அரண் செய்வதற்காக, பிரான்ஸ், போலந்துக்கு எல்லாவகைகளிலும் உதவி செய்தது. இவைகள் எல்லாம் பிரான்ஸ் தேசத்தின் யுக்திகள். இந்த யுக்திகளில் எல்லாம் பலித்தன என்று சொல்லுவதற்கில்லை.

போலந்துக்கு ருஷ்யாவினிடம் கோபம். பிரான்சுக்கு ருஷ்யாவினிடம் நேசம். இந்த் முரண்களை, எப்படி இசைக்கிறது? போலந்துக்கும் பால்கன் பிரதேசத்திலுள்ள சிறிய நாடுகளில் சிலவற்றிற்கும் அவ்வளவாக நேசம் இல்லை. ருமேனியா தேசத்தில் சேர்த்துக்கொள்ளப்பட் டிருக்கும் ஒரு துண்டு பிரதேசம் தனக்குச் சொந்தமானது என்று போலந்து உள்ளம் குமுறுகிறது.

இப்படியெல்லாம், நேசமும் மாச்சரியமும் கோர்வையில்லாமல் பின்னிக்கொண்டு கிடக்கிற சமயம் பார்த்து, ஹிட்லரும் முஸ்லோனியும் தங்கள் ஆசையைப் பூர்த்திசெய்து கொள்ளப் பார்க்கிறார்கள். இதாலி அபிஸினியாவை விழுங்கினது உங்களுக்குத் தெரியும். ஹிட்லர் ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு சேர்த்துக்கொண்ட கதை பழங்கதை. முஸோலினி, அல்பேனியாவின் பேரில் ஆக்கிரமிப்புச் செய்து, அதை இதாலிக்குச் சொந்தமாக்கி விட்டார். ஹிட்லர், ஸெக்கோ ஸ்லவேக்கியாவின் பெரும்பகுதியை ஜர்மனியோடு சேர்த்துக்கொண்டு விட்டார்; இத்தனையும் பழங்கதைகள்.

கிழக்கே ஜப்பானோ, சீனவில் ஆக்கிரமிப்பு செய்து, சீனவைத் துண்டமாக்கி, உடைத்துக்கொண்டு வருகிறது. சைனவின் வடகிழக்குக் கோடியிலிருக்கும் கொரியா தேசத்தில் சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன், ஜப்பான் துவக்கிய கொள்ளை, இன்றைக்கு, சீனவின் பல பகுதிகளில், பரவி வருகின்றது. இது தர்ம தேவதைக்கு அடுக்குமா என்று வாய் வேதாந்தம் பேசுவதில் என்ன பயன்?

அநீதியை எதிர்க்க மனமில்லாமலும், தைரியம் இல்லாமலும் போனல், எத்தனை ரகமான ஆயுதங்களும் படைகளும் இருந்து லாபமென்ன? நாம் ஸெக்கோஸ்லவேக்கியாவைப் பார்த்தாகிவிட்டது. யுத்தம் நேர்ந்தால், ஜெர்மனியோடு சண்டைபோட, இருபது லட்சம் ஸெக்கோஸ்லவேக்கியத் 'துருப்பு சிப்பாய்'கள் தயாராக இருக்கிறார்கள் என்று உலகத்தின் நன்மைக்காக விளம்பரம் செய்யப்பட்டது. அந்தக் கதை என்ன ஆயிற்று?

சத்தம் போடாமல், சத்தம் கூட போட விடாமல், ஜர்மனி ஸெக்கோஸ்லவேக்கியாவின் பெரும் பகுதியை தன்னோடு சேர்த்துக்கொண்டுவிட்டது. ஸ்லவேகியாவின் ஆயுதங்களும், ஆயுத உற்பத்திச் சாலைகளும் ஜர்மனியின் வசம் போனதுதான், உலகத்தார் கண்ட காட்சிகளாகும். அப்பொழுதுதான், மகாத்மாகாந்தி மனமுருகி அஹிம்சையின் பெருமையை, உலகத்துக்கு எடுத்து ஓதினர்.

இருபது லட்சம் துருப்புகள் ஆயுதபாணிகளாக, யுத்தத்துக்குத் தயாராயிருக்கிறார்கள் என்று சொன்னது, வெறும் கட்டுக் கதையாக வல்லவா போய்விட்டது? மனிதனுக்கு சொந்தமாக, தைரியமில்லாமற்போனல், ஆயுதம் அவனுக்கு தைரியத்தைக் கொடுக்காது. மனிதனுக்கு சொந்தமாக கருணையும் தயவும் இல்லாமல் போனல், பணச் செழிப்பு ஏற்பட்டாலும், அந்த குணங்கள் அவனுக்கு உண்டாக மாட்டா.

பொம்மைகளை கோபுரம் தாங்க வேண்டுமே யொழிய, கோபுரத்தை, பொம்மைகள் தாங்க முடியுமா? தைரியசாலிக்கு ஆயுதம் தேவை இல்லை. ஆயுதம் இருந்தாலும், பரவாயில்லை. கோழைக்கு, ஆயுதம் அலங்காரமான ஆபரணமாகக்கூட இருக்காது. ஆகவே, படை திரட்டும் வேலைகளில் இறங்கியிருக்கும் உலகத்துக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

படை திரட்டுவதில் செலவாகும் பொருளைப் பார்த்து, நமது நெஞ்சம் பனதக்கிறது. மனிதன் தன்னை நாகரிகப் பிராணி என்றும் அறிவுடைய ஜந்து என்றும் சொல்லிக்கொண்டு, அகம்பாவம் அடைகிறான். படை திரட்டலில் செலவழியும் கோடிக்கணக்கான பவுன்கள், உபயோகமான செலவா? அந்த செலவு அறிவுக்குப் பொருத்தமாகுமா? இவ்வளவு பணத்தையும் ஏககாலத்தில் கடலில் விட்டெறியலாமே!

பஞ்சம், வெள்ளப்பாழ், பூகம்பத்தால் சேதம், அக்கினி மலைகளினால் நேரும் நஷ்டங்கள், நோய்களின் கொடுமை, மூடநம்பிக்கைகள், சுகக்குறைவு, தைரியக் குறைவு, நம்பிக்கைக் குறைவு, பிரியக் குறைவு—இவைகளும் இவைபோன்ற மற்ற கோரக் காட்சிகளும், உலகத்தில் நிறைந்து கிடக்கும்பொழுது, மனிதர்கள் படை திரட்டும் வேலையில் அமர்ந்திருப்பதைக் காண, நமது நெஞ்சம் பதைக்கின்றது

சென்ற யுத்தத்தில் செலவழிந்த மொத்த பணத்தைக்கொண்டு, உலகம் பூராவுக்கும் நூறு வருஷத் திட்டம் போட்டு வேலை செய்யலாம். அவ்வளவு பணமும் வீணாகப் போய்விட்டது. சுமார் ஒரு கோடி இளங்காளைகள் உயிர் நீத்திருப்பார்கள். அபூர்வமாக அமைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் பாழாகப் போயின. சில புஸ்தகசாலைகள் தீக்கு இரையாயின. ஒன்றுமறியாத குழந்தைகள், வெறிக்கு பலியாயின. என்ன பைத்தியம்!

இருபதாம் நூற்றாண்டு என்று பெருமையாகப் பேசிக்கொள்கிறார்களே! என்ன வீண் பெருமை! காந்தியின் உபதேசத்தைக் காது கொடுத்துக் கேட்கலாகாதா? மனிதன் மிருகப் பிராயத்திலேயே, ஆழ்ந்து கிடக்க வேண்டுமா? மனிதனுக்கு கலைகளில் நம்பிக்கை இல்லையா? அநியாயமாக ஆத்திரத்தையும், அவநம்பிக்கையையும் பேராசையையும் வளர்த்துக்கொண்டு, மனிதவர்க்கம், தனது அழிவுக்காக முயற்சிசெய்து வருகிறதா? அதோ! காந்தி கூப்பிடுகிறார், கேளுங்கள்.

சுபாஷின் குற்றமா?

சில நாட்களுக்குமுன் சுபாஷ் சந்திரபோஸ் பம்பாய் மதுவிலக்கு திட்டத்தைக் கண்டித்துப் பேசியது நம்மில் சிலருக்கு ஆச்சரியமாக இருந்திருந்தால், இனிமேல் அந்த ஆச்சரியம்கூட இருக்க வேண்டியதில்லை போல இருக்கிறது. அவர் போக்கைப் பற்றி அவரிடமிருந்து இனிமேல் எதை வேண்டுமானாலும் எதிர்பார்க்கலாம் என்பது அவருக்கு சர்தார் பட்டேல் அளித்திருக்கும் பதிலில் இருந்தும், அதற்கும் சுபாஷ் கொடுத்திருக்கும் பதிலிலிருந்தும் தெளிவாகத் தெரிகிறது. அவர் ஜஸ்டிஸ் கட்சியுடன் உறவுகொண்டாட பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார். (முஸ்லிம் லீக்குடன்தான் முன்னமேயே ஆரம்பித்துவிட்டாரே!) என்று வரும் ஒரு வதந்தி உண்மையா என்றுகூட திகைக்க வேண்டாம் போலிருக்கிறது அவர் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து. அவருடைய தேசபக்தியைப்பற்றி நாம் ஒன்றுமே சொல்லவில்லை. தான் செய்வது தேசத்திற்கு நல்லது என்றுதான் அவர் உண்மையாக நம்புகிறார் என்றே வைத்துக்கொள்வோம். காங்கிரஸ் வலது சாரார்களும் மந்திரி சபைகளும் நிதான புத்திகொண்டு தீவிரமாகக் காரியங்களைச் செய்ய மறுக்கிறார்கள் என்பது உண்மை என்றே வைத்துக்கொள்வோம்.

அப்பொழுதும் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் பேசும் பேச்சுகளெல்லாம் சரியாகுமா? ராஷ்டிரபதியாக இருந்துவிட்டு, ஒரு மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்துகொண்டு, அவர் இப்படி நடந்துகொள்வது, தேச முன்னேற்றத்தைக் கருதிதான் என்றாலும்கூட, குற்றமாகும். உணர்ச்சிப் பெருக்கில் தான் உதவ வந்த வேலையையே கெடுக்கிறார் என்றுதான் கொள்ள வேண்டும். தீவிர வாத புத்தியில் அவர் நாட்டின் நன்மைக்கே கெடுதல் செய்கிறார். மாஜி ராஷ்டிரபதி எதிரிகளுக்குச் சாதகமாகப் பேசுவதில் வேறென்ன உபயோகம் இருக்கக்கூடும்?

நான்கு மாதங்களுக்கு முன்னால்? பம்பாய் மதுவிலக்கிற்கு ஆசியனுப்பியவர் இன்று அதைக் கண்டிக்கிறார்; அதுவும் எப்படி? காந்திஜியிடம் மதுவிலக்கைக் கண்டித்து இரண்டு பார்ஸிகள் சமர்ப்பித்த யாதாஸ்தில் கண்ட வாசகமே, சுபாஷின் கண்டனத்தில் இருக்கிறதென்றால்? சுபாஷ் 'எடுப்பார் கைப் பிள்ளை'யாகப் போய் தன் மாஜி நண்பர்களைத் தாக்குவதை துர்ப்புத்தி என்று கூறாமல் என்ன செய்கிறது?

சுபாஷ் சந்திரபோஸுக்குத் தன் மாஜி சகாக்களிடம இருக்கும் கோபம் அவரை இவ்விதமாகவா தூண்ட வேண்டும்? முன்னணிக் கட்சியொன்றை காங்கிரஸிற்குள் ஸ்தாபிக்க முன்வந்தவர், காங்கிரஸின் மூலாதாரக் கொள்கைகளையே இப்படித் தாக்குவது எப்படிப் பொருந்தும்? தான் இன்று வெறுக்கும் நிதானப் போக்கையும், மந்திரி சபை வேலைகளையும் ராஷ்டிரபதியாக இருந்த ஒரு வருஷம் அவர் எப்படி அனுமதித்தார்? பொறுத்துக்கொண்டிருந்தார்? மறுபடியும் ராஷ்டிரபதியாகி, நடத்த முன்வந்தார்? இந்தக் குற்றச் சாட்டும் தீவிரமும் அப்பொழுது ஏன் தென்படவில்லை?

விஷயம் வெட்ட வெளிச்சமானது. சுபாஷ்போஸ் கோபம் கொண்டுவிட்டார்! தனது கட்சி காங்கிரஸில் தோற்றதால் அவர் துணிந்துவிட்டார். தனி மனித உணர்ச்சிகளை மனதில் வைத்துக் கொண்டு, காங்கிரஸை எதிர்க்கிறார்! காங்கிரஸை விட்டு வெளியேறக்கூடத் தயார் என்கிறார். மதுவிலக்கைக் கண்டிக்கிறார்; வரிகளைக் கண்டிக்கிறார்; ஜஸ்டிஸ் கட்சியுடன் இணைப்புக் கொள்ள முயற்சி செய்வதாக வரும் வதந்தி ஏன் ஏற்படாது?

சுபாஷ் சந்திரபோஸின் போக்கைக் கண்டு நாம் பரிதாபப்படுகிறோம். அகங்காரம் அவரை இப்படியா வீழ்த்த வேண்டும்? சர்தார் படேலின் அறிக்கையைக் கண்ட பிறகுதான், சுபாஷ் செய்திருக்கும் குற்றத்தின் கொடுமை பூராவும் தெரிகிறது. அதற்கும் சுபாஷ் பதிலளிக்க முயற்சி செய்திருப்பது கொஞ்சம் வேடிக்கையாகவே இருக்கிறது.

இனிமேலாவது நிதானமாகப் போகவேண்டுமென்று நாம் ஸ்ரீ போஸைக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர் தென்னிந்திய வகுப்புக் குழப்பத்துடன் கை கோர்க்கப்போகிறார் என்ற வதந்தி பொய் என்று நம்புகிறோம். முஸ்லிம் லீக்கை ஆதரித்தது போதாமல், வகுப்புவாதத்தையே உயிராகக் கொண்டிருக்கும் ஜஸ்டிஸ் கட்சி பக்கம் அவர் திரும்புவதென்றால், அது தேசத்திற்கே மகத்தான தீங்கை விளைவிக்கும் செயலாகும்.

ஸ்ரீபோஸ் இனிமேல் எடுப்பார் கைப்பிள்ளையாக இராமல் இருந்தால், அவருக்கும் நல்லது, தேசத்திற்கும் நல்லது.

பாரத தேவி பேசுகிறாள்

புருஷோத்தமன் கதை

முன்தடவை, உங்களிடம் என் சரித்திரத்தைச் சொல்லவேண்டும் என்று எனக்கு ஆசையெனச் சொன்னேன். எத்தனையோ, ஆயிர வருஷங்களாக, நான் வாழ்ந்து வருகிறபடியால், எங்கிருந்து, என் கதையை தொடங்குகிறது என்பது தான் தெரியவில்லை.

நான் ஒன்று சொல்லட்டுமா? என்னைப்பற்றி, எத்தனையோ பேர்கள் எழுதியிருக்கிறார்கள், பிரசங்கம் செய்துமிருக்கிறார்கள். என்னை வாழ்த்திப் பேசி யிருக்கிறார்கள். என்னைக் கண்டித்து, கண்டதுண்டமாக்கியும் வரைந்திருக்கிறார்கள். அவைகளில் பெரும்பான்மையை, நீங்கள் படித்திருக்கலாம்; அல்லது கேள்விப்பட்டிருக்கலாம்.

அந்த மாதிரி படித்ததையோ கேள்விப்பட்டதையோ, உங்களுக்கு சந்தேகம் இருக்கும் பகுதிகளை, எனக்குச் சொன்னால், அவைகளை, உங்களுக்கு விளக்கிச் சொல்லுகிறேன். உங்களுக்கு சந்தேகம் ஏற்படவில்லை யானால், எனக்கு எவைகள் குறிப்பிடத் தக்கவை என்று தோன்றுகிறதோ, அவைகளை உங்களுக்குச் சொல்லுவதாக உத்தேசித்திருக்கிறேன்.

இன்றைக்கு, ஒரு சம்பவத்தைப்பற்றி சொல்லப் போகிறேன். அந்தச் சம்பவம், என் மனதை, மிகவும் வேதனைப் படுத்திக்கொண்டே வந்திருக்கிறது. அதை உங்களிடம் சொன்னால்தான், எனக்கு ஆறுதல் உண்டாகும்.

சுமார் 2300 வருஷங்களுக்கு முன்னர், மாஸிடோனியா என்ற தேசத்தில், பிலிப் என்று ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கு அதி பராக்கிரமமான குழந்தை ஒருவன் பிறந்தான். அவனுக்கு அலெக்ஸாண்டர் என்று பெயர். இவன் இளம்பிராய முதற்கொண்டே, வீர்யத்தோடு விளங்கினான்.

இவனுடைய வாத்தியார், இவனுக்கு ஒருநாள் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பாடம் சரித்திரப் பாடம். ஸீஸர் என்ற ரோமாபுரி வீரனைப்பற்றி சரித்திரம். வாத்தியார் சொன்னார்:— "அலெக்ஸாண்டர்! கேள்! ஸீஸர் என்பவன் ரோமாபுரி வீரன். அவனுக்கு எந்தக் கஷ்டமும் லட்சிய மல்ல. கரைபுரண்டு ஓடும் வெள்ளக் காலத்திலும் ஆற்றில் நீந்தி அக்கரை சேர்ந்த தைரியசாலி. எதிரி எவனுக்கும் அவன் புறமுதுகு காண்பித்ததில்லை. அப்பேர்ப் பட்ட வீரன் ஸீஸர் உலகத்தையே ஜெயித்தான்."

அலெக்ஸாண்டர், மற்றப்பக்கம் திரும்பிக்கொண்டான். பாடம் வேண்டாம் என்றான். ஏன் என்று கேட்டார் வாத்தியார். "எனக்கு ஜயிப்பதற்கு பாக்கியில்லாமல், உலகத்தையே ஸீஸர் ஜயித்து விட்டான் என்று நீங்கள் சொன்ன பிறகு, எனக்குப்பாடம் எதற்காக? பள்ளிக் கூடம் எதற்காக" என்று அலெக்ஸாண்டர் துடிதுடிப்புடன் பேசினான்.

அப்பேர்பட்ட துடிதுடிப்புக் கொண்ட அலெக்ஸாண்டர் உலகத்தை ஒரு ஆட்டு ஆட்டி விட்டான். மாஸிடோனியா தேசம் எங்கிருக்கிறது; தெரியுமா? இப்பொழுது ஐரோப்பாவில், புல்கேரியா தேசம் இருக்கிறதே, அதையே, மாஸிடோனியா என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

அலெக்ஸாண்டர் காலக்கிரமத்தில், மற்ற நாடுகளின்பேரில் படை எடுத்து, துருக்கியை ஜயித்தான். எகிப்தை ஜயித்தான். பாரசீக நாட்டைக் கைப்பற்றினான். ஆப்கானிஸ்தானத்தையும் அப்படியே செய்து விட்டான். இதற்குள், அவனது சேனைக்குள் கலவரம்.

இருந்தாலும் ஹிந்துஸ்தானத்தின் பேரில் படை எடுத்து, அதைத்தன் வசமாக்கவேண்டும் என்பது அவனது பிடிவாதமான ஆசை. பாஞ்சால தேசத்துக்குள் பிரவேசம் செய்தான். சிந்து நதியைக்கண்டு பிரமித்துப்போனான். ஆற்றை எப்படி கடப்பது என்று யோசனை செய்துகொண்டிருக்கையில், அவன் வேவுகாரர்கள் அவனிடம் வந்து, "எதிர்த்த கரையில், புருஷோத்தமன் என்ற வீரன் ஒருவன், தனது படையைத்திரட்டி, தங்களை எதிர்ப்பதற்குத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறான்" என்று துப்புச் சொன்னார்கள்.

இமைப்பொழுதில், எத்தனையோ சேனைகளை முறியடித்த அலெக்ஸாண்டர், இந்தச் சேதியை லட்சியம் செய்யப்போகிறானா? ஆற்றைக் கடந்து, மன்னனோடு, கடும்போர்செய்தான். ஆற்றின் கரையோரப் பிராந்தியத்தில் ஆட்சி நடத்திவந்த புருஷோத்தமன் அஞ்சா நெஞ்சு படைத்தவன்.

அவன் அலெக்ஸாண்டரின் சேனையைக்கண்டு அஞ்சவில்லை. முன்னேறிப் போர் புரிந்தான். கலக்கம் அடைந்த தன் சேனைக்கு ஊக்கம் கொடுத்து, உற்சாகம் அளித்து, காலனைப்போல, கடும்போர் புரிந்தான். ஆனால், அவனுடைய சேனையோ, சின்னஞ்சிறிய சேனை எவ்வளவு காலம் "தாக்கு" பிடிக்கும்? புருஷோத்தமன் சேனை தோற்றுப் போய் விட்டது.

ஆனால், அலெக்ஸாண்டர், புருஷோத்தமனுடைய வீரத்தைக்கண்டு வியந்து போனான். புருஷோத்தமனை தனது அருகில் அழைத்து, "ஏ! மகா வீரா! நினது தீரத்தைக் கண்டு, மகிழ்ச்சி அடைந்தேன். என்னை எதிர்த்து நின்று போர் புரிந்தவர்களுள், நீதான் உயர்ந்த வீரன். உனது வீரத்தனத்துக்காக, நீ என்னிடம் "அடி பணியும்" அடையாளமாகக் கொடுத்த, உனது வாளை, உனக்குத் திருப்பித் தருகிறேன்" என்றான் அலெக்ஸாண்டர்.

புருஷோத்தமன், தனது "தோற்ற வாளை" திருப்பி வாங்கிக் கொண்டான். இது என் சரித்திரத்தில் துக்கமான சம்பவம் என்று நான் நினைக்கிறேன். கடல் போல நின்ற அலெக்ஸாண்டரின் சேனையை, புருஷோத்தமன் ஆண் மகனாக எதிர்த்தது மிகவும் போற்றத் தக்கதாகும். ஆனால், அவன் அலெக்ஸாண்டரிடம் அடிபணிந்திருக்கலாகாது.

அப்படித்தான், அடிபணிந்தானே, தனது "தோற்ற வாளை" திரும்பவும் அலெக்ஸாண்டரிடமிருந்து சன்மானமாகப் பெற்றுக் கொள்ளவாவது? யுத்த சாஸ்திரத்திலே, சில நியதிகள் இருக்கின்றன. சில இலட்சியங்கள் இருக்கின்றன. தருமத்தைக் காப்பாற்றுவது முக்கியமான இலட்சியம். மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதும் எதிரியின் மானத்தைக் காப்பாற்றிக்கொடுக்கவேண்டியதும் மற்றொரு இலட்சியமாகும்.

வெற்றி பெற்றவனிடமிருந்து சன்மானம் வாங்கிக்கொள்ளுவது தவறாகும். அப்படி வாங்கிக்கொண்டால், அது மானத்தைப் பறிகொடுக்கிற நிகழ்ச்சியாகும். புருஷோத்தமன் நிர்ப்பயமாய் சண்டை செய்தது புகழ்ச்சிக்குரியது. ஆனால், அவன், யோசனையின்றி, தன்னைத் தோற்கடித்த அலெக்ஸாண்டரிடமிருந்து 'வாள்' சன்மானம் பெற்றது தவறு. அந்தச் சம்பவத்திலிருந்து, நான் ஒருவாறு வீழ்ச்சி அடைந்தேன்.

அழகு என்பது என்ன ?

நிறம் அழகா? உருவம் அழகா? நிறபேதங்களால் ஏற்படும் காட்சி அழகா? தேகத்தின் ஆரோக்கியத்தால் அழகு உண்டாகின்றதா? அறிவுப் பிரகாசத்தினுல், ஆனந்தமும், ஆனந்தத்தால், அழகும் தோன்றுகிறதா? அழகு என்பதுதான் என்ன?

உலகத்தில் சில விஷயங்களை வர்ணிக்கலாம், நிர்ணயிக்க முடியாது. உணரலாம், சொல்லமுடியாது. மகிழ்ச்சி அடையலாம், கட்சிபேச முடியாது. ஆராய்ச்சிசெய்யலாம், முடிவு சொல்ல முடியாது. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் அழகு என்பது ஒன்று.

உபநிஷதத்திலே, அபூர்வமான ஒரு ஆராய்ச்சி இடம் இருக்கிறது. கடவுள் என்பது என்ன, யார் என்று ஒரு கேள்வி. அதற்கு சமாதானம் சொல்லும்பொழுது, பல வியாக்கியானங்களும் லட்சணங்களும் வெளித்தோன்றுகின்றன. இதுதான் கடவுள் என்று ஒருவர் நிர்ணயம் செய்யப் பார்க்கிறுர். "அது இல்லை" என்கிறுர் மற்றவர்.

ஏன், அது இல்லை என்று மற்றவர் சொல்லவேண்டும்? பாஷையின் கட்டுக்கடங்கினவரா கடவுள் என்று மற்றவர்சொல்லி, "அது இல்லை; அப்புறம்" என்று மேலே, வாதத்தையும் வியாக்கியானத்தையும் தள்ளிசகொண்டு போனுர். இதற்கு "நேதி" (அது இல்லை) என்ற வாதம் என்று பெயர்.

கற்பனையால் அனுபவிக்கக்கூடிய பொருள்களை, பாஷையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது. வாசனை என்பது எப்படி இருக்கும் என்றுல் மனதுக்கு ரம்யமாயிருக்கும் என்று சொல்லலாம். அதைப்பற்றி, விதரணையாக வர்ணனை செய்துகொண்டே போகலாம். ஆனுல், குறிப்பிட்டு, இந்தக் கோடுகளுக்குள் அவைகள் இருக்கின்றன என்று அடைத்துக்காட்ட முடியாது.

அழகு என்பதும் அதைப்போலத்தான். அழிவது அழகல்ல. அருவருப்பைத்தருவது அழகல்ல. துக்கத்தைத்தருவது அழகல்ல. மயக்கத்தைத்தருவது அழகல்ல. மாற்சரியத்தை உண்டாக்குவது அழகல்ல. இப்படியே, அழகல்ல, அழகல்ல என்பதை அடுக்கிக் கொண்டே போனுல், அழகு என்ன என்பதில் தடுக்கி விழலாமோ, என்னவோ?

பெற்றோர்களின் பள்ளி

குழந்தைகள் பார்வதியும் பரமசிவனும், தங்கள் தகப்பனர் ஆபீசிலிருந்து வருவதைப் பார்த்துக்கொண்டு, ஆவலுடன் இருந்தார்கள். ஆனல், கணபதியோ, இன்னும் வரவில்லை. ஆகவே, குழந்தைகள் தங்களுக்குள் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

“ஏ! பரமசிவம்! நீ அன்னிக்கு, அப்பாகிட்ட அழகாப் பேசல்லே. அப்பா என்றல் மார்க்கெட்டிலே கிடைக்கிற கீரை என்று நினைத்தாயா” என்று பார்வதி கோபத்தோடு கேட்டாள்.

“ஏ! பார்வதி! உனக்கு கோபம் வந்தால், எனக்கும் வராது என்று நினச்சுக்காதே! பொம்மனட்டிக்கு கண்ணிலே தண்ணி காத்துண்டிருக்கும். ஆம்பிளேக்கு மூக்கிலே, கோபம் தயாராயிருக்கும். ஆமாம்! அதைத் தெரிஞ்சுக்கோ” என்று பரமசிவன் அட்டகாசம் செய்தான்.

இதற்குள், தாயார் காமாட்சி அம்மாள் அங்கே வந்துவிட்டாள். “என்ன சண்டை போட்டுக்கொள்ளுகிறீர்கள்” என்று நய பயம் இரண்டும் கலந்த குரலில், குழந்தைகளைக் கேட்டாள்.

இந்த வேடிக்கை உங்களுக்குத் தெரியுமோ? தாயின் குரலிலே, தகப்பன் குரலிலேதான், அன்பும் அதிகாரமும் (இரண்டும் வெவ்வேறு உணர்ச்சிகள்!) சேர்ந்து, விநோதமாகத் தொனிக்கும் அதிசயத்தைப் பார்க்க முடியும்.

காமாட்சி அம்மாள் கேட்டதும், பரமசிவன்தான் முதலில் பேச ஆரம்பித்தான். “என்ன அம்மா! அன்னிக்கு நான் அப்பாவை வசேனமே! அப்பா மாத்திரம் உன்னை வையலாமோ? அப்பா உன்னை வசது, இங்கப் பித்துக்குள்ளிக்குத் தெரியல்லே” என்று பரமசிவன் சிறிய பிரசங்கமொன்று செய்தான்.

“உங்க அப்பாவுக்கு, எழரைநாட்டுச் சனி பிடித்திருக்கிறது. அவருக்கு புத்தி தடுமாறி இருக்கு. யாரோ ஒரு காந்தி சிஷ்யனும், அவன் பேச்சைக் கேட்டுண்டு, இவர் கூத்தாடறத்தை பாரேன். காந்தியோடு சேர்ந்தா, அப்புறம், இந்த உலகத்து சங்கதி ஒன்றும்

வேண்டாம். முக்திக்கு வழியைத் தேடிக்க வேண்டியதுதான்" என்று பரிதாபத்துடன், கொஞ்சம் வருத்தம் கலந்து பேசினுள் காமாட்சி அம்மாள்.

கணபதி, இந்த சமயத்தில் வராமல் இருக்கமுடியுமா? அவர் வந்து சேர்ந்தார்.

"சபை கூடியாகிவிட்டது போலத் தோன்றுகிறது. அதற்கு நான்தான் பாக்கியோ" என்று சிரித்துக்கொண்டு கேட்டார். வரண்டு கிடக்கும் பூமியில் மழை பெய்தால், எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! கணபதியின் சிரிப்பு, அந்த மழையைப் போலிருந்தது என்று சொன்னுல், நிறைப் பொருத்தம் என்று சொல்லிவிடலாம்.

"ஆபீசிலிருந்து வருகிறபொழுது, முகத்தை சுண்டைக்காய், கடுகு மாதிரி தினம் வைத்துக்கொண்டு வருவீர்களே, இன்னிக்கு, முகம் பிரசன்னமா யிருக்கிறதே! நல்லவேளை" என்றுள் காமாட்சி அம்மாள். இதைக்கேட்டதும், கணபதி, கடகட வென்று சிரித்தார். "கடுகு என்று மட்டும் சொன்னுயே! கடுவம்பூனை என்று சொல்லலியே என்று எனக்கு சந்தோஷம்" என்று சொல்லிக்கொண்டே கணபதி சிரித்தார்.

குழந்தைகள், காமாட்சி அம்மாள் உள்பட, எல்லோரும் சிரித்தார்கள். "அப்பா! நேத்திக்கு, யாரோ காந்தி சிஷ்யன் எதையோ சொன்னர் என்று சொன்னகளே! அதைச் சொல்லுங்கோ, அப்பா. கேக்கிறதுக்கு, ரொம்ப ஆசையாயிருக்கு அப்பா" என்றுள் பார்வதி.

"எனக்கு வேண்டாம் காந்தி கதை, அவர் சிஷ்யர் கதை! கடலைக் கொட்டையை சாப்பிட்டு, தண்ணியைக் குடித்தா, உடம்பு கெட்டியாயிருக்கும் இன்னு காந்தி சொல்றுரே, அப்பா, அந்தமாதிரி நீங்க செய்கிறதுதானே" என்று பரமசிவன் குறும்பாகக் கேட்டான்.

கணபதியின் முகத்தில், இப்பொழுது சிரிப்பைக் காணேம். முகம் வாட்டமடைந்துவிட்டது. அவருடைய முகத்தை, வருத்தம், சாசுவதமாக வாடகைக்கு வாங்கினதுபோல ஆகிவிட்டது.

"பரமசிவம்! காந்தியை அந்தமாதிரி பேசலாமோ? அவர் மகான் இல்லையோ? அவர் அவதார புருஷன், அப்பா! அந்த மாதிரி, பெரியவாளைப்பத்தி, மரியாதை இல்லாமல் பேசலாமோ" என்றுர் கணபதி.

"மகான் என்றுல் கடலைக் கொட்டை சாப்பிடச் சொல்லி யிருக்கோ! நல்ல, பாதம் ஹல்லவாவைச் சாப்பிடுகிறதுதானே? சாப் பிடணும் இன்னு சொல்றதுதானே? அப்பா! காந்திக்கு, கிரிக்கெட் பிடிக்காது, சினிமா பிடிக்காது, சங்கீதம் பிடிக்காது, அபிநயம் பிடிக்காது, நல்ல 'நைஸ்' வேஷ்டியாப் பிடிக்காது. முரட்டுத் துணியைக் கட்டிக்கோ! கடலைக் கொட்டையை தின்னு! கையிலே தலையை வச்சிண்டு தரையிலே படுத்துக்கோ! இப்படிச் சொல்லற

திக்குத்தான் காந்திக்குத் தெரியும். அவர் சொல்றுருன்னு, நீங்கள் எங்களை கோவிச்சுக்கறேளே!" என்றான் பரமசிவன்.

"பரமசிவம்! உன் நாக்கு அழுகிப்போகும். பெரியவாளைப் பார்த்து, கேவலமாகப் பேசாதே! சிரிச்சுண்டு அழகாயிருந்த அப்பா முகத்தை, ஒரு நிமிஷத்திலே, அசடு மாதிரி பேசி, மாத்திப்பிட்டாயே! உன் பேச்சுக்கு, ஒரு மெடல் பண்ணி போட்டாக்கூட தேவலேடாப்பா! நீ, எதித்தாத்து பாலு, பக்கத்து வீட்டு வீரு, கோடியாத்து சாமு—இவங்களோடே, கழுத்தைக்கட்டிண்டு பொளாரயோன்னே! அவங்க பேச்சுத்தான் உனக்கு வரும்" என்றாள் பார்வதி.

கணபதிக்கு மீண்டும் முகம் பிரசன்னமாயிற்று. பரமசிவன், மெள்ள தகப்பனாரின் தொடையண்டை போய், ஒட்டிக்கொண்டான். கணபதி, பரமசிவத்தைத தடவிக்கொடுத்து, "இப்போ, நீ விளையாட்டுக்கு, விகடத்துக்கு சொன்னேன்னு பார்வதிக்குத் தெரியவில்லை. விளையாட்டுச்சுக்கூட, பெரியவாளைப்பத்தி, மரியாதைக் குறைவாய்ப் பேசப்படாது" என்றார்.

"அவர் ஏதோ, நேத்திக்கு சொன்னார் இன்னு சொன்னீர்களே! அவர் என்ன சொன்னார்? நம்மாத்து குழந்தைகளைப்பத்தியா? நம்பளைப்பத்தியா? பொதுவா, லோகத்தைப்பத்தியா? சொல்லுங்க, கேப்போம்" என்றாள் காமாட்சி அம்மாள்.

கணபதி :—நான் சொல்லத்தான் வந்தேன். அதற்குள்ளே, நம்ம பரமசிவம் விகடம் பண்ணிட்டான்.

பரமசிவம் :—நான் விகடம் பண்ணலே அப்பா! ஹல்வாவைப் பார்க்கிலும் கடலைக்கொட்டை ஒசத்தி இன்னு காந்தி சொல்றதை, நான் ஒப்புக்கமாட்டேன்.

கணபதி :—நீ காந்தியை விடப் பெரிய மகான். பெரியவாள்! உங்களுக்கு இப்போ, எத்தனை வயசாகிறது?

பரமசிவம் :—பதினொன்னு.

கணபதி :—காந்திக்கு ஐம்பதிலே தெரியாதது எல்லாம், உனக்கு அஞ்சிலே தெரிஞ்சுபோச்சு போலிருக்கு. காந்தி இந்தப் பக்கம் வரபோது, உங்கிட்ட மிச்சத்தையும் கத்துக்கச் சொல்றேன்.

பரமசிவம் :—என்ன கேலி செய்கிறக, அப்பா! கடலைக்கொட்டை காந்தி எனக்கு பிடிக்கல்லே. நிறைய, ஹல்வா சாப்பிடணும் இன்னு, காந்தி ஏன் சொல்லப்படாது?

காமாட்சி :—ஆமாம்! உங்கிட்டத்தான், காந்தி எல்லாத்தையும் கேட்டுக்கணும். ஏன்னு! ஒருத்தரும் கலியாணம் செய்து கொள்ளப்படாது இன்னு காந்தி சொல்றாமே!

கணபதி :—பரமசிவத்தைக் காட்டிலும் குழந்தையாய், நீ ஆய்ட்டயா? அவன்தான் குழந்தை, கண்டதை யெல்லாம் சொல்றான். நீகூட அப்படித்தான் பேசணுமா? இதைத்தான் அந்த நண்பர் சொன்னார்.

காமாட்சி :—அவர் சொன்னார், அவர் சொன்னார் இன்னு சொல்லிக் கொண்டே இருங்கோ! அவர் என்ன சொன்னார் இன்னு சொல்லிப்பிடாதேயுங்கோ. சிதம்பர ரகசியம் "குட்டு வெளி யாயிடப் போறது!"

பார்வதி :—அப்பா! இவா சொல்றதை யெல்லாம் கவனிக்காதேயுங் கள். பரமசிவன் குரங்கு. அம்மாவுக்கு, அப்பாவை கோவிச் சுக்கிறதுக்குத்தான் தெரியும். பரமசிவக்குரங்குக்கு வால்தான் இல்லே!

பரமசிவம் :—எனக்கு வால் இல்லேங்கறது, உனக்குத் தெரியுமோ?

கணபதி :—அப்பா! பரமசிவம்! இந்தத் தெருவிலே, உன்னோடு படிக்கிற பையன்கள் எத்தனை பேர் இருக்கா?

பரமசிவம் :—ஒருத்தரும் இல்லே!

பார்வதி :—அப்பா! இன்னொன்று கேளுங்கோ! அவனோடு, பம்பரம் விடறவா எத்தனைபேர் இருக்கா? சினிமாப்போறவா எத்தனை பேர்! போறவா வரவா பேரிலே எச்சல் துப்பற சினேகிதாள் எத்தனை பேர்! சண்டைக்கிழுக்கிற தோழாள் எத்தனை பேர்! அதைக்கேளுங்க! அவுங்க் ஒரு பட்டாளம்! அப்பா!

கணபதி:—இப்படியெல்லாம், பரமசிவம்! நீ செய்துகொண்டிருக்கி றாயா? ஏ! அழகான ஆத்துக்காரீ! இதையெல்லாம் பார்த் துக்கொண்டு, நீ சந்தோஷமா, வீட்டிலே இருக்கபோ! நான் ஆபீசுக்குப் போவேனா? இவங்களை காவல் காத்துண்டிருப் பேனா?

காமாட்சி:—நான் வீட்டைவிட்டு வெளியேபோக முடியுமோ? பார்வதி மாத்திரம் ரொம்ப நல்லவ மாதிரி பேசிட்டாளே! அவள், வீட்டிலே இருந்தபடியே, என்னை "நமநம" இன்னு பிடுங்கி எடுத்துடரா! நாடா கொடு! ஊசி கொடு! பிரப்புபின்னனு மாம்! ஹார்மோனியம் வேணுமாம்! இதெல்லாம் ஸர்க்கார் கஜானாவைத் திறந்து விட்டால்தான் வாங்கலாம்.

கணபதி:—நீங்க சொல்றதைப்பார்த்தா, நம்ம வீடே கலேகிழா நடக்கிராட்பலேன்னு தெரியறது. அம்மாவுக்கு பொறுப்பில்லே; குழந்தைகளுக்கு தோழர்களும் தோழிகளும் வெளியிலே! நான் வீட்டில் இல்லே! நான் சம்பாதிக்கணும். அம்மா சமைத்துப் போடணும். நீங்கள், எங்களுக்குத் தெரியாமல் எதை எதையோ கத்துக்கணும்! பேஷ்! இதையெல்லாம்தான் அவர் சொன்னார்.

காமாட்சி:—அதைமாத்திரம் வெளியே விட்டுவிடவேண்டாம்.

பரமசிவன்:—அப்பா! உங்களுக்கு எம்பேரிலே வருத்தமோ!

கணபதி:—இல்லேடா கண்ணு!

பார்வதி:—என்பேரிலே வருத்தமோ!

கணபதி: —உம்பேரிலும் இல்லே அம்மா! உங்களை பெத்து வளக்கிற உங்க அம்மா, அப்பா இரண்டுபேர் பேரிலும் எனக்கு வருத்தம்.

காமதேனு தாசன்—எடிஸன்

(வே. ம.)

18690

பிரகிருதிதான் காமதேனு. பிரகிருதி பிர்மாண்டமான பசு. அதன் மடியில் ஆயிரக்கணக்கான முலைக்காம்புகள் உண்டு. வேண்டியதை நாம் கறந்து கொள்ளலாம். நமக்கு மாத்திரம் கறக்கத்தெரிந்தால் போதும்.

இப்படிக் காமதேனுவைக் கறக்கத் தெரிந்தவர்களில், எடிஸன் ஒரு மஹா-மஹான்.

எடிஸனுடைய சரித்திரம் திவ்யமானது; தேஜோமயமானது. அவருடைய கதையை காலட்சேப ரூபமாக இந்தியா முழுதும் பிரசாரம் செய்தாலும் பொருந்தும். அந்த வாழ்க்கையின் வாஸனையை இந்தியாவில் வீசவேண்டியது தற்போது மிகவும் அவசியம்.

பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் தேசீய திட்டக் கமிட்டி வேலைசெய்து வருகிறது. அதன் நடவடிக்கைகளை நாம் ஊக்கத்துடன் கவனித்து வரவேண்டும். அந்த விஷயத்தில் நமக்கு உத்ஸாஹமும் கூர்மையும் ஏற்படுவதற்கு, எடிஸனது சரித்திரத்தின் வாஸனை மிகவும் உபயோகமாக இருக்கும்.

அவர் 1847-ம் வருஷத்தில் பிறந்தார், 1932-இல் இறந்தார். அவருடைய 77 வயதில் ஒரு நண்பர் "உமது கொள்கையென்ன ?" என்று கேட்டதற்கு அவர் பின்வரும் பதிலைச் சொன்னார் :—

"ஒரு அகண்டமான எல்லையற்ற புத்தியானது உலகத்தை ஆண்டு வருகிறது. வேலைசெய்ய வேண்டியதுதான் நமது கடமை. பிருகிருதியின் இரஹஸ்யங்களைக் கண்டு பிடிக்கவேண்டும்; சமூகத்தின் சௌக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும் அவைகளை உபயோகிக்கவேண்டும். உலகமே எனது தேசம். மனிதவர்க்கமே எனது குடும்பம்.

டிஸன் அற்புதங்களுக்கு அதிபதி. டைப் - ரைடர், தந்தி, கம்பியில்லாத் தந்தி, மின்சாரம் கிராமபோன், ஸிமெண்டு, ஸினிமா, ரேடியோ - இவ்வளவிற்கும் ஆதார புருஷர் நாம் சொல்லிய எடிஸன்.

தரித்திரத்தைப் போக்குவதில் ராஜ தந்திரிகளும் சீர்திருத்தக் காரர்களும் செய்திருப்பதைக் காட்டிலும், எடிஸன் அதிகமாகச் செய்திருக்கிறார்.

மிகுந்த சாமர்த்தியத்தை எடிஸன் ஒரு அருளாகக்கொண்டாடவில்லை. "100 இல் 1 பங்கு தான் அருள். 100 இல் 99 பங்கு

வியர்வை" என்பது எடிஸனுடைய அபிப்பிராயம்.

எடிஸனுடைய நித்திரை விசேஷமானது. "வா" வென்று இவர் அழைத்த மாத்திரத்தில் தூக்கம் வந்து விடும். இவர் தூங்கும்போது வேறு ஒன்றுமே செய்யமாட்டார். கனவுகள் காண மாட்டார். சம்பூரண நித்திரை தான். நிறைந்த ஓய்வை திரட்டிக்கொண்டு விடுவார். ஆயினும் எவ்வளவு நேரம் இவர் நித்திரை செய்வார்? இவர் தந்தியாபீசில் தந்தியடிக்கும் வேலையில் இருந்த போது - இரவு முழுதும் ஆபீசு வேலை, பகலில் படிப்பு - அத்துடன் ஆராய்ச்சி வேலை—இவ்வளவும் செய்தார். போஸ்டன் நகரில் இருந்தபோது 18 முதல் 20 மணி நேரம்வரைக்கும் தினசரி வேலைசெய்வார்.

நீவார்க்கில் ஒவ்வொரு நாளும் 3, 4, தடவை நித்திரை செய்வார்; ஒவ்வொரு தடவையும் அரை மணிநேரம் தான்; அதாவது ஒரு தினத்தில் மொத்தம் ஒன்றரை அல்லது இரண்டுமணி நேரம்தான் தூங்குவார். மேன்லோவிற்கு வந்த பிற்பாடு வேலைச்சாலையை விட்டுப்போவதற்கு குறிப்பான நேரமே கிடையாது. 1888-ம்வருஷத்தில் (அப்போது 41 வயது) கிராமபோனில் ஒரு புதிய அம்சத்தைக் கண்டு பிடிப்பதில் அவர் ஈடுபட்டிருந்த போது இரவு பகலாய், ஐந்து நாட்கள், அதாவது 120 மணி நேரம் சேர்ந்தாற்போல் தூக்கமே யில்லாமல் வேலை செய்தார். அவருடைய 73-வயதில் ஒரு தடவை விடியற்காலை ஐந்தரை மணி வரைக்கும் வேலை செய்து விட்டு தூங்கப்போனார். 7 மணிக்கு எழுந்துவிட்டார். "உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்கள். அவர் "அரைமணி அதிகமாகவே தூங்கிவிட்டேன். இல்லையேல், இன்னும் ஜோராக இருக்கும்" என்றார்.

புத்தகசாலையிலேயே ஒரு கட்டில் போட்டிருக்கும். அதில் வலது கன்னத்தில் கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு, சற்று நேரம் நித்திரை கொள்ளுவார். அவர் நித்திரையிலிருக்கும் போது, அவரை எழுப்புவது அசாத்தியமான காரியம். 'படுக்கை பெரிய விரோதி' என்பார். மனித வர்க்கத்தில் அனுவசியத் தூக்கம் அதிகம் — என்பது அவருடைய கொள்கை. தூக்கம் குறைந்ததால் யாதொரு நஷ்டமுமில்லை, என்பது அவருடைய திடமான நம்பிக்கை.

அரும்பாடுபட்டுத்தான், அவர் பல அதிசயங்களையும் கண்டுபிடித்தார். திடீரென மின்னல்போல் அவருக்கு ஒன்றும் உதயமாகி விடவில்லை. அல்லது விவேகமில்லாமல் உபயோகமற்ற பாடுகளும் அவர் படவில்லை. உள்ள சாஸ்திரப் புத்தகங்கள் எல்லாவற்றையும் அவர் முதலில் பூரணமாகப் படித்து விடுவார். பின்பு, குறிப்புகள் போட்டு, சிஷ்யர்களைப் பரிசோதிக்கச் செய்திடுவார். பரீட்சைசாலை நோட்டுப் புத்தகங்களில் குறிப்புகள் எழுதப்படும். அவைகளிலிருந்து விஷயங்களைத் தெளிவு படுத்திக்கொண்டு பழைய சங்கடங்களைப் போக்கி, புதிய

சங்கடங்களை நீக்குவதற்கு வழி தேடுவார்.

மின்சார விளக்கை அமைப்பதற்கு எவ்வளவு ஆராய்ச்சிகள் செய்தார்?

மின்சார வெளிச்சம் தங்குகிறதே — அந்த நூலைக் கண்டு பிடிப்பதற்காக, பல மண்களைப் பரிசோதித்தார்; அநேகம் உலோகங்களைப் பரீட்சித்தார். இந்த வகையில் 1600 பரீட்சைகள் நடந்தன! மூங்கில் வகைகள், இதரச் செடி வகைகள் — இவைகளில் 6000 பரீட்சைகளைச் செய்தார்! மின்சார பேட்டரியை உண்டாக்கி, அதில் மின்சார சக்தியைத் திரட்டிவைக்க வேண்டுமல்லவா - அதற்கு 50,000 தனித் தனிப் பரிசோதனைகளைச் செய்தார்!

எடிஸனுடைய மார்க்கம் என்ன?

1. மனித வர்க்கம் ஏற்கனவே கண்டுபிடித்திருப்பதை அறிந்து கொண்டுவிட வேண்டும்.

2. கூர்மையான ஆராய்ச்சி செய்திட வேண்டும்.

3. பிடிவாதமான, திடமான பாடுபட வேண்டும்.

4. கடைசியாக, அருள் மோப்பம்.

எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும்,—இதற்குச் சாதக அம்சங்கள் என்ன, பாதக அம்சங்கள் என்ன, என்பதெல்லாம் இவருடைய மனதில் — தாமரைக் குளத்தில் மலர்கள் மிதப்பன போல்—மிதந்துகொண்டிருக்கும். ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டிய காலத்தில் இவை ஒரே மூச்சில் தங்கள் தங்கள் ஸ்தானத்தில் தயாராக வந்து நின்றுவிடும். இவர் யுக்திப்படி அமைக்கலாம், சமைக்கலாம்.

இவருடைய பராக்கிரமங்களில் ஒன்று. இவருடைய காலத்திற்கு முந்தி, டைனமோ வென்றால் வெள்ளை யானைக்கு ஒப்பிடக்கூடியதாக இருந்துவந்தது. உற்பத்தியாகும் சக்தியில், டைனமோவே 100-க்கு 90-ஐச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

ஒரு இராஜாங்கத்தில், வசூலிக்கப்படும் தொகையில் 100-க்கு 90-ஐ வசூலிப்பவனே சாப்பிட்டால் எப்படியோ — அதுமாதிரிதான் எடிஸனுக்கு முந்திய டைனமோ இருந்தது. எடிஸன் பிரயாசைப்பட்டு, இந்த நிலைமையைத் தலைகிழாகக் கவிழ்த்து, 100-க்கு 90 காரியத்திற்கு உதவும்படி புதிய டைனமோவைத் தயாரித்தார்.

இதுபோன்ற பல பராக்கிரமங்களால், அவர் உலகத்திற்கே புதிய தோற்றத்தைக் கொடுத்தார். கடவுள் ஓய்ந்துபோய் விடவில்லை. கடவுளின் அனுக்கிரஹமாகிய ஜீவரஸமும், அறிவு ரஸமும் இன்றைக்கும் உலகில் நடமாடுகிறது, நடமாட முடியும் என்பதை எடிஸன் ஸ்தாபித்தார்.

எல்லோரும் எடிஸனாகி விடலாம், என்று அர்த்தமில்லை. ஆயினும் எடிஸனுடைய மார்க்கத்தை யாவரும் பாடுபட்டு அனுசரிக்கலாம். ஏகாக்கிர சித்தமும் அறிவும் சேர்ந்து எவ்வளவோ செய்ய முடியும் — என்பதை அவர் நிரூபித்துவிட்டார்.

எடிஸன் 5 அடி ஒன்பதரை அங்குலம் உயரம். அவருடைய முகம் விசாலமானது; சாந்தம் நிரம்பியது; கள்ளம் கபடற்றது; சிநேக மயமானது; திடமானது. சிறந்த வைரத்தில் நீரோட்ட மிருப்பதுபோல், அவருடைய கண்களில் அசாதாரணமான நீரோட்டம் இருந்தது. அவருடைய மோவாய் உறுதியானது. அவருடைய வாய் பெரியது, நேர்த்தியாக அமைக்கப்பெற்றது; உணர்ச்சியுடன் கூடியது. அவருடைய மூக்கு ஓங்கிநின்றது. செவிகள் தாராளமானவை. ஆனால் உள்ளடங்கி யிருந்தன. அவருடைய சிரசானது ஒரு வில்-மண்டபம் போல் எழுந்தது. அவருடைய கேசவரிசை அநேக சுருள்களாய் சுருண்டிருந்தது. வலது பக்கத்தில் வகிடு. கட்டுக் கடங்காமல், எப்போதும் ஒன்றிரண்டு சுருள், அவருடைய விசாலமான நெற்றியின் இடது பக்கத்தில் புரண்டு ஆடிக்கொண்டிருக்கும். இந்த முக விலாஸத்தில் கற்பனு சக்தியும் காரிய சக்தியும் சந்தித்து இணைப்புக்கொண்டிருந்தன.

பரிசோதனையில் ஈடுபட்டபோதெல்லாம், கவனமாய்த் தலையை சாய்த்துக்கொண்டிருப்பார். கையெல்லாம் திராவகங்களால் அழுக்கடைந்திருக்கும். அவருடைய உடுப்புகள் ஜாக்கிரதையாகத் தயாரிக்கப்பட்டவைகளல்ல. பார்த்தால் ஒரு கைவினைஞனைவும் இரவில் அச்சடிப்பவன் போலவும் தென்படுவார்.

எடிஸன் ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, ஒருவர் அவரை அழைத்திட்டால், எங்கேயோ வெகு தூரம் சென்றிருந்தது போல, அவருடைய கவனமானது சாவகாசமாகத் திரும்பி வரும். ஆனால் கவனம் திரும்பி வரும்போது, பூரணமாகவும் மனப்பூர்வமாகவும் வந்து சேரும். உடனே கள்ளம் கபடற்ற பரிசுத்தமான அந்த முகமானது, பார்ப்பவரை வசப்படுத்திவிடும்.

எடிஸனுடைய சரீரமானது தாங்குவதற்கும் உழைப்பிற்கும் கட்டப்பெற்றது. நாற்பதாவது வயதில் அதன் இடை 175 பவுண்டு. அதுமுதல் 25 வருஷங்களுக்கு அதே கனம்தான். 40-ம் வயதில் அவர் தரித்திருந்த பழய உடுப்பேதான்—அந்த 25 வருஷங்களுக்கும் தையற்காரனிடம் போய் அளவு கொடுத்துவிட்டு வரும். மீறிய சதை சரீரத்தில் கிடையாது.

அவருடைய பெரிய வாயிலிருந்து விஸ்தாரமான சிரிப்பு அடிக்கடி வரும். அந்த சிரிப்பில் கவலை யென்பது கொஞ்சமும் தென்படாது; அது கவர்ச்சியுடன் கூடியது. அத்துடன் பார்ப்போரின் சுறுசுறுப்புகளை கிளப்பக் கூடிய சிரிப்பு அது.

அவருடைய கைகள் ஊன்றி கவனிக்கத்தகுந்த கைகள். கனமாக சதையால் போற்றப்பட்ட கைகளல்ல. நீண்ட கைகள்—புறங்கைகள் பள்ளம்—கனவு காண்பவனுக்கு, தீர்க்கதரிசிக்கு உரித்தான கைகள்.

விரல்கள் பத்தும் கற்பனையுடன் துடிக்கும் விரல்கள். இவருடைய கைகளை மாத்திரம் படித்தால், இவர், ஒரு அகண்டமான

சூக்ஷ்மமான கற்பனை உலகிலேயே மூழ்கிக்கிடப்பவர் என்று தோன்றும்.

ஆனால் அவருடைய சமசதுரமான கெட்டியான கடைவாய்களின் அமைப்பையும், மண்டையின் பின்பாகத்தின் ஆழத்தையும்அகலத்தையும், வில்-மண்டபம் போன்ற தலையையும் கவனிக்கும் போது—இந்த மனுஷ்யனுடைய எல்லையற்ற போர்புரியும் தன்மையும் எந்த இடைஞ்சல் களுக்கும் அஞ்சாது, தனது சிறந்து ஜ்வலிக்கும் கற்பனைகளின் கடுமையான நுனிவரைக்கும் தீரமாகச் செல்லும் பிடிவாதமும், நன்குப் பிரகாசித்திடும்.

சோம்பல் வேலை யென்பதை எடிஸன் அறிய மாட்டார். வேலையொழிந்தகாலம் என்பது அபூர்வ சம்பவம். ஒரு வேலையிலிருந்து இன்னும் ஓர் வேலையைச் செய்வதுதான், அவருக்கு சிரமபரிஹாரம். சிக்கிப்போன பாலைக்கண்டு, அவர் சிந்தை கொள்வதில்லை. அவருடைய வேலையும் வாழ்வும் எப்போதும் நிதானத்துடனேயே கூடியிருந்தது. எடிஸனை சோம்பலில் கண்டவர் உலகில்யாருமில்லை. எடிஸனை அவசரத்தில் கண்டவர் உலகில் யாருமில்லை. உடைபடாத ஏகாக்கிர சித்தம்—எல்லையற்ற பொருமை.

70-வயதில் வேலையைவிட்டு விலகுபவர், மூன்று வருஷங்களில் மரணத்தை எதிர்பார்க்கலாம்— என்பது எடிஸனுடைய அபிப்பிராயம்.

எடிஸனுடைய 75 - ஆவது பிறந்த நாளில், "உமக்கு எப்படி இருக்கிறது?" என்றார்கள். அவர், "இரட்டிப்பு வேலை செய்பவனுக்கு எப்படி யிருக்குமோ, அவ்விதம்தான் நல்ல திடமாக இருக்குகிறது", என்றார்.

அவருடைய 76-ஆவது பிறந்த நாளில் "இப்போதுதான் நல்ல திடம்" என்றார்.

77-ஆவது வயதில், நண்பர்களின் தாக்ஷிண்யத்திற்காக ஒரு ஸினிமாவிற்குப் போய்விட்டுத் திரும்பி, திறந்த மோட்டாரில், மேல் கோட்டு இல்லாமல், சவாரி சென்றார்.

60 வருஷங்களாக இடைவிடாமல், செயற்கை வெளிச்சத்தில் ஊன்றிப்பார்ப்பதிலேயே செலவழிக்கப்பட்ட அவருடைய கண்கள்—படிப்பதற்கும் சூக்ஷ்ம வேலைக்கும் தவிர—பொதுவாக கண்ணாடியை வேண்டியதே கிடையாது. ஒரு கோஷ்டியில்-எடிஸன் இன்னாரென்றே தெரியாத ஒரு கண் வித்வான்—இவருடைய கண்ணைப் பரிசோதிக்கும்படி ஏவிவிட்டார். அவர்: 'இவருடைய கண் நரம்பு போன்ற கண் நரம்பை நான் இது வரை எவரிடமும் கண்டதில்லை. சாதாரணமாக அந்த நரம்பு ஒரு நூல்போ லிருக்கும். இவருடைய கண் நரம்பு ஒரு கயிறுபோ லிருக்கிறது. வாழ்க்கையில் ஏதாவதொரு மார்க்கத்தில், இவர் ஒரு விசேஷ மனிதனாக இருக்கவேண்டும்' என்றார்.

இவருடைய சரித்திரம் பூராவையும் இங்கு வரையப் போவதில்லை.

மின்சார விளக்கு இப்போது சௌகரியமாகப் பிரகாசிக்கிறது.

ஆளுக்குள் ஆளு; எத்தனை ஆளு!

சுந்தரம் திருச்சி தேசியக் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்த பொழுதுதான் நாட்டில் அந்த அமர்க்களம் ஏற்பட்டது. காந்திஜியின் உத்தரவிற்கு மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் பதில் வந்தபொழுது சுந்தரம் சும்மா கலாசாலை பெஞ்சில் உட்கார்ந்துகொண்டு ஆசிரியரின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்க இஷ்டப்படவில்லை. இயக்கத்தின் புயலில் கலந்து அதற்கு வலுக் கொடுக்க வேண்டுமென்று அவனுடைய உள்ளம் துடித்தது.

அந்தத் துடிப்பில் தேசாபிமானம் மட்டுந்தான் இருந்தது என்று அவன் எண்ணினான். ஆனால் அவனுடைய ஆசிரியருக்கு அவனுடைய உணர்ச்சிகளை ஆராய்ந்து பார்க்க முடிந்தது.

"சுந்தரம், நீ தேச சேவை செய்வதில் எனக்கு ஒரு விதமான ஆட்சேபணையும் இருக்கமுடியாது; நல்ல புத்தி கூர்மையும் சிரத்தையும் உணர்ச்சியும் உனக்கு இருக்கிறது. ஆனால் உனக்கு இப்பொழுது தேச சேவையில் அவ்வளவு ஈடுபாடு ஏற்படவில்லை. இல்லை, நீ ஆட்சேபித்து என்ன உபயோகம்? எனக்கு நன்றாகத் தெரிகிறது. நீ பதட்டம் கொண்டிருக்கிறாய், அவ்வளவுதான். காந்திஜியின் உபதேசத்தினுடைய உட்கருத்தை நீ இன்னும் கிரகிக்கவில்லை. சத்தியாக்கிரக புத்தி உனக்கு இல்லை. வெறும் ஆக்கிரகம்—துவேஷம் நிறைந்த வெறுப்பு—அதுதான் உன்னிடம் இருக்கிறது. இப்பொழுது நீ இதில் ஈடுபடுவதால் உன் அகங்காரம்தான் அதிகரிக்கும். அது மிதமிஞ்சிப் போய் நீ எதையும் செய்யத் துணிந்து விடுவாய். ஒன்றும் செய்ய முடியாமல் உடைந்து உட்கார்ந்து போவாய். கடைசியாக நான் சொல்லுவதைக் கேள். இன்னும் தியாகம் செய்ய இடமிருக்கிறது, சந்தர்ப்பம் இருக்கிறது, சவகாசம் இருக்கிறது, பொறு, அவசரப்படாதே!" என்று ஆசிரியர் எவ்வளவோ சொன்னார்.

ஆனால் சுந்தரம் தான் தேச பக்தி ஒன்றால்தான் தூண்டப் பட்டதாகநினைத்துக்கொண்டான். ஒத்துழையாமையின் தத்து வத்தை அறிந்துவிட்டதாகவே நினைத்தான். கலாசாலையை விட் டான். சிறை சென்றான். அவன் செய்த எல்லாச் செயல்களி லும் வாலிபத்தின் எதிர்ப்பு உணர்ச்சி ஒன்றுதான் இருந்தது என்பதை அவன் உணரவில்லை.

இயக்கத்தில் சேர்ந்த பொழுதே அந்த உணர்ச்சிதான் — ஆங்கில ஆட்சிக்கு எதிர்ப்பு. பிறகு ஆசிரியரின் யோசனைக்கு எதிர்ப்பு. பிறகு சிறைச் சாலையிலும் அதிகாரிகளுக்கு எதிர்ப்பு—இவை எதிலும் சாத் வீக எதிர்ப்பு என்ற அம்சமே இல்லை என்பதை அவன் உணர வில்லை. ஆசிரியர் சுட்டிக் காட்டியது போல அவனுடைய தேசபக்தி கூட அவ்வளவு தலையெடுக்க வில்லை; அவனுடைய அகம்பாவம் தான் தலைவிரித் தாடிற்று.

சிறையிலேயே ஒத்துழையா மையில் அவநம்பிக்கை தட்டிவிட் டது அவனுக்கு. சிறை செல்லு வதே வீண் என்று கருதலானான். வெளியே வந்ததும் சட்டசபை செல்லவேண்டும் என்று வாதாடிய கட்சியில் சேர்ந்தான். அவ்வளவு தான். பதவி மோகம் அவனைப் பேய்போலப் பிடித்துக் கொண் டது.

சுலபமாகப் புதுக்கட்சியில் ஒரு பிரபலஸ்தனானான். தன் சொந்த ஜில்லாத் தொகுதியிலிருந்து தேர்தலுக்கு ஒரு அபேட்சகனாக நின்றான். தீவிரமாகப் பிரசாரத் தில் ஈடுபட்டு இரவும் பகலுமாகச் சுற்றினான். கட்சியை பலப்படுத் துவதாக எண்ணித் தில்லு மல்லு கள் மனதாறச் செய்தான். ஆனால் உண்மையில்தனது நிலைமையையும் செல்வாக்கையும் உயர்த்திக் கொள்ளுகிறோம் என்பதை அவன் அறியாமலில்லை; இங்கும் தேச சேவை என்று வார்த்தையைச் சொல்லிக்கொண்டு தன்னையே ஏமாற்றிக்கொண்டான்.

சத்தியத்திற்காகவும் அஹிம் சைக்காகவும் கலாசாலையைத் துறந்தவன் இப்பொழுது அவை வாழ்க்கையில் நடைமுறையில் அவ் வளவாக நடைபெறுதவை என்று தர்க்கம் செய்ய ஆரம்பித்தான். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தன் சொந்தப் பணத்தை தாராள மாகச் செலவு செய்து தேசத் திற்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டான்.

தேர்தல் காலத்தில் தான் அவனை அந்த மோகினி பிடித்துக் கொண்டது. தேர்தல் பிரசார நிதிக்காக ஒரு இலவச நாட்டியக் கச்சேரி ஏற்பாடு செய்தான் சுந் தரம். அது சம்பந்தமாக அவன் இரண்டு மூன்று தடவை நீலாவதி யின் வீட்டிற்குப் போகவேண்டி யிருந்தது.

முதல் தடவை அங்கே போய் அவளைக் கண்டவுடனேயே சுந் தரம் தன் வசமற்றான். அதற்கு முன் எல்லாம் தேசத் தொண்டர் கள் பிரம்மசாரிகளாக இருந்து தங்கள் உயிர்களை தாய்க்கு அர்ப் பணம் செய்ய வேண்டுமென்று இடைவிடாமல் ஆரவாரம் செய் வான். அப்பொழுது பெண்மை

யிடம் அவனுக்கு மதிப்பு கிடையாது; அவநம்பிக்கை. உயிர் லட்சியங்களுக்கு விரோதமாக நின்று மனிதனை மாய்ப்பவள் பெண் என்று அவன் தீர்மானம். இயக்க காலத்தில்கூட பெண் தொண்டர்களை அவன் லட்சியம் செய்வதே இல்லை; இகழ்ந்து கூடப் பேசுவான். தான் கலியாணமே செய்துகொள்ளப் போவதில்லை என்று தாய்தந்தையர்களிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டான். கட்டழகு வாய்ந்த கலியாணப் பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மறுத்துவிட்டான்.

அப்பேர்ப்பட்டவனை நீலா ஒரு பார்வையில் பெட்டிப் பாம்பாக்கி விட்டாள். ஆனால் அதிலும் சுந்தரம் தன்னை ஏமாற்றிக் கொள்ளமுயன்றான். அந்த வீழ்ச்சி விடுதியில் கிடந்த தாசி நீலாவதியைப்போன்ற பெண்களை விடுதலை செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டதாகக் கிளம்பினான். ஆனால் அவன் ஆர்வம் எல்லாம்—அகங்காரம் எல்லாம்—எங்கோ போய்விட்டது.

நீலாவதி குப்பையில் கிடந்த குந்துமணி. சிறந்த கலைஞானமும் அதற்கேற்ற உயர்ந்த உணர்ச்சிகளும் பெற்றவள். அவள் சுந்தரத்தின் அகங்காரத்தை இருந்த இடம் தெரியாமல் அடித்து விட்டாள். அவளைப் பார்த்து வேறு மனிதனாகி விட்டான்.

தேர்தல் இயக்கம் காற்றில் போய்விட்டது. அரசியலே ஒரு அர்த்தமற்ற அலைச்சல் என்று பேச ஆரம்பித்தான் சுந்தரம். உண்மையான உயிர்த் தோழியுடன் நற்கருமங்களைக் கண் காணாமல் செய்துகொண்டு அஞ்ஞாத வாசம் செய்வதே உயர்ந்த வாழ்க்கை என்று கருதலானான். அதற்கு நீலாவதியின் உதவியை நாடினான்.

சுந்தரமும் நீலாவதியும் புருஷனும் மனைவியும் ஆகிவிட்டதால் சுந்தரத்தின் அகமாறுதல்கள் மட்டும் நிற்கவில்லை. இரண்டு வருஷத்துக் காதல் வாழ்க்கைக்குப் பிறகு அவனுக்கு அதில் இருந்த நம்பிக்கை தளர ஆரம்பிக்கிறது. இவ்வளவு தன்மைகளை பச்சோந்தி போல மாறிமாறி வெளியிட்டவன் இன்னும் எவ்வளவு ஆளாக மாறுவானோ? ஆள் உள்ளேதான் என்றாலும் அவனுக்குள்ளே!

டென்ட்-ஸின்

"ஒருவன் சினிமாப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, யாரோ இன்னொருவன் அவனைத் துப்பாக்கியால் சுட்டுவிட, உலக யுத்தமே வந்துவிடப்போகிறது" என்றேன்!

"சினிமாவில், துப்பாக்கியினால் சுடப்பட்ட ஒவ்வொருவனுக்காகவும் ஒவ்வொரு தடவையும் உலகயுத்தம் வருமா?" என்று அவன் கேட்டான்.

"இல்லை, இல்லை, செத்துப்போனவன் ஒரு ஜப்பானிய கஸ்டம்ஸ் கமிஷனர்" என்றேன்.

அவன் புரிந்து கொண்டான். "ஓஹோ! ஜப்பானிய கஸ்டம்ஸ் ஆபீஸர் சுடப்பட்டு இறந்து போகும் ஒவ்வொரு தடவையும் தான் யுத்தம் வருமா? சரி, சரி," என்றான்.

அதில் எனக்கே ஒரு விஷயம் விளங்கிற்று! ஜப்பானிய கஸ்டம்ஸ் கமிஷனர் செங்-வி-காங் இறந்ததினால் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. அவனைக் கொன்றவனைப் பிடித்துச் சுட்டு எறிந்து விட்டால் முழுகிப்போனதெல்லாம் வந்தும் விடாது. "சண்டை வந்தது பிராம்மணா, சாத மூட்டையைக் கீழே வையும்" என்ற கதையைப் போல, ஏதேதோ காரணங்களை வைத்துக்கொண்டு, ஏதோ ஒரு காரியத்திற்காகக் குதி குதி என்று குதிக்கிறார்கள். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது.

அப்படி உண்மையில் செங்-வி-காங் இறந்ததினால் ஜப்பானியர் உருகுபவர்களாக இருந்தால், நியாயமாக, யார் அவனைக் கொன்றார்களோ, அவர்களைப் பிடித்து பழி தீர்த்துக்கொள்ளப் பார்ப்பார்கள். "ஒரு ஜப்பானியர், ஒரு பிரிட்டிஷ்காரர், ஒரு பொது மனிதன், இவர்கள் சேர்ந்த ஒரு சபையைக் கூட்டி சந்தேகத்திற்கு ஆளாகி இருக்கும் நாலுபேர்களையும் அந்த நியாய சபையோரால் விசாரிக்கச் செய்யவேண்டியது" என்ற பிரிட்டிஷ் ஸ்தானிகரின் யோசனையை ஜப்பானியர் நிராகரித்து விட்டார்கள்!

இதிலிருந்து என்ன தெரிகிறது? இதன் அர்த்தமென்ன?

இறந்து போனவனை முகாந்திரமாக வைத்துக்கொண்டு ஜப்பானியர், தங்களுடைய காரியங்களைச் சாதித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். அதுதான் ரகசியம்.

"ஜப்பானியர்களுடைய எண்ணங்கள் என்ன?"

"டென்ட்ஸினிலுள்ள........."

என் நண்பனாகிய அந்த மனுஷனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. "அந்தக் காபிக்கிளப் எங்கே இருக்கிறது?" என்று அவன் கேட்டான். அவன் விக்ரமாதித்தன் கதைப்புஸ்தகம் ஒன்றுதான் படித்திருக்கிறான். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறான்.

"என் அப்பனே! ஆசியாக் கண்டத்திலே சைனா, சைனா, என்றொரு தேசமுண்டு. அதில் ஜப்பானுக்கருகே டென்ட்ஸின் என்றொரு நகரமுண்டு. அதில் பிரிட்டிஷ்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள், ஜெப்பானியர் எல்லோருக்கும் சலுகையுண்டு.

ஜெப்பானியர்களுக்கு மாத்திரம், மற்ற எல்லோரையும் அந்த இடத்தை விட்டு விரட்டி விடவேண்டும் என்ற ஆசை வெகு நாளாக இருந்து வருகிறது. வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு ஏற்றாற்போல, சினிமாப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஜப்பானியனை எவனோ ஒருவன் சுட்டு வைத்தான்! உடனே ஏக ரகளை! பிரிட்டிஷ் ராஜாங்கமும், ஜப்பானிய அரசாங்கமும் சந்தியில் வந்து முட்டிக் கொள்ளும் நிலைமை வந்து விட்டது.

பிரிட்டன், சைனாவில் போய் செய்யும் வியாபாரத்தில், பிரிட்டிஷ் பணம் ஏராளமாக முழுகிக் கிடக்கிறது; துறைமுகங்களை அவர்கள் கட்டி சீர்திருத்தினார்கள்; ரயில் வழிகளை புதிது புதிதாகப் போட்டார்கள்; கப்பல்கள் ஓட ஆரம்பித்தன. அமர்க்களந்தான்!

இவ்வளவிலும் அமெரிக்கர்களும், பிரன்சுக்காரர்களும் கலந்துகொண்டார்கள். கிழக்கத்தி வியாபாரத்தில் எல்லோருமாகச் சேர்ந்து போட்ட பணம் 2 000 000 000 பவுன்கள். அங்கேயுள்ள பிரிட்டிஷ்காரர்களின் தொகையே 25,000 ஆகும்.

1937-ல் ஜெப்பானியர் சைனாவை நீவட்டிக் கொள்ளையடிக்க முன் வந்தபோது, அந்த யுத்தத்தில் அங்கே இருக்கும் ஜனநாயக நாடுகளின் உரிமைகள் பாதிக்கப்பட மாட்டாது என்று தண்ணீர்மேல் எழுதியதற்கு சமானமான வாக்குறுதியளிக்கப்பட்டது.

வாக்குறுதியளித்த நிமிஷமே அது உதவாக்கரை வாக்குறுதியென்று ஜப்பானியர்களே நன்றாகக் காட்டிவிட்டார்கள்! ஏனெனில், ஜப்பானியருக்கு வேண்டியது வியாபாரத்தில் யதேச்சாதிகாரம். தன்னைத் தவிர வேறு ஒருவரும் சைனாவோடு வியாபாரம் செய்யக்கூடாதென்ற பேராசை ஜப்பானுக்கு. அப்படி இருக்கும் ஒரு அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிப்பத்திரம் கரி அடுப்புக்குக்கூட உதாவது என்பதற்கு ஆதாரம் வேண்டுமா என்ன?

சைனாவோடு ஜப்பான் சண்டை செய்ய ஆரம்பித்தபோது, மூன்று மாதத்தில் சைனாவைத் தோற்கடித்துவிடலாம் என்று 'பிளான்' போட்டிருந்தது. கிட்டத்தட்ட மூன்று வருஷங்கள் ஆகியும் சைனாவை ஜெயிக்க முடியாமல் போகவே, ஜப்பானியருடைய கௌரவம் காற்றில் பறந்து விட்டது! ஆகையால்தான் டீன்ட்ஸின் சம்பவத்தை வைத்துக் கொண்டு, "நீங்கள் எங்களுக்கு எதிராக சியாங்-கே-ஷேக்குக்கு உதவி செய்கிறீர்கள்; ஜப்பானியர்களோடு ஒத்துழைக்கமாட்டேன் என்கிறீர்கள். டீன்ட்ஸின் கொலை போன்ற 'பயங்கர சம்பவங்களை ஆதரிக்கிறீர்கள். இதெல்லாம் என்ன அநியாயம்" என்று பிரிட்டிஷார்களின் எதிரில் போய் தாவிக் குதித்தது ஜப்பான்

ஜப்பானின் உண்மையான தேவை, சைனாவில் வியாபார சுதந்திரம் ஒன்றுதான். அதனால் தான் டீன்ட்ஸின் போன்ற இடங்களிலிருந்து மற்ற தேசத்தார் எல்லோரையும் வெளிக்கிளப்ப வேண்டுமென்று அவர்கள் சூழ்ச்சி செய்கிறார்கள்.

ஏன் அப்படிப்பட்ட காரியத்தை டீன்ட்ஸினில் போய் ஜப்பானியர் ஆரம்பிக்கவேண்டும்? வேறு ஊரே கிடையாதா? டீன்ட்ஸினைத் தவிர வேறு ஊரில் தகராறை ஆரம்பித்தால் என்ன? என்பவை நியாயமான சந்தேகங்கள்தான்.

ஜப்பானின் புத்திசாலித்தனத்தை அது காட்டுகிறது. ஜப்பான், தனக்கு வேண்டிய யுத்த தடவாளங்

களில் பாதிக்குமேல் அமெரிக்காவினிடமிருந்துதான் இறக்குமதி செய்து கொள்ளுகிறது. ஆகையால் அமெரிக்காவோடு நேரடியான தகராறில் இறங்க ஜப்பானுக்கு இஷ்டமில்லை. சீனாவிலிருக்கும் எல்லா துறைமுகங்களுக்குள்ளும், டீன்ட்ஸின் ஒன்றுதான் அமெரிக்கர்களுக்கு அதிக சொந்தம் இல்லாதிருக்கிறது.

பிரிட்டனிடம்தான் ஈ, எறும்பு கூடப் பயப்படவில்லையே! ஜப்பானும் பயப்படவில்லையா என்று சரியான ஒரு கேள்வி பிறக்கலாம். பிரிட்டனுக்கு ரஷ்யாவோடு சம்பந்தம் பேசத்தான் பொழுது சரியாக இருக்கிறது. யுத்த தடவாளத் தயாரிப்பிலும் அது முனைந்து நிற்கிறது. இதையெல்லாம் முடித்துக்கொண்டு 'என்ன சேதி, வெளியூரிலே' என்று கேட்பதற்குள், ஜப்பான் தனக்கு வேண்டிய இடங்களைத் திருடி பைக்குள் போட்டுக்கொண்டு வெகுதூரம் போய்விடும்! அமெரிக்காவை விரோதித்துக் கொள்ளாமலிருந்தால், நிச்சயமாய் பிரிட்டனை சைனாவிலிருந்து விரட்டிவிடலாம் என்ற நம்பிக்கை ஜப்பானுக்கு திடமாக இருக்கிறது.

யுத்தம் வெளிப்படையாக ஆரம்பிக்கும் வரை பிரிட்டன் என்ன செய்யும்? பிரிட்டிஷ் துறைமுகங்களில் ஜப்பானிய கப்பல்கள் வந்து நிற்கக்கூடாது என்று சொல்லும். பிரிட்டனிலுள்ளும், அதற்குச் சொந்தமான தேசங்களிலும், ஜப்பானிய சாமான்களுக்கு வரியை அதிகமாகப் போட்டு, அவைகளை விலை போகாமல் செய்துவிடலாம். பொருளாதார நிலையில் ஜப்பானை அமுக்கினால்தான், அது செத்துப் போகும் இல்லாவிட்டால் பாம்பைப் போல் தலையைத் தூக்கிக் கொண்டிருக்கும்.

இந்த சமயத்தில் என் நண்பன் 'கொஞ்சம் தலைவலித்தைலம் இருக்கிறதோ?' என்று கேட்டான். 'அது இல்லை. இன்னும் கொஞ்சம் சொல்ல வேண்டியது பாக்கி இருக்கிறது' என்றேன்.

'சாவகாசமாக வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனவனை இன்னும் நான் காணவில்லை.

என்னென்ன எதிர் பார்க்கலாம்?

'பாரத தேவி'யில் எந்த ரக எழுத்துக்களை எதிர் பார்க்கலாம் என்று கேள்வி கேட்கவேண்டாம்; ஊக மும் செய்ய வேண்டாம். குத்து மதிப்பில், கீழ்க்கண்ட ஜாப்தா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் விவரங்களை காணலாம்:—

1. கவிதை
2. கட்டுரை
3. மழை, நீர் வீழ்ச்சி, மாலைப்பொழுது போன்ற இன்பந்தரும் காட்சிகளைப்பற்றி வர்ணனைகள்
4. சிறு கதை
5. தொடர் கதை
6. நாடகம்
7. பெரியார் வாக்கு
8. ஸயன்ஸ் குறிப்புகள்
9. விகடத் துணுக்குகள்
10. இந்து தேச சரித்திரம்
11. அயல் நாட்டுச் சரித்திரத்துளிகள்
12. சித்திரப் படங்கள்
13. பெரியார்களின் வரலாறு
14. காந்தியின் உபதேசம்
15. சித்தர்களின் ஞானோபதேசங்கள்

இந்த ஜாப்தாவே பூரணமானதோ என்ற சந்தேகம் தேவையில்லை. பழைய ட்ராமா நோட்டீஸ்களில் குறிப்பிடுவதுபோல, "சமயோசிதப்படி" விஷயங்கள் வெளி வரும்.

பரதேசத் தபால்

சகோதர வாத்தியார்களுக்கு,

உங்களுக்கு வணக்கமாக எழுதிக்கொண்டது. வாத்தியார் தொழிலில் சுமார் இருபது வருஷங்களாக ஈடுபட்டு வந்திருக்கிறேன். அந்தத் தொழிலின் லாபலோபங்கள் எனக்கு நன்றாகத் தெரியும் என்பது என் எண்ணம்.

மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லோரும், என்னைப்போல, இருபது வருஷ அனுபவசாலிகளாயிருந்தால், அவர்களுக்கு ஏதேனும் கைமுதல் சேர்ந்து விடுவது நிச்சயம். ஏழை வாத்தியார்களுக்கோ, என்றால், ஒன்றும் சொல்லிக்கொள்ள முடியவில்லை.

நாம் யாரிடத்திலாவது நல்ல பெயர் எடுத்திருக்கிறோமா? நாம் சரியாகச் சொல்லிக் கொடுக்கிறதில்லை என்று சர்க்காரிலிருந்து, நமக்கு "டோஸ்" கிடைக்கிறது. பெற்றோர்கள்தான், நம்மைப் பற்றி, ஒரு நல்ல வார்த்தையாவது சொல்லுகிறார்களா? அதுவுமில்லை. "தூங்கு மூஞ்சி வாத்தியாரிடம் அனுப்பினால், பையன் எப்படி உருப்படுவான்" என்று அவர்கள் பாரிஸ்டர் மாதிரி பேசுகிறார்கள்.

நாம் சொல்லிக்கொடுக்கும் பையன்களைப்பற்றியோ, ஒன்றும் சொல்லத்தேவையில்லை. அவர்கள் ஒரு நாளும் நம்மை வாழ்த்துவதே இல்லை. அவர்களை நாம் படிக்கச்சொன்னாலும், கோபப்படுகிறார்கள்; விளையாடச் சொன்னாலும் கோபித்துக் கொள்கிறார்கள். அவர்கள் இஷ்டம்போல, நாம் நடக்க வேண்டுமென்கிறார்கள். அவர்களிஷ்டம்போல நடப்பதற்கு, அவர்கள் பள்ளிக்கூடத்துக்கு ஏன் வரவேண்டும்?

உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி; வாத்தியாருக்கு மூன்று பக்கத்தில், ஏன், நாலு பக்கத்திலும் (சொந்த வீட்டை மறக்கக்கூடாதல்லவா?) இடியும் உதையும். இப்படி, நாம் எவ்வளவு காலம், இந்த மண்ணின் பேரில் வாழ வேண்டுமோ? அது உங்களுக்குத் தெரிந்திருந்தால், எனக்கு, தயை செய்து தெரிவியுங்கள்.

காலமே முதல் சூரியாஸ்தமனம் வரையில், தொண்டைத் தண்ணீர் வற்றிப் போகும்படியாகக் கத்தி சொல்லிக் கொடுத்தாலும், நல்ல பெயர் வாங்க முடிகிறதில்லை. சம்பளத்தைப்பற்றி,

எந்தக் கோயிலில் முறையிட்டுக் கொள்ளுகிறது என்று தெரியவில்லை. மாதச் சம்பளம் அடுத்த மாதம் கிடைத்தால் தானே? மானேஜருக்கு மனம் இருந்தால், கிடைக்கலாம். மனமில்லாமல்போனால், "ஆறுமாதக் கடன்தான்."

இப்போ, புதிசாக வேறு, ஒரு படிப்பு வந்திருக்கு. அதற்கு, கைவரிசைக் கல்வி என்று பெயராம். மகாத்மா காந்தி, எல்லாருக்கும் நல்லது பண்ணவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறாரே, அவராவது நம்மைப் பற்றிக் கவனிப்பார் என்று ஆசைப்படுவதிலும் புண்ணியமில்லை. கல்வியை தானம் செய்யவேண்டுமேயொழிய, அதை விற்கப்படாது என்று சொன்னாலும் சொல்லிவிடுவார்.

நமக்கு சலுகை இடம் எது என்று தெரியவில்லை. கடவுளிடம் முறையிட்டுக் கொள்ளலாம் என்று நினைத்தாலோ, அக்கிரமங்கள் நடக்கிற கோயில்களில் கடவுள் சான்னித்யம் ஏது என்று மகாத்மா காந்தி ஒரு தடவை சொல்லியிருக்கிறார். ஆகவே, நாம் முறையிட்டுக்கொள்ளுவதாயிருந்தால், கடவுள் சான்னித்யம் இருக்கிற கோயிலாகப் பார்த்து, முறையிட்டுக்கொள்ளவேண்டும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தேவலையா? தஞ்சாவூர் பிரகதீசுரஸ்வாமி கோயில் தேவலையா? கள்ளழகர்கோவில் தேவலையா? எந்தக் கோவில் நல்ல கோவில் என்று எனக்கு எழுதி அனுப்ப முடியுமா?

இல்லை. பழைய கோவில்கள் எல்லாமே வேண்டாம் என்பது உங்கள் கருத்தா? புதுக் கோவிலை எங்கே தேடிப் பார்த்துக் கண்டு பிடிக்கிறது? மொத்தத்திலே, நம்ம பாடு ரொம்ப திண்டாட்டம். இதற்கு என்ன செய்கிறது என்று தெரியவில்லை.

அதிகமாக ஏதாவது எழுதிவிட்டாலும், பையன்கள் "ஸ்ட்ரைக்" பண்ணினாலும் பண்ணிவிடுவார்கள். ஸ்ட்ரைக்கும் உண்ணாவிரதமும் மலிந்து போனதைப்போல, குடும்பச் சாமான்கள் மலியப்படாதா?

உங்கள் அன்பன்

மதிப்பில்லாத வாத்தியார்.

சகோதரர்களே!

நான் மேடைப் பிரசங்கி இல்லை. இப்பொழுது, நான் உங்களை கூப்பிடும் பொழுதும், மேடையிலிருந்து கூப்பிடவுமில்லை. மண்ணின் பேரில் இருந்துகொண்டு தான் கூப்பிடுகிறேன்.

நாம் எல்லாரும் தொழிலாளிகள். கையால் உழைத்துச் சாப்பிடுகிறவர்கள். நம் உழைப்புத்தான், முதலாளிகளின் முதலும் லாபமும். இப்படி இருந்தும், நம்மை ஏன், அவர்கள் மரியாதையாக நடத்துவதில்லை?

நான் ரொம்ப யோசித்துப் பார்த்தேன். நான் யோசனை செய்து முடிவுக்கு வந்ததைச் சொல்லுகிறேன். ஏதாவது பிசகு இருந்தால், மன்னித்து விடுங்கள். அறியாப்பிள்ளை என்று தள்ளி விடுங்கள். அதற்காக, ஆத்திரப்பட வேண்டாம்.

நாம், முதலாளி அயோக்கியன் என்கிறோம். தொழிலாளிகள் நம் பத்தகாதவர்கள் என்று முதலாளி சொல்லுகிறார். இந்தக்

கதை, ஹனுமார் வால்மாதிரி நீண்டுகொண்டே போனால், முடிவு எங்கே? ஒருத்தருக்கொருத்தர், இப்படியே, சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தால், பஞ்சாயத்து எது? முடிவு காலம் எப்போ?

யாராவது நல்லெண்ணத்தைக் காண்பிக்க வேண்டாமா? முதலாளிதான் காண்பிக்கட்டுமே என்று சில தொழிலாளிகள் சொல்லுகிறார்கள். யாருக்குத் தைரியமும் அன்பும் அதிகமாயிருக்கிறதோ, அவர்கள்தான், நல்ல எண்ணத்தைக் காண்பிக்க முடியும்.

எனக்குத் தெரிந்தவரையிலும், தொழிலாளிக்குத்தான் தைரியமும் அன்பும் அதிகமாயிருக்கிறது. தொழிலாளிகள்தான் அடக்கத்தோடு இருக்க வேண்டும். பேராசையால் பொறாமையும், பொறாமையால் பொய்யும், பொய்யால் மனக்கசப்பும் சண்டையும் — சம்பாதித்துக் கொள்ளுவது நாகரிகமே இல்லை.

மனிதர்கள் உயர்ந்த படியில் இருந்துகொண்டு, அழகாகக் காரியம் செய்யவேண்டும். உலகம் என்பது முதலாளி அல்ல. உலகம் என்பது தொழிலாளிதான். நம்மிடம்தான் அதிகப பொறுப்பு இருக்கிறது. இதை யோசித்துப் பாருங்கள்.

உங்கள் சகோதரன்

தொழிலாளி

வந்ததை வாங்கிப் போடு!

சீனு சின்னப்பையன். அவன் தகப்பனார் அவனிடம் ஒரு அணாவைக் கொடுத்து, தெருக்கோடியிலுள்ள ராமய்யரிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னார். சீனு ராமய்யரிடம் சென்று, "மாமா, எங்க அப்பா உங்களுக்கு ஒரு அணாக் கொடுக்கணுமா?" என்று கேட்டான்.

ராமய்யர், "ஆமாண்டா" என்று காசை வாங்கிக் கொண்டார். பிறகு, "ஏண்டா, நீ யார் பிள்ளைடா?" என்று கேட்டார்.

*　　　*　　　*

கோர்ட்டில்!

"கைதியாயுள்ள இவன் என்னைக் கழுதை என்றும், நாய் என்றும், முண்டமென்றும், குட்டிச்சுவரே என்றும் பலவிதமாகத் திட்டினான். இப்போது நான் சொன்னதெல்லாம் கடவுள் சாட்சியாக சத்தியம்".

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணன் தன் மனைவியோடு இல்லறம் நடத்திவர, தவத்தன்மையால், தக்க காலத்தில் ஓர் மகனைப் பெற்றனர். அம்மகனுக்கு சுவாமிநாதன் என்னும் பெயரிட்டு, கல்வி பயிற்பித்து அன்போடு வளர்த்து வந்தனர். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடு களை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவரிடமான வனத்தை யடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் உபதேசித்து அருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் தடுத்து இல்லறத் தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதய மாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். இது இப்படியிருக்க, மகன் வரவைக் காணாத தாய் தந்தை யர்கள், தவித்து துயரில் ஆழ்ந்து, தமது வீட்டுக்கோயிலில் உள்ள விக்ரக வடிவமான உமாதேவியாரின் பாதங்களில் வீழ்ந்து துதித்துப் பிரலாபித் துப் பின்னும் சில புகல்வாராயினர்.]

தங்கள் அருமை மகன் பிரிந்ததினால் உண்டான சோகத்தால், சிவஞான தேசிகருக்கும் அவர் மனைவியாருக்கும் உண்டான விசனத்தை இங்கு எவ்வாறு எடுத்துச் சொல்லவியலும்? பெற்றோர்களுக்கு தங்கள் மகனை பிரிந்ததைக் காட்டிலும் கொடிய துயரம் வேறுண்டோ? ஒரு நாளும் பிரிந்தறியாத தங்கள் அருந்தவப் புதல்வன் அதிகாலையில் வீட்டிலிருந்து பிரிந்தனன். இரவு நெடுநேரமாகியும், மகன் வரவைக் காணாமல், பற்பலவாறு சிந்தித்து, ஒன்றும் தோன்றாதவர்களாய், இவர்கள் பூசித்துவரும், பெரிய ஒளியையுடைய, கருணை விளையப்பட்டு உவகை மிகுந்த நாதமாயிருக்கின்ற பராசக்தியின் தாமரை மலர் போன்ற இரண்டு பாதங்களிலும் விழுந்து, பின் வருமாறு துதிக்கத் தொடங்கினார்கள்:—

"பராசக்தியான ஒளியே! எல்லா உயிர்களுக்கும் இறைவியே! அருளே பழமாகப் பழுக்கும் கொம்பு போன்றவளே! ஞான ஒளியாய் இருக்கின்றவளே! திருமகள் பரவா நின்ற தாயே! நினைவு நாளால் எங்களுக்கு ஈந்த மகன் இன்று அதிகாலையில் கடனை முடித்து, வீட்டினின்றும் பிரிந்தவன், இரவில் அதி நேரமாகியும் வந்தானில்லை. மகனின் மனோ நிலையறியாமல், மணஞ் செய்ய சகல ஏற்பாடுகளும் செய்து முடித்து, மகனிடம் சொன்னேனும். மகனோ இவ்வில்லற தரு

விடுவித்தல் வேண்டுமென்றும் வேண்டினன்.

பின் வருவதை உணராத நாங்கள், குழந்தாய்! இவ்வில்லற தருமத்தைத் தாங்கிக் கொள்ளுதற்கு வேறொரு மைந்தனைப் பெற்றோமில்லை. எங்களுக்கோ முதுமை முதிர்ந்து வாழ்நாள் நெருங்கி வருகின்றது. ஆதலின் நாங்கள் குறித்திருக்கும் இக்காலத்திலேயே மணஞ்செய்து கொள்ளின், நலமென சொன்னோம்.

இதற்கு மகன் மறுமொழி புகலாதிருந்தனன். நாங்கள், ஒருவாறு மகன் சம்மதித்தானென்று முன்னிரவைச் சுகமே கழித்தோம். இன்றிரவு இதுவரை கண்டறியாத துயரக் கடலில் ஆழ்ந்தோம். என் செய்வோம்! தேவி! நின் கிருபையாதோ? அறியோம். இப் புத்திர சோகத்தினின்றும் எங்களை விடுவித்தல் நின் கடமை, பராபரி! கிருபா சமுத்ரீ! ஆ...... என் செய்வோம்" என்றும் பின்னும் உரைத்தற்கு நாவெழாதவராய் தேவியாரின் பாதத்திடையே அன்றிரவைக் கழித்தனர்.

மறுநாட் காலையில், சிவஞான தேசிகரும் அவர் மனைவியாரும் சோகத்தினின்றும் ஒருவாறு தேறி, காலைக் கடனை முடித்து முறைப்படி தேவியின் விக்ரக ஆலயத்துக்குச் சென்று பின்னும் பற்பலவாறு துதித்து, "தாயே! எங்கள் அருந்தவச் செல்வனைத் தேடும் பொருட்டு இதோ! இல்லத்தினின்றும் செல்கின்றோம். காப்பாயாக! என்று உரைத்துச் சென்றனர். அன்று பகல் இருபது நாழிகைவரை அவ்வூர் முழுதுஞ் சுற்றியும், மகனைப்பற்றிய தகவல் கிடைக்காததினால் தவசிகள் வசிக்கும் வனங்களில் தேடத் தொடங்கினார்கள். தொடர்ந்து செல்லுங் காலையில், இரண்டு நாளாய் அன்ன ஆகாராதிகள் இல்லாதிருந்ததினால், மிகவும் களைப்படைந்து, நடப்பதற்கும் இயலாது, தள்ளாடி நடந்து சென்றனர்.

வனவழியாய் நெடுந்தூரம் சென்றும் மனித சஞ்சாரத்தைக் காணாதவர்களாய்த் திகைத்து நிதானித்து நான்கு பக்கமும் நோக்கினார்கள். சற்று தூரத்தில் ஓர் அழகிய ஆச்ரமம் காணப்பட்டது. இன்னும் நெருங்கிப் பார்க்க அவ்வாசிரமத்தில் ஜடாமகுடதாரியாய் ஓர் முனிவர் வீற்றிருக்கக்கண்டு, அம்முனிவரின் பாத கமலங்களின் முன் சாஷ்டாங்கமாக வீழ்ந்தனர். முனிவர் திடுக்கிட்டு, களைப்படைந்து வீழ்ந்தனரென்று அறிந்து, நீர் அருந்தச்செய்து களைப்பை அகற்றும் பல உபாயஞ்செய்து, ஒருவாறு, தேறிய அச்சதிபதிகளைப் பார்த்து, "நீங்கள் எத்தேசம்? யாது குறித்து இங்ஙனம் வந்தீர்கள்? உமது விருத்தாந்தங்களை விடாமல் சொல்வீர்கள்" என்று முனிவர் கூற, சிவஞானதேசிகர் தனது ஊர்; பேர் முதலியவற்றைச்சொல்லி, மகன் பிரிந்த தன்மையையும், மகனைத்தேடி அங்கு வந்தோமெனச் சொல்லிமுடித்தனர். இவைகள் அனைத்தையும் ஆதியோடந்தமாய்க் கேட்டுணர்ந்த முனிவர் பின் வருமாறு சொன்னார்.

எனது சரீரம் என்று நினைத்திருக்கும் உமது தேகத்திற்கும் இந்த தேகத்தில் சிறுகாயம் ஏற்படின், 'அம்மா! அப்பா!' என்று துடிக்கும் ஜீவனுக்கும் உள்ள பொருத்தந்தான் என்னே! இத்தேகத்திற்காக, ஜீவசக்தி என்ன பாடு படுகின்றது? இப்படி, ஒன்றால் ஒன்று வாழ்ந்துவரும் இவ்விரண்டும், யமன் வரும் நாளில், சொல்லாமல் பிரிந்தோடுகின்றன. ஒன்று சேர்ந்து வாழும் உடலுக்கும் உயிருக்கும் சம்பந்தமில்லாமல், கட்டாயமாய் ஒருநாள் இமைப்பொழுதில் பிரிந்துபோவதை யறிந்தும், என்ன மயக்கம்! மகனும்! மகன் பிரிந்தானும்! இதற்கு இவ்வளவு சோகமாம்! ஆ......ஆ......... அன்புவடிவமாய், இம்மாயை மனிதர்களை என்னபாடு படுத்துகிறது? (நகைத்து) தேசிகரே! ஞானக் கண்ணால் பாரும். அப்போது "நான்" என்னும் நீ, யார் என்பதை உற்று நோக்கின் விளங்கும் வீணே வருந்துவதிற் பலன்யாது?" தெளிந்திடும், ஒன்று சொல்லுகிறேன், கவனமாய்க் கேளுங்கள்.

"முன் ஒரு காலத்தில் அகத்தியன் என்பார் கைபிலாயகிரியை அடைந்து, உமாமகேஸ்வரரை தரிசித்து, அவரருளினால் இக்கலியுகத்தின் மாயாசக்தியின் செயல்களும் அதனால் இல்லறத்தோர்க்கு உண்டாகும் குறைகளும், இல்லற தருமம் என்பது இன்னதென்றும், நன்கு தெளிந்து இக்கலியின்கண் தோன்றுவோர்கட்கு உதவியாக இருக்க, கருணையால் அம்முனிவர் பெருமான் உபதேசம் செய்தது அனந்தம்." அதில் சில சொல்வோம். கேட்பீராக!

ஆகாய முகட்டை அளாவிய சிகரம் பொருந்தியதாயும், விசாலமான குகைகள், குன்றுகள் பல உள்ளதாயும், வித்தியாதரர்கள் மணஞ்செய்துகொள்ளும் தக்க சுந்தரமான பூங்கொத்துகளையுடைய கற்பகச்சோலை சூழ்ந்த சாரலுள்ள கைலாயகிரி எனப் பேர்பெற்ற அரிய மலையின் கண் சக்கரமுதலாகிய பஞ்சாயுதங்களை அழகிய கரங்களில் தாங்கிக்கொண்டு செந்தாமரை மலர் போன்ற முகத்தினையுடைய விஷ்ணு, ஒரு புரத்து அரிய ஆசனத்தில் அமர்ந்திருக்கவும், ஊழி காலமுதல் உலகத் துயிரை யெல்லாம் சிருஷ்டிக்கும், தாமரைப் பூவாசியான பிரும்மா பணிந்து நிற்கவும், தேவேந்திரன் முதலான தேவர்களும், வித்யாதரர், இயக்கர், கின்னரர், அரக்கர்கள், சப்த மாதர்கள் முதலியோர் புரங்களின் பகுதியாய் நின்று போற்றவும் உமாதேவியார் ஈன்றருளிய விநாயகப்பெருமானும், ஷண்முகக் கடவுளும் தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்திருக்கவும், நாகராஜர்களும், நாரதர் முதலிய தேவலோக முனிவர்களும், யாகாதி கருமங்களால் உயர்ந்த மற்றுமான வதிஷ்டர், கும்ப சம்பவர், கர்க்கர், எவுணர், ரோமசர், பராசரர், மனு, வியாசர், போகர், அங்கிராமர், அத்திரி, மரிசி, புருதச்சர், சுகர், சவுனர், சுவுனகர், காசிபர் முதலாகிய காமாதிகளை நீக்கிய மற்றுமனேக முனிசிரேட்டர்களும், தனித்தனி ஒருபால் துதித்து நின்றார்கள்.

பனனும் வரா நின்ற தேவ அசுர முனிவர்களை வரிசை வரிசையாக நிறுத்தி பொன்னிறமுள்ள பூதகணங்களை ஒரு பால் நிறுத்திய வண்ணம் சிறப்புள்ள நந்திதேவர் மலர் போன்ற திருக்கரத்தினில் பிரம்பொன்று ஏந்தி, உலவி வரவும், சர்வ லோகங்களுக்கும், ஒப்பற்ற பொருளாகிய பரசிவம், பிரகாசிக்கும் அரிதாகிய அச்சபையின் நடுவே அழகிய சிங்கங்கள் சுமந்த அளவற்ற நவரத்னங்களும் ஒளி மழுங்கப் பிரகாசிக்கும் மாணிக்கங்களும், பதித்த பசும் பொன்னலான ஆசனத்தின் கண் ஒளி மிகுந்த கிரணங்களையுடைய ரவியும் மதியும் கொடிய வடவா முகாக்கினியும் ஒன்று கூடி எவ்விடத்தும் நிலை பெறுமல், அவ் லோகத்தில் ஒதுங்கத் தக்கதாயும், சப்த சமுத்திரங்களையும், ஒரு கணப்போதில் உண்ணத்தக்க ஊழித் தீப்போல் செவ்... சடைகள் பொலியவும், நெற்றிக் கண்ணும் மற்றிரண்டு கண்...ளுமாகிய சோம சூரியாக்கினிகளுடன் பகைக்கும் காந்தி பெற்ற சூலாயுதம் முதலிய பல ஆயுதங்களுடன் பல தோள்கள் விளங்கவும், கொடிய விஷத்தினைத் தரத்தக்க நாகங்களை ஆபரணங்களாக திருமுடி முதல் திருவடி வரையிலு மணிந்தும் இசைபாடும் வண்டுகள் தேன் உண்ணத்தக்க கொன்றைப் பூமாலை அழகுடன் மார்பில் பொலியவும், திருமுடியிற் தரித்த இளம்பிறைச் சந்திரன் அமுதத்தை வழங்கவும், அழகிய கெங்கை அலையினை வீசவும், கோபத்தையுடைய புலியின் தோல் திருவரையில் விளங்கவும், யானையின் தோல் திருமேனியில் போர்க்கவும், மின்னல் போல் மார்புரத்தில் பூநூல் ஒலிக்கவும், வேதங்களால் சொல்லப்பட்ட அளவை அறிந்தவர்கள் காணத்தகுமே யன்றி மற்றவர்களால் காணப்படாத சர்வலோக கர்த்தாவாகிய பரமேஸ்வரர் அழகுடன் வீற்றிருந்தனர்.

சொல்லப்பட்ட அரிய திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருக்கும் தேவதேவனின் இடப்பாகத்தின் கண் ஜகன்மாதாவாகிய பரமேஸ்வரி வீற்றிருக்க, முன் கூறிய தேவர், முனிவர், அரக்கர் முதலிய ஏனையோரும் வரிசை வரிசையாய் வந்து துதித்து விடை பெற்றுச் சென்றனர்.

பின், தேவியாருடன் பரமேஸ்வரர், மகரந்தங்களை அள்ளிக் கொண்டுவரும் தென்றற்காற்று உலவ மற்றோர் ஆலய வாசலை யடைந்து விசாலம் பொருந்திய ஆசனத்தில் அமர்ந்தனர். அக்காலத்தில் அறிய தவத்தினையுடைய அகத்திய முனிவர் ஒருவர் மாத்திரம் துதித்து விடை பெற்றும் தன்னிருப்பிடம் செல்ல மனமில்லாது பின்னும் நந்தீசனின் உத்ரவைப் பெற்று தேவனும் தேவியும் அமர்ந்திருக்கும் ஆலயத்தை அடுத்தனர்.

(தொடரும்)

சட்டம் சட்டமே!

சீதாபதி

'யூனியன் உத்திரவு பெறாமல் போட்டிருக்கும் பந்தலை, இந்த நோட்டீஸ் கண்ட இருபத்திநாலு மணி நேரத்திற்குள் பிரித்து விட வேண்டும்' என்று நோட்டீஸ் கையில் கிடைத்ததும், உலகநாத பிள்ளை அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டார்.

உலகநாத பிள்ளை கிராமத்தில் பிரபல பண்ணையார். அசாத்ய செல்வாக்கு இருந்தது அவருக்கு. அப்போது அங்கு இருந்த சப்-மாஜிஸ்டிரேட் புன்னைவனநாத முதலியார் அவருக்கு ஆப்த நண்பராகி இருந்ததால், செல்வாக்கு, பணம் இரண்டையும் கொண்டு அவர் எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொண்டு விடுவார்.

அவருடைய ஒரே பெண்ணுக்கு கல்யாணம் நிச்சயமாகி பந்தல் தடபுடலாகப் போட ஆரம்பித்து, முடிவடையும் சமயத்தில் இருந்தது. யூனியன் அநுமதி பெற்றுத்தான் தெருவில் பந்தல் போடவேண்டும் என்ற விதி இருந்தபோதிலும், கிராமாந்திரங்களில் முதலில் பந்தலைப் போட்டுக் கொள்வதும், பிறகு ஒப்புக்கு அநுமதி பெற்று அதற்கான வரியைக் கட்டுவதும்தான் சம்பிரதாயமாக இருந்து வந்தது.

யூனியன் போர்டுகளுக்கு எல்லாம் தலைவராக, சர்க்கார் அதிகாரிகளே நியமிக்கப்பட்டு வந்த காலம் அது. கிராம ஆஸ்பத்திரி டாக்டர் சுதர்சனம் பிள்ளை யூனியன் தலைவரானது முதல், அவருடைய அதிகா[ர] தடபுடல் கிராமத்தில் பிராபல்யமா[கி] விட்டது.

பாவம், கிராமவாசிகள் திண்ணைக்கு வெளியே நிழலுக்காக போட்டிருந்த தட்டிகள் எல்லாம், ஒரே உத்திரவில் அகற்றப்பட்டு விட்டன. ஆடுமாடுகளை குளிப்பாட்ட வேண்டுமென்றால் கிராமத்திலிருந்து நாலைந்து மைலுக்குக் குறையாமல் தள்ளிப்போய் ஆற்றில் குளிப்பாட்ட வேண்டும்.

உலகநாத பிள்ளை நோட்டீஸை எடுத்துக் கொண்டு அலறிப் புடைத்துக் கொண்டு யூனியன் ஆபீசுக்கு ஓடிவந்தார்.

'அதெல்லாம் முடியாது. பந்தலை உடனே பிரித்து விட்டுத்தான் மறு ஜோலி பார்க்கணும், யூனியன் உத்திரவுப்படி' என்றார் சுதர்சனம்.

'இல்லே ஸார்! கல்யாணத்துக்கு போட்ட பந்தல். அதை எப்படிப் பிரிப்பது? சகுனத் தடையாகுமே சார்' என்று கெஞ்சினார் உலகநாத பிள்ளை.

'இந்த யோசனை முன்னாலேயே இருந்திருக்கணும். ஒரு ஆபீஸ், சட்டம், இதற்கு என்று ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கிறானே என்று மதித்திருந்தீர்களானால், இப்படிச் செய்வீர்களா' என்று தன் அதிகாரத்தின் முழுபலத்தையும் தொனியில்

காட்டினுர் யூனியன் தலைவர் சுதர்சனம்.

'இல்லே, எப்போதும் கிராம சம்பிரதாயம் இதுதான் ஸார். பந்தலேப் போட்டுவிட்டு பிறகு சாவகாசமாக விண்ணப்ப பாரத்தில் கையெழுத்துப்போட்டு......' என்று எதிரே நின்ற உலகநாத பிள்ளே வாக்கியத்தை முடிக்கவில்லே.

டாக்டர் சுதர்சனத்தின் கை ஒரு தரம் மேஜையை அடித்துக் கொடுத்தது. 'இதோ பாரும்! நீர் பெரிய மிராசுதாராக இருந்து விட்டால், உமது இஷ்டப்படி எல்லாம் செய்துகொண்டிருக்க முடியாது. தெரியுமா? அந்தக் காலம் எல்லாம் மலேயேறி விட்டது. சட்டம் என்ருல் சட்டம் தானுக்கும்! இம்மியளவு கூட மீறி நடக்க விடமாட்டேன் என் காலத்தில். ஜாக்ரதை!' என்று அடித்தொண்டையி லிருந்து மறுபடியும் கர்ஜித்தார் சுதர்சனம். அவர் ராணுவத்தில் உழைத்தவர் என்பதின் சின்னமாக விளங்கும் மீசை முறுக்காக அசைந்து கொடுத்தது, உதடுகள் அசையும்போது

அந்த கர்ஜனேயைக் கேட்ட உலகநாதம் பயந்து போய்விட்டார். அவரிடம் பேசி தப்பித்துக் கொள்வதற்கு வேறு ஒரு வழியும் அவருக்குத் தோன்றவில்லே. 'ஸார், என்னமோ தெரியாமல் செய்துவிட்டேன் இந்தத் தடவை மன்னித்து விடுங்கள். இனிமேல் இப்படி ஏற்படாது,' என்று பல்லேக் காட்டிக் கெஞ்சி, ஒரு மட்டுக்கு பந்தல் பிரிபடாமல் வகை செய்துகொண்டு போவதற்குள் அவர் பட்டபாடு! போதும் போதுமென்ருகி விட்டது.

* * *

கல்யாணம் நடந்து சில நாட்கள் கழிந்து உலகநாத பிள்ளே வீட்டுத் திண்ணேயில் இரண்டு பேர்கள் ஒரு கட்டுச் சீட்டுகளேப் பரப்பிக்கொண்டு 'பிஸ்க்' ஆடிக்கொண்டிருந்தார்கள். ரொம்ப ஸ்வாரஸ்யமாக அவர்கள் சீட்டில் ஈடுபட்டிருந்தும், அவர்கள் வாயிலிருந்து அடியிற் கண்ட சம்பாஷணே கிளம்பிக் கொண்டிருந்தது.

'அவ்வளவு தைர்யமா இந்த சுதர்சனத்துக்கு? நேற்று பிறந்த பயல்! வெளியிலே போய் ஏதோ சண்டையிலே இரண்டு வருஷம் இருந்து, வந்துவிட்டால் இவ்வளவு திமிரா அவனுக்கு!' என்று, உறுமினுர் புன்னேவனநாத முதலியார்.

உலகநாத பிள்ளேக்கு அன்று சுதர்சனம் செய்த கெடுபிடி இன்னும் கண் முன்னுலேயே நின்று கொண்டிருந்தது. 'என்ன போங்க, அன்றைக்கு அவன் கிட்ட தப்பித்துக் கொள்வதற்கு முன்னே என் மானமெல்லாம் போய்விட்டது. கஷ்டகாலம் இவன் கிட்ட பல்லேக் காட்டி கெஞ்ச வேண்டிப் போய்விட்டது' என்று அங்கலாய்த்துக் கொண்டார் உலகநாதம்.

'சட்டமாம் சட்டம்! ரொம்ப சட்டத்தை எல்லாம் கண்டவன்! கோர்ட் சட்டத்திலே கூட சமயத்திலே இரக்கம் காட்டவேண்டி இருக்கு. இவன் ரூல்படி தான் நடக்கிருனுக்கும்! பார்ப்போம்; சமயம் வராமலா போய்விடும்' என்ருர் முதலியார்.

'என்னவோ சார், இந்தப்பயல் கொட்டத்தை கொஞ்சம் அடக்கிஞல்தான் தேவலே. இல்லாவிட்டால் இந்த ஊரிலேயே மனுசன் குடி இருக்க விடமாட்டான்' என்ருர் உலகநாதம்.

* * *

சில மாதங்கள் கழிந்து போய் விட்டன. பகல் பத்துமணி சமயம் இருக்கும். டாக்டர் சுதர்சனம் ஸ்நானம் செய்துவிட்டு மடியாக பட்டு ஒன்றை உடுத்திக்கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். ஆனுல் அவர் நெற்றியில் விபூதி ஒன்றும்

நெற்றியாக இருந்தது.

'எசமான்' என்று அருகில் குரல் கேட்க சுதர்சனம் திரும்பிப் பார்த்தார். டவாலி போட்டுக்கொண்டு, ஒரு சர்க்கார் கவர் ஒன்றை அவரிடம் நீட்டினான் கோர்ட்டுச் சேவகன்.

'என்னடா இது! பூசை வேளையில், என்று கொண்டே எறிச்சலுடன் அதை விருட்டென்று அவன் கையிலிருந்து பிடுங்கி, கவரை பரபரவென்று கிழித்து கடிதத்தை சுதர்சனம் படித்தார். அந்த உத்தரவு :—

'.........இடத்தில் விஷமிடப்பட்டு கொன்று புதைத்து விட்டதாகச் சொல்லப்படும் .... ருக்குச் சொந்தமான காளைமாட்டை உடனே பரிசோதனைசெய்து பார்த்து, அது விஷமிடப் பட்டதா அல்லது இயற்கையாக இறந்ததா என்ற விபரத்தை கோர்ட்டாருக்கு தெரியப் படுத்தவும்.........'

இதைப் படித்த சுதர்சனத்தின் முகம் மாறினது. சரிதான், நல்ல நாள் பார்த்து வந்திருக்கிறது இந்த வேலை' என்று முனகிக் கொண்டே கோர்ட் சேவகனை இருக்கச் சொல்லி விட்டு உள்ளே சென்று ஒரு கடிதம் எழுதினார். கடிதம்:—

'...இன்று என் தகப்பனாருக்கு திதியாக இருப்பதால் நாளை இந்த வேலையைச் செய்வதற்கு எனக்கு அவகாசம் கொடுக்கவும். விவரமான தகவல் நாளை கொடுக்கிறேன்.......'

கடிதத்தை கோர்ட் சேவகனிடம் கொடுத்து திதிக்கான ஏற்பாடுகளை செய்வதில் சுதர்சனம் முனைந்திருந்தார். கொஞ்சநாழிகை ஆனதும் மறுபடியும் கோர்ட் சேவகன் குரல் எழவாக இருக்கிறது', என்று ... கொண்டே சுதர்சனம் வாசலுக்கு வந்தார்.

சேவகன் இன்னொரு கவரை அவரிடம் நீட்டினான். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் கோபத்துடன் அந்த கவரைப் பிடுங்கி உடைத்து படிக்க ஆரம்பித்தார் சுதர்சனம்.

இரண்டு வரிகள்தான் அவ்ர் படித்திருப்பார். அவர் முகம் சுருங்க ஆரம்பித்தது. அதை முடிப்பதற்குள் அவர் முகம் அப்படியே நீண்டு தொங்கிவிட்டது. ஆய்ந்து ஓய்ந்து போய் கடிதத்தை வீசி ஒரு மூலையில் எறிந்தார் சுதர்சனம். கடிதம்:—

......சட்டம் சட்டம்தான் என்பதை கோர்ட் வற்புறுத்துகிறது. தனி மனிதர்களின் தன்மையை அது கவனிக்க முடியாது. ஆகவே கோர்ட்டாரின் முந்தின உத்திரவுப்படி அந்த பரீக்ஷையை நடத்தி, இன்று மாலைக்குள் ரிபோர்ட் அனுப்ப வேண்டுமென யூனியன் தலைவர், சர்க்கார் கிராம ஆஸ்பத்திரி டாக்டர் ஸ்ரீ சுதர்னத்துக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அடியில் சப்மாஜிஸ்டிரேட் புன்னைவனநாத முதலியாரின் கையெழுத்து இருந்தது.

'அட, கஷ்டமே! திதியன்று செத்த மாட்டுப் பரீக்ஷையா' என்று ஓங்கித் தலையில் அடித்துக் கொண்டார் ஸ்ரீ சுதர்சனம்.

'சட்டம் சட்டமே', என்று முன்பு பண்ணையார் உலகநாதம் பிள்ளையை அவர் படுத்திவைத்த பாடு, அவர் ஞாபகத்துக்கு அப்போது வராமல் இருக்க முடியுமா?

திரும்பிய உயிர்.

(ஆர். சண்முக சுந்தரம்.)

இளவேனிற் காலத்து நிலா வானவீதியில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஜில்லென்று வேப்பங்காற்றின் மணம் நிறைந்த அந்த முன்வாசலின் ஓரமாகக் கட்டிலில் படுத்திருந்தான் கருப்பணன்.

பாதிராத்திரி சமயத்திற்கு மேலிருக்கும். கிராமம் முழுதும் ஆழ்ந்த உறக்கத்திலும், ஸ்வப்பன மயக்கத்திலும் மூழ்கிக் கிடந்தது. பூர்ண சந்திரிகையில் ரமித்திருந்த அந்தக் கோலாகலத்தைக் கண்டு களிக்க யாருமில்லையே என்ற துக்கத்தால் தலை ஆட்டுவன போன்று, நிலவில் குளித்தெழுந்த உச்சாணிக்கிளைகள், சற்றைக்கொருதரம் தலையசைத்துச் சத்தம் செய்தன. எங்கிருந்தோ இந்த சௌந்தர்யத்தால் தீண்டப்பட்ட, உள்ளத்திலிருந்து பொங்கிய ஆனந்தம், குழல் வழியாக வழிந்து கொண்டிருந்தது.

இந்த மாதிரியான அற்புத நாதம், அதுவும் அந்நேரத்தில், பக்கத்துப் பட்டிகளில் படுத்திருக்கும் பண்ட மேய்க்கிற பையன்களிடமிருந்து கேட்பது உண்டு. அப்போதெல்லாம் கருப்பணன் அதை எவ்வாறு ரசித்தான்? ஆனால் இன்றோ? மனம் ஒன்றில் ஆழ்ந்து லயித்துவிட்டால் மற்ற விஷயங்களுக்கு இடம் ஏது?

கருப்பணன் கட்டிலிலிருந்து எழுந்தான். சிறிது நேரம் அங்குமிங்கும் நடந்துவிட்டு, மறுபடியும் கட்டிலில் போய் உட்கார்ந்தான். கட்டிலுக்குக் கீழே அவனுடைய போர்வை கால்பட்டு உருண்டு கீழே விழுந்திருந்தது. அதை எடுக்கலாமென்று குனிந்தவன், பின் எதையோ ஞாபகப்படுத்திக்கொள்ள முயலுபவன் போல் நிமிர்ந்து உட்கார்ந்தான். அர்த்தமின்றி எதிர்த் திசையில் அவன் பார்வை சென்றது.

அதே சமயம், வேப்பமரத்து வேரில் கட்டியிருந்த வெள்ளைக் காளையும் 'அம்மா' வென்று கத்தியது. அதன் அழைப்புக்குரலைக் கேட்டதும் சட்டென்று கருப்பணன் எழுந்துவிட்டான். அருகிலிருந்த கம்பம் போரிலிருந்து ஒரு தாவு பிடுங்கிப்போய், காளையின் கிட்டத் தூவிவிட்டு, தாளியிலிருந்த கழுநீரையும் கலக்கிவிட்டான். கலங்காதிருந்த புண்ணாக்கில் கை பட்டதும், 'குப்' பென்று ஒருவித வாசனை எழுந்தது.

கருப்பணன் கொஞ்ச நேரம் காளையின் முதுகைத் தடவிக்

கொடுத்துக் கொண்டிருந்தான். அதன் கொம்பை ஆர்வத்துடன் நீவி விட்டான். பின்பு ஒரு தாய் தன் குழந்தையை அன்புடன் பார்த்துக்கொண்டிருப்பதுபோல், அங்கேயே கண் கொட்டாமல் காளையைக் கவனித்தபடி உட்கார்ந்து விட்டான்.

அந்தச் சமயம், இவன் நேற்றுச் சொல்லிய சங்கதியை கேட்டிருந்தவர்கள் யாராவது கண்டிருந்தால், "விடிந்ததும் சந்தைக்குக் கொண்டுபோகிற காளைக்கு இத்தனை பணிக்கை பண்ணுவானேன்?" என்றுதான் வியந்திருப்பார்கள். ஆனால் அவனால் அப்படியிருக்க முடியவில்லையே!

முதலாவது அந்தக் காளையை விற்பதற்கே அவனுக்கு விருப்பமில்லை. இருந்தாலும் என்ன செய்வது? விற்கவேண்டிய காலம் வந்து விட்டதே! கருப்பணனுக்கு அங்கு உட்கார்ந்து அதைப் பார்க்கப் பார்க்க துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

'நாளையோடு தீர்ந்தது. அப்புறம் யாராவது விலைக்கு வாங்கிக்கொண்டு போய்விட்டால் பின் அந்தப் பொருள் அவர்களுக்கே சொந்தம். என்ன வேண்டுமானாலும் இஷ்டப்படி செய்யலாம். கவலையில் பூட்டி, ஏரில் கட்டி, தாம்பில் அடித்து, இன்னும் வண்டிச் சவாரியில் தார் போட்டு முடுக்கி, எப்படி வேண்டுமானாலும் அலைக்கழிக்கலாம். யார் வேண்டாம் என்று தடுப்பது? தன்னைப்போல் அவ்வளவு பாங்காக கவனிக்கும்படி யாரையும் கட்டளையிட முடியாதே' யென்று நினைக்கையில், கருப்பணன் மூளை கல[illegible] மாதிரியே இருந்தது.

சாதாரணமாக இடை வெளியில் வந்து போகிற மாடுகளாயிருந்தால்கூட அவன் இவ்வளவு வியாகூலப் பட்டிருக்க மாட்டான். அந்தக் காளை அவனுக்குக் கிடைத்ததே ஒரு தனி வழி. அதை நினைக்கவும் அவன் மனம் கலங்கினது.

எட்டு வருஷங்களுக்கு முன் தன் கலியாணம் நடந்த மறு மாசம் மாமனார் வீட்டுக்குப் போயிருந்தான். அந்தக் காலத்தில் இரண்டு குடும்பங்களும் எடுப்பாகவே இருந்தன. ஒண்டிக்காடு வைத்திருக்கிறவர்கள் இவர்களிடம்தான் ஏர் கட்ட எருதுக்காக வருவார்கள். அந்த மாதிரி தாராளம் தழும்பி வழிந்து கொண்டிருந்ததினால்தான், அவனுடைய மாமனாருக்கும் அப்படிச் சொல்லத் தோன்றியது. கருப்பணன் ஊருக்குப் புறப்பட்டு வருகையில், 'மாப்பிள்ளை, இந்தச் சேங்கண்ணையும் புடிச்சிட்டுப் போங்க. இது பெரிய மாட்டு வர்க்கமுங்க. நம்ம தங்கத்துக்கு இது மேலே உசிர்' என்று சொன்னார்.

கருப்பணன் சிரித்தான். தங்கத்தின் உயிரை மாமனார் வீட்டில் விட்டு விட்டு, வெறும் 'கூண்டை'த் தன்னோடு அழைத்துப்போக விரும்பவில்லை அவன். "சரி, நீயே அதைப் பிடிச்சிக்கிட்டு வா" என்று தன் மனைவியிடம் கூறியது இன்னும் நினைவிருந்தது.

இன்று அதையெல்லாம் நினைத்துப் பயன் என்ன? சம்சாரத்

தில் ஏற்பட்ட கஷ்ட நிஷ்டூரத்தைச் சகியாது அந்தக் காளையையும் விற்கவேண்டி வந்துவிட்டது. அடுத்த நாள் சந்தைக்குப் பிடித்துப் போவதென்றும் தீர்மானித்து விட்டான்.

எழுந்துபோய் படுக்கவும் கருப்பணனுக்குத் தோன்றவில்லை; உட்கார்ந்திருக்கவும் பிடிக்கவில்லை. அவனுடைய மனதில் எண்ணங்கள் மலைபோல் எழுந்து வளர்ந்தன. முடிவே யில்லையோ என்று சொல்லும்படி ஈசல் கும்பல் மாதிரி சிந்தனைகள் குவிந்துகொண்டே யிருந்தன. சமாதானம் இல்லாமல் தன்னைத்தானே சலித்தபடி இருந்தான் அவன்.

விற்காமலே இருந்துவிடலாமா வென்று ஒருதரம் எண்ணுவான். அப்படி யிருக்கவும் முடியாதே என்று அடுத்த நிமிஷமே தோன்றும். மழை துளித்து, காடு நனைந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டதே! ஊரிலே எல்லோரும் விதைவிதைக்க ஆரம்பித்துவிட்டார்களே! உண்பாரைப் பார்த்திருந்தாலும் உழுவாரைப் பார்த்திருக்க முடியுமா? தவிர, காடு காய்ந்துவிட்டால் முச்சூடும் வெட்டியாகி விடுமல்லவா? வேறு ஏதாவது ஒன்றை விற்கலாமா வென்று யோசிப்பான். ஆனால் பாக்கி யிருக்கும் கிழடுகளை யார் விலை கொடுத்து வாங்குவார்கள்? அவன் வேண்டுமானால் உழவில் பூட்டிச் சிரழியலாம். இந்த ஒரு வழியைத் தவிர வேறு எந்த மார்க்கமும் இல்லை யென்று பட்டது அவனுக்கு.

கடைசியாக நிலை கொள்ளாமல் தடுமாறும் புத்தி ஸ்வாதீனமற்றவனைப் போல சலிப்புடன் வந்து படுக்கையில் விழுந்தான். காற்று குளிர்ந்துதான் அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவனுடைய ஹிருதய ஜ்வாலையைத் தணிக்க முடியவில்லையே! வெளிக் காற்றுக்கு அவ்வளவு சக்தி ஏது?

* * *

அடுத்த நாள் கருப்பணன் கோழி கூவுவதற்கு முன்பே எழுந்து விட்டான். முதல் வேலையாகக் காளையை இடம் மாற்றிக் கட்டிவிட்டு, சாலையில்படுத்திருந்த பையனிடம் கட்டுத் தறையை ஒழுங்குபடுத்தச் சொன்னான். பின்பு சந்தையில் என்னென்ன சாமான்கள் வாங்கி வருவது என்பதை ஞாபகப்படுத்தத் தன் மனைவியிடம் போனான். அவள் அப்போதுதான் எழுந்து வாசல் தெளிக்க சாணி கலக்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கவும் அவனுக்கு என்னவெல்லாமோ பழைய சம்பவங்கள் முன்னுக்கு ஓடிவந்து நின்றன. சரி, அப்புறம் கேட்டுக் கொள்ளலாமெனத் தன் வேலையைக் கவனிக்கலானான்.

ஆச்சு, எல்லா வேலைகளையும் கச்சிதமாக முடிப்பதற்குள் பொழுது வெளிக்குமேல் வந்துவிட்டது. பயணக் கோலத்துடன் காளையைத் தலைக் கயிற்றுடன் பிடித்துக்கொண்டு வாசலுக்கு முன் வந்து நின்றான். அவன் மனைவி அவனை வழியனுப்பிவிட ஒரு கையை வாசல்படியிலும், மற்றொரு கையை நிலையிலும் ஊன்றிப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

கருப்பணன் காளையுடன் தன் எதிரில் நிற்பதைப் பார்த்ததும்

அவளுக்கு என்னென்ன ஞாபகங்கள் வந்தனவோ? அவள் கண்களில் நீர் திரண்டது. அவளுடைய உதடுகள் எதையோ சொல்ல முடியாததை வெளியிட முயலுவதுபோல, அசைந்து கொடுத்தன. தன் கணவனின் சவத்தின்முன் கண்ணீர் வடிக்கும் பெண் மாதிரி அத்தனை விசனத்துடன் அவள் நின்றிருந்தாள்.

இதைக்காண கருப்பணனுக்கு சகிக்கவில்லை. சட்டென்று அங்கிருந்து கிளம்பிவிட வேண்டுமென்று, "சரி, நான் போய்த்து வாறேன்" என்று புறப்பட்டான். அவளும் தலையாலேதான், "போய் வா" என்று விடை கொடுத்தாள். ஆனல் க்ஷணத்தில் அவளுடைய மனதில் மகத்தான மாறுதல் ஏற்பட்டுவிட்டது.

"நில்லுங்க" என்று வாய் விட்டுக் கத்திக்கொண்டு முன்னுக்கு ஓடிவந்தாள். கருப்பணன் பிரமை நீங்காதவனய், "ஏன்? என்ன?" என்ருன்.

"நீங்க அதை விக்கவாணும்வாணும்! சந்தைக்குக் கொண்டு போகவாணும்...."

"பின்னே பணத்துக்கு......"

"என் மங்கிலியம்......"

"என்ன; உன் தாலியா?"

"ஆமாம், இதோ கொடுக்கிறேன். இந்தாங்க, இதை வித்து வேண்டியதை வாங்கிக்கொள்ளுங்க! என் உயிர் இங்கேயே இருக்கட்டும். நான் இருக்கிற மட்டும் இதைப் பிரியவிடமாட்டேன்" என்ருள், தன் உறுதியில் சற்றும் தணியாமல்.

கல்வாழை நாகரிகம்

(கரிச்சான்)

சென்னையில் கடற்கரை அமைந்திருப்பதுபோல வேறு எங்குமே அமையவில்லையாம். இதாலியின் 'பிராமிநேடு'களையும் பிரான்ஸின் 'ரூக்'களையும்பற்றி நாவல்களில் படித்திருக்கிறோம். நமது கடற்கரைக்கு சமானமான இடம் எங்கும் கிடைக்காது என்று விடலாம். அதுவும் மாலை நேரத்தில் ஒருமணி நேரம் கவலையைக் காற்றில் விட்டுவிட்டு, உல்லாசமாகக் கரையோரமாக உலவி, எதிர்ப்படும் எழில் காட்சிகளைக் கண்டு மகிழ்வதென்றால் அது எங்கும் கிடைக்கக்கூடிய இன்பமா? அழகைக் கார் காராக ஏற்றி எங்கோ கொண்டுபோவது போல எவ்வளவு நடமாட்டம், எவ்வளவு நிறைவு, உயிர் ஓட்டம்!

கடல் எவ்வளவு கிட்ட இருக்கிறது என்பதை நினைத்துப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. ஏதோவொரு மந்திரக் கட்டுக்குட்பட்ட பாம்புகள் போல அலைகள் படமெடுத்துச் சீறிவந்து வந்து கரையைத் தீண்டமுடியாமல் தோற்றுப்பின்னடைகின்றன. ஓய்ச்சல் ஒழிவில்லாமல், எங்கிருந்தோ மூண்டுவரும் ஒரு மகத்தான கோபம் வார்த்தைக் கரையில் வந்து மோதினதும், சிதறி மறைவதுபோல அலைகளின் ஆக்கிரகம் மூண்டுமூண்டு வந்து கரையில் உடைபடுகிறது.

நேற்றுமாலை கடற்கரையோரமாகப் போய்க்கொண்டிருந்த பொழுதுதான் திடீரென்று அதன் அங்கம் என் கண்ணைக் குத்திற்று. சென்னையில் எங்கும் எப்பொழுதும் இந்த மணமற்ற நாகரீகத்தின் காட்சிகள் கண்களில் தென்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் மாலையில், பிற்பகலின் உளைச்சல் முடிந்த பிறகு, மனதும் உடலும் அமைதியிலும் குளுமையிலும் இளைப்பாறும்பொழுது தான், அதன் சாரமற்ற தோற்றங்கள் அவ்வளவு தெளிவாகக் கண்களில் படுகின்றன. அவற்றைப்பற்றி யோசிக்கவும்கூட அப்பொழுது தான் கொஞ்சம் ஒடுகிறது.

ரோடோரமாக 'நெடுக'க் கல்வாழை வைத்துப் பரிபாலிக்கிறார்களே அதைப் பார்த்துத்தான் எனக்கு அவ்வளவு உணர்ச்சிப் பெருக்கு ஏற்பட்டது. சிகப்பும் ஆரஞ்சும் மஞ்சளுமாக அந்தச் செடிகளில் பூத்திருந்த பூக்கள் என் கண்களுக்கு விபரீதமாகப் பட்டன. அதிக பட்டு கொண்ட அந்த வர்ண வீச்சு எனக்கு ஒரு வித வெறுப்பைக்கூடக் கொடுத்தது. கட்டவிழ்த்துக் கிடந்த ஆழ்ந்த புண்கள்போலத் தென்பட்டன அவைகள்.

நவீன நாகரீகத்திற்கே ஒரு சின்னம்போல அவை அங்கே

இடைவிடாமல் பூத்துக்கொண்டிருக்கின்றன. கல்வாழைப் பூவில் என்ன வசீகரத்தன்மை இருக்கிறதென்பது எனக்கு விளங்கவில்லை. அவை ஜீவசத்து பெற்றவையாகக் கூடத் தென்படவில்லையே! வெறும் வர்ணக் காகிதங்களில் செய்யப்பட்ட பூக்கள் போலத்தான் இருக்கின்றன. வெறும் வெள்ளையிலிருக்கும் உயிர்கூட அவற்றில் இல்லை.

லவலேசமும் வாசனையற்ற இந்தப் பூக்களை ஏன் அங்கே வைத்து வளர்க்கிறார்கள்? வாசனையில்லாத பூவும் ஒரு பூவா? நல்ல வாசனையுள்ள புஷ்பச் செடிகளை வைத்தால் என்ன? பவழமல்லிகைச் செடிகள் கொஞ்ச தூரத்துக்கு ஒன்றாக இருந்தால் கூடப் போதாதா? எதற்காக இந்தக் கல்வாழை?

பகட்டு மோகம் — வெறும் ‘வெளிச்சம் போடும்’ வர்ணத்தில் மோகம்—அதுதான் காரணம். அதே மாதிரித்தான் சென்னைப் பெண்களின் கனகாம்பர மோகம் கூட. எதற்காக அந்தத் திராபைப் புஷ்டத்தை நவநாகரிக மாதுகள் சுமை சுமையாகத் தலையில் வைத்துக்கொள்ளுகிறார்கள்? பகட்டில் இருக்கும் மோகம். உயிர் சத்தின் மணம் அற்ற பகட்டில்தான் நவ நாகரிகம் திளைக்கிறது.

வெறும் வெள்ளையான மல்லிகையில்—வாசனை ஒருபுற மிருக்கட்டும் - இதழ்களில் என்ன உயர் இருக்கிறது? நமக்கு இப்பொழுது அது பிடிக்கிறதில்லை. நமது நாகரிகத்திற்கு உணர்ச்சியும் உயிரும் தேவையில்லை. அவை ‘பத்தாம் பசலி’ சாமான்கள். இப்பொழுது தேவையானது—கல்வாழையைப் போலவும், கனகாம்பரத்தைப் போலவும் பித்தலாட்ட இன்பங்கள்தான். இமிடேஷன் வைரங்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஜாப்தாவில் நீரோடும், நெருப்புத் துணுக்கள் போன்ற, சிகப்பு ரத்தினங்களுக்கு இப்பொழுது மதிப்பேது? அவற்றை யார் இப்பொழுது சீந்துகிறார்கள்?

பகட்டு நிலைக்குமா என்ற நினைவே நமக்கு வருகிறதில்லை. ஏன்? நிலைக்கவேண்டிய அவசியமே இல்லையே! அந்த நிமிஷம் இருந்தால் போதும். நிமிஷத்துக்கு நிமிஷம்தானே வாழ்வே நமக்கு நடைபெறுகிறது!

இந்தப் புதுமை வாழ்வில் உயிரில்லை, உணர்வில்லை. உயர்ந்த ஆசாபாசங்கள் கிடையாது. பற்று கிடையாது; பசை கிடையாது. ஓட்டை வெங்கலம் போன்ற ஒரு பொய்ச் சத்தம்தான் அதன் செல்லுபடி அடையாளம். ஆனால் ...இதெல்லாம் எதற்கு?

நீர்த்திவிலைகள் நிறைந்த காற்று கடலிலிருந்து வந்து அடிக்கிறது; ரேடியோவில் யாரோ ஒரு நாயனக்காரன் நாட்டைக்குறிஞ்சி ராகததை விஸ்தரித்து காற்றில் வீசுகிறான். இளமை ததும்பிய சிறு பெண்கள் கொம்மாளம் போட்டுக்கொண்டு அலையை நோக்கி ஓடுகிறார்கள். வாழ்க்கையில் இன்னும் இன்பம் இருக்கிறது! அப்பாட!

'சக்குபாயில்'

நீருண்ட மேகங்கள்



'திருநீலகண்டரில்'

சி. ராஜகோபாலாசாரியார்

(நீடூழி எழுதியது)

பௌதிக சாஸ்திர விஷயங்களை மீறியதைச் சொல்லும்போது எது தேவை என்பதை ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் ஒரு இடத்தில் பின்வருமாறு சொல்லுகிறார்.

——“பக்தி வேண்டும், தியானம் வேண்டும், சாந்தி வேண்டும், நியமம் வேண்டும், தவம் வேண்டும்......”—

இன்னொரிடத்தில் காதலைப்பற்றி சொல்லும் பொழுது, —“காதல் என்பதும் மற்ற பிரகிருதி சக்திகளைப்போல ஆண்டவனுடைய சுவரூபமேயாகும். அதை எந்தக் கோயிலிலும் ஆராதித்து தரிசிக்கலாம். ஆனால் பக்தி வேண்டும்; சிரத்தை வேண்டும். எக் கோயிலிலும் பக்தி இருப்பின் ஈசுவரன் இருக்கிறான்......”—

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரை சரியாக இருபது வருடங்களுக்கு முன் நேரில் மூன்று தினங்கள் அடுத்து அடுத்து ஒரு நண்பருடைய உதவியைக் கொண்டு பார்த்தது இன்றும் நினைவில் தெளிவாக இருக்கிறது. அந்த சமயம் அவரை “சாதகன்” என்று தெரிந்து கொள்ளவில்லை. புகழ் ஓங்கி யிருக்கும் இந்த காலத்தில், பலர் அவரைப் பல துறைகளில் சிலாகித்துப் பேசும்போது, அவரிடம் நெருங்கிய பழக்கமில்லாத நான், அவருடைய பெருமை அனைத்திற்கும் ஆதாரமான அவருடைய சாதனையைக் குறித்து இரண்டொரு வரி எழுதத் துணிகிறேன்.

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாருடைய எழுத்துக்களை நான் ரொம்ப வாசித்தது கிடையாது. மேலே மேற்கோளாகக் காட்டியுள்ள இரண்டு வாக்கியங்கள் மட்டிலும் எனக்குக் கிடைக்குமாகில், அவருடைய மற்ற எழுத்துக்களை எல்லாம் வாசிக்கணும் என்ற அவசியமும் நிர்ப்பந்தமும் இருப்பதாக நான் கொள்ளமாட்டேன். மனிதன் முக்கியம்—அதாவது மனிதனுக்குப் பின்னாலோ

அல்லது அவனுள்ளிருந்தோ அவனை ஆட்டிவைக்கும் சக்திக்கே முக்கிய ஸ்தானம். சக்தியின் விளையாட்டை, தனது அகம்பாவத்தினால் மறைக்காது, விளங்கச் செய்யும் ஜனங்கள் வெகு சொற்பம். ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார், சக்தியை வழிபடுகிறவர்—சக்தியை வழிபட்டு, அவள் கட்டளையை நிர்மாணிக்கும் சாதகர். இல்லாவிடில் இவ்விதம் வலியுறச் சொல்வாரா?—"பாரமார்த்திக விஷயங்களை ஆராய்ச்சி செய்ய பக்தியும், நியமமும், சுத்தமும், தியானமும், கடவுளை வந்தித்தலும், தவமும் வேண்டும்"—என்று அழுத்தமாகச் சொல்ல முடியுமா?

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் நெடுநாள் சாதனை புரிந்திருக்க வேண்டும்—பச்சைத் தமிழில் சொல்லுமிடத்து—உள்ளத்தில் ஆழ்ந்து, உள்ளத்தொனியின் குறிப்படிக்கு பயின்று, புறத்தை வழிக்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அவரிடம் பிரத்தியேக ஒளியும் உறுதியும் இருப்பதற்குக் காரணமென்ன?

என்னுடைய உள்ளத்தில், பல சமயங்களில், கவி பாரதியாருக்கும், ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியருக்கும் உள்ள வித்தியாசமென்னவென்று நினைத்ததுண்டு. முதன் முதலாக பாரதியாரிடம் நெருங்கி பல வருஷங்கள் பழகி இருக்கிறேன் என்பதையும், ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரை வெகு தொலையிலிருந்தே அறிவேன் — அறியமாட்டேன் என்று சொல்வதே சரி — என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயினும், பாரதி உண்மையில் யார்? ராஜகோபாலாசாரியார் யார்? என் நெஞ்சின் கண்களுக்கு கீழ்க்கண்டமாதிரி படுகிறார்கள். பாரதி மண் உலகத்து ஆசாமி அன்று. மண் உலகத்திற்கு புறம்பேயுள்ள, எதோ ஒரு உலகத்து ஜீவன் — தான் பூண்ட உடலில் சரிவர ஆவாகன மாகாத தேவன். ஆனது பற்றியே, அவருக்கு விடுதலை என்ற எண்ணம் நெஞ்சில் உதயமான உடனேயே, அதை அடைந்து விட்டதாகவும் எண்ணிவந்தார். இது மண்ணுலக வழக்கமன்று. இந்திரனுலகில், கல்பக விருட்சத்தின் நிழலில், நினைத்த மாத்திரத்திலேயே எதையும் பெற்றுவந்த வழக்கத்தை அவரால் கடைசிவரை மறக்க முடியவில்லை. அவருடைய மந்திரம் வேட்கையை உண்டு பண்ணும் தன்மையது — தாகத்தை எழுப்ப வல்லது. பிரக்ஞை உண்டாகும் காலத்தில் எழும் "சொல்லை" ஒத்தது.

எனது நம்பிக்கைப் படிக்கு ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரும் தேவலோகத்து ஆசாமியே. ஆனால் சிருஷ்டிக்கும்பொழுது பிரமன் தேவலோகத்து உயிரையும் இப்புவியின் மண்ணையும் ஒன்று சேர்த்து பிசைந்து உருவாக்கிவிட்டான்போலும். பாரதியாருக்கு மண்ணுலகைப்பற்றிய நினைவே கிடையாது—எப்பொழுதும் சொந்த ஊர் ஞாபகமே. ஸ்ரீ ராஜகோபாலாசாரியருக்கோ எப்பொழுதும் நம்மைப்போன்ற சாதாரண மனிதர்களைப்போல் சதா சர்வ காலமும் மண்ணுலகைப்பற்றிய மறதியே கிடையாது. ஆனால் நம்மிடமில்லாத ஒரு விசேஷ குணமுண்டு — அமரர்களத்துத் தன்மைகளை இங்கு — இந்த மண்ணில் எப்படி வார்த்து உருவாக்கித் தரலாம் என்று இடைவிடாது முயற்சிப்பவர். அவருடைய நிர்மாண சக்தியின் ஒலியை அவருடைய வாக்கிலேயே கேட்பீர்களாகவும் — "அடுப்பை மூட்டி, விளக்கை ஏற்றிக் காத்து வாழ்வோமாக"—

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரிடத்து பகட்டென்பதையே காணோம். "அடுப்பை மூட்டி விளக்கை ஏற்றிக் காத்து வாழ்வோமாக" என்று அவர் வாயிலேயிருந்து வருகிறதேயொழிய — "பந்தங் கொளுத்துவோம் அல்லது தீவட்டி எரிப்போம்" என்பது போன்ற பேச்சுக்களை அவரிடம் காண்பது அரிதாக இருக்கிறது.

ஒரு மனிதன் தன்னுடைய தார்க்கிக சக்தியினால் பெரியோன் ஆகமாட்டான். உதாரணம் பல தார்க்கிக அசடுகளுடன் எனக்கு பரிச்சயமுண்டு — அசடுகள் மட்டுமல்ல — கையிலாகாத தார்க்கிகர்கள். மனிதன் எழுத்துத் திறனினால் மட்டிலும் பெரியோன் ஆகமாட்டான் — உதாரணம் எனக்குத் தெரிந்த எழுத்தில் வல்லார் ஒருவர் கூளங் கூளமாக எழுதித் தள்ளினபடியே இருக்கிறார். நோக்கம் — எல்லாரையும் பார்த்து: "நான் எவ்வளவு கெட்டிக்காரன் பார்த்தீர்களா? (எனக்கு எத்தனை பாஷைகள் தெரிஞ்சிருக்குது பார்த்தீர்களா?)......" என்று சொல்வதேயாகும்.

பெரியோனாவதற்கு என்னதான் வேண்டும்? கேவலம் முழு முட்டாளாக மட்டிலும் இருந்துவிட்டால் போதுமா?

பெரியார்கள் சாதாரணமாக பிறப்பிலேயே—அவ்வாறே பிறந்துவிடுகிறார்கள். அவ்வாறு பிறக்காத காலத்து தவத்தினால் பெரியவன் ஆகிவிடலாம்.

பெரியவனாதல் என்பதென்ன ?

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியருடைய வாழ்க்கையி லிருந்தே இதைத் தெளியலாம்.

படிப்பினால் பெரியவன், திறமையினால் பெரியவன், என பல வகை பெருமைக ளிருப்பினும், உளத்தின் உண்மையினால் பெரியவனாதல் தனி வழி. மற்ற அனைத்தும் புறத்திருந்து மதிப்பை எதிர் பார்க்கிறது. உள்ளத்தின் உண்மை வழிக்கு, மதிப்பு உள்ளத்தினின்றே எழும்.

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரி பிரதம மந்திரியாக இல்லாம லிருக்கலாம்; எழுத்து வாசனை அற்றவராக இருக்கலாம் — அவர் மேற்சொல்லியவைகளினால் பெரியவரல்ல. அவர் உள்ளக் கனிவினாலும், தவத்தினாலும், வரப்பிரஸாதத்தினாலும், நம்பிக்கையினாலும், பக்தியினாலும், நெஞ்சுத் தெளிவினாலும் மிக, மிகப் பெரியார் — மகான்.

* * *

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரி ஓரிடத்தில் சொல்லுகிறார் :—

—"எத்தனை அழகிய ஆழாக்கானாலும் அதில் உழக்குப் பிடிக்காது...........

மனிதனுடைய புத்தி பரம்பொருளை விட்டுத் தனியாக நிற்க இயலாது. ஆதலால் அப் பரம்பொருளையே இழுத்துச் செல்ல அதனால் முடியாது; அதாவது, அதைத் தன் அறிவெல்லைக்குள் கொண்டு வர முடியாது......"—

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் எவ்வளவு பெரிய பக்தர் என்பதை மேற்காட்டிய மேற்கோள் தெளிவுபடுத்துகிறது— ஞானம் மலர்ந்த பக்தர். அவரது மகத்துவம் அவரிடம் காணப்படும் அன்பின் தெளிவில் மறைந்துளது.

அவரிடம் உள்ள பணிவு, ஈசன் அளவுக்கு அடங்காதவன் என்பதை காண்பிக்கிறது. ஆயினும் நாமும் ஈசனின் அம்சம் என்

பதை மறக்க முடியவில்லை. ஏனெனில், ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாருடைய ஒவ்வொரு செயலும் ஆதி பகவனை நினைவூட்டுகிறது. மனிதன் எல்லைக்குள் சிக்கியவன். இருந்தும் அவனுள் இருக்கும் சேதனப் பொருளின் கருவில் அனந்தம் புதைந்து கிடக்கிறது! எல்லையில் கட்டுப்பட்ட பொருள், எல்லையற்ற பொருளை நினைக்கவும், ஏற்கவும், அதற்கு உருத்தரவும் சக்தி யுள்ளதாக இருப்பதை மனிதனிடை காண்கிறோம். மனிதனுக்கு அப்பால் தேவர்களும் தேவ தேவர்களும் உள்ளார்கள் என்பதும் தெளிவாகிறது.

* * *

ஒரு சாதாரண மனிதனிடம் உற்சாகத்தை எழுப்புவது மிகச் சிரமம். சரியான உற்சாகத்தை எழுப்ப வரன் பெற்றவர்களாலேயே முடியும். உதாரணம் — பாரதி. உற்சாகத்தை நீடிக்கச் செய்தல் அதைவிட சிரமம்; அதை அமைதியில், சிறிதும் குன்றாது நீடிக்கச் செய்தல் இன்னுஞ் சிரமம்; அதை மௌனத்தில் சலிக்கச் செய்து அண்டையிலிருப்பவர்களிடத்து, அவர்களையும் அறியாது, உருவாக்கி இன்பத்தை ஓங்கச் செய்தல், சொல்லியதனைத்தைக் காட்டிலும் சிரமமானது.

பாரதியார் மந்திர சக்தி. ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார்—மந்திர சக்தியை ஆவாகனம் பண்ணித் தருபவர். பாரதியாருக்கு மந்திரத்தைப் பெற்று உச்சாரணம் பண்ணின உடனே, மகத்தான திருப்தி உண்டாவது வழக்கம். ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாலாசாரியாருக்கு—மந்திர சக்தியை களிமண்ணில் இறக்கி உருப்படுத்தின பிறகே நிம்மதி ஏற்படும். இருவரும் இருவகைத் தேவர்கள்.

ஜென்ம நட்சத்திர ஆதிபத்ய குணாதிசயங்கள்.

(4) உரோகணி.

ஜென்ம நட்சத்திரம்:	உரோகணி.
இதற்கதிபதி:	புதன்.
இஷ்ட தேவதை:	பிரம்மா.
பகை:	விசாகத்தில் உதித்தவர்கள்.
உருவம்:	ஆண்.
குணம்:	தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம்:	திங்கள்.
திசாதிபன்:	சந்திரன்.

குணாதிசயங்கள்: பிறர் சொற் கேட்பவன், பண்டிதன், அரச அபிமானி, தான தருமப்பிரியன், இரும்பு முதலிய தொழிற் செய்யப் பிரியப்படுபவன். நெய், பால் முதலிய உணவில் பிரியமுள்ளவன், விசாலம் பொருந்திய நேத்திரமுள்ளவன், நெருங்கிய நெற்றியுள்ளவன், வஞ்சகமில்லாதவன், வலுவுற்ற உள்ளங்கால் உடையவன், திடத்த நடையுடையவன், ஜலப்பிரியன்.

பின்னும் முதற் பாகத்தில் பிறக்கின் முன் சொன்ன பலனுடன், பொருளும், அழகுமுள்ளவன், அலைச்சல் படுவோன், சதா அன்னியர்களைத் துன்பம் செய்வோன், பொறுமை யற்றவன், சூரன், ரோகமுள்ளவன்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் சாந்த குணமுள்ளவனும், ரோகியும், ஆசாரமுள்ளவனும், உண்மை பேசுபவனும், விரும்பிய

பெண்ணை மணஞ் செய்துகொள்பவனும், வாய்ச்சாலனும், ஆசை யுள்ளவனும் ஆவான்.

மூன்றும் பாகத்தில் உதிக்கின் கணித வித்தையறிவோன், சங்கீத முணர்வோன், சுகவானும், காவியப் பிரியனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறந்தவன் உண்மை பேசுவோன், பிறர் சொத்துக்கதிபன், போகத்தில் அதி விருப்பமுடையவனுமாவான்.

(5) மிருகசிரம்.

ஜென்ம நட்சத்திரம் :	மிருகசிரம்.
இதற்கதிபதி :	குரு.
இஷ்டதேவதை :	சந்திரன்.
பகை :	சோதிநட்சத்திரத்தில் பிறந்தவர்
உருவம் :	அலி.
குணம் :	சாத்மீகம்.
சுபப்பலன் தரும்வாரம் :	சனி.
திசாதிபன் :	செவ்வாய்.

குணாதிசயங்கள் : ஸ்நானப்பிரியன், பரந்த கண்களுடையவன், அழகிய ரோமமுடையன், திண்ணிய தேகத்தை யுடையவன், அழுத்தமான மனதுடையவன், இன்னிசைப்பிரியன், தாம்பூலப்பிரியன், நினைத்த காரியத்தை முடிக்கும் வல்லவன், விசாலமான நெற்றியுடையவன், ஞானமுள்ளவன்.

பின்னும் முதற்பாகத்தில் பிறக்கின் முன்சொல்லிய பலன் களுடன் தனவானும், சத்துருக்களை ஜெயிப்பவனும், ஸ்தூலதேகியும், கோபியும், ஆசார பிரஷ்டனும், ராக்ஷச குண முடையவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் எப்போதும் வழக்குள்ளவனும், எதிலும் சந்தேகமுள்ளவனும், சாதுவும், ஸ்ரீலோலனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின் நல்ல குணமுள்ளவனும், உத்தமனும், சந்தோஷமுள்ளவனும், பக்திமானும், ஸ்ரீமானும் ஆவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் காமியும், கோபியும், வஞ்சகனும் ஆவான்.

(6) திருவாதிரை.

ஜென்ம நட்சத்திரம் :	திருவாதிரை.
இதற்கதிபதி :	சுக்கிரன்.
இஷ்டதேவதை :	உருத்திரன்.
பகை :	அவிட்டத்தில் பிறந்தவர்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	ராசதம்.
சுபப்பலன் தரும்வாரம் :	புதன்.
திசாதிபன் :	இராகு.

குணாதிசயங்கள் : பொய் பேசுபவன், ஆனால் கீர்த்தியுள்ளவன், சிலநாள் தரித்திரன், நீண்ட உருவமுள்ளவன், கணுக்களில் நோய் உள்ளவன், கண்கள் சிவப்புடையவன், முன்கோபி, பந்து மித்திரப் பிரியன், பெரிய நாசியை யுடையவனுமாவான்.

இத்துடன் முதற்பாகத்தில் பிறக்கின் முன் சொல்லிய பலன் களுடன், இனிய வசனன், நற்குணன், சாந்தன். மங்கையர்க்கினியன் ஆத்ம ஞானமுடையவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் வார்த்தையால் மயக்குபவன், நிஷ்டூரன், தர்க்கவான் நல்லபெண்ணை போகிப்பவனும், பிரியப்படு பவனும் ஆவான்.

மூன்றும் பாகத்தில் உதிக்கின் வாதரோகமுள்ளவன், தாட்சண்யமில்லாதவன், கோள் உறைப்பவன், பெண்களோடு போகிக்க தன்மை யற்றவனுமாவான்.

நான்காம் பாகத்தில் பிறக்கின் விவேகமுள்ளவனகவும், பந்து ஜன விரோதியாகவும், அழுக்குப்படியும் சரீரமுடையவனகவும், துற்சன கேசியாகவும் இருப்பான்.

( ) புனர்பூசம்.

ஜென்ம நட்சத்திரம் :	புனர்பூசம்.
இதற்கதிபதி :	சனி.
இஷ்டதேவதை :	தேவர்கள்.
பகை :	திருவாதிரையில் பிறந்தவர்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம் :	புதன்.
திசாதிபன் :	குரு.

குணாதிசயங்கள் : சொற் சாதுரியன், அகங்காரத்துவமுள்ளவன், விசால புயமுள்ளவன், இளையாத நடையுடையவன், கடின வார்த்தையுள்ளவன், புத்திமான், பித்ததேகி, பலருக்கும் விருப்பமுள்ளவன், காலில் பின்னமுள்ளவனுமாவன்.

இத்துடன் முதற்பாகத்தில் பிறக்கின் ஸ்தூல தேகியாயும், காமியாயும், செவிடனும், தடித்த ரோமமுள்ளவனும் இருப்பான்.

இரண்டாம் பாகத்தில் பிறக்கின் பித்த உஷ்ண தேகமுடையவனும், சோம்பலுள்ளவனாகவும், துக்ககரனாகவும் இருப்பான்.

மூன்றாம் பாகத்தில் உதித்தவன் கன்ம பிணியாளனும், அலைச்சலுள்ளவனும், காவியமறியாதவனும், தந்தரோகமும் தீர்க்காயுளும் உள்ளவனாக இருப்பான்.

நான்காம் பாகத்தில் உதித்தவன் நல்ல காரியங்களைச் செய்ய பிரியமுள்ளவனும், குள்ளனும், நல்ல அழகுள்ளவனும் பார்வையால் மற்றவரின் தன்மையைத் தெரிபவனும் ஆவான்.

'ஹெவியாக இருக்கு'

"அசுவதி"

ஆங்கில பதப் பிரயோகத்துக்கு மன்னிக்கவேண்டும். சந்தர்ப்பத்தில் அவசரமாகபுரிந்து கொள்வதற்கு ஏதுவாக உபயோகப்படுத்தி இருக்கிறது. அதற்குச் சமமாக ஒரு தமிழ்ப் பதம் கண்டு பிடித்து அதை விளக்க சிரத்தை இல்லாத சோம்பல் நினைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வேண்டுமானால் நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். எப்படியாவது அதன் அர்த்தத்தை உணர்ந்து கொண்டால் சரி; அதன் 'கனத்தை' உணர்த்து பார்த்துக் கொண்டால் சரி.

ஓஹோ! நானே மொழி பெயர்த்து விட்டேனே? 'கனமாக இருக்கு' என்று போட்டிருந்தால்,—இல்லை,—'பாரம் அழுத்துகிறது' என்று மறுமலர்ச்சி பாணியில் போட்டிருந்தால் தலைப்பு புரிந்திருக்குமா? கனத்துக்குக் கல்லையும், பாரத்துக்கு மூட்டையையும், நினைத்துக்கொண்டிருப்பீர்களோ, என்னவோ?

அந்தப் பத்திரிகை கொஞ்சம் 'ஹெவியாக இருக்கு, ஸார்' என்று தெளிவாக அர்த்தம் கொடுக்கப் பேசின ஒரு தொனியைக் கேட்டதும் எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. 'ஏன், இரண்டணா கொடுத்து வாங்குவதற்கு இந்த கனமாவது வேண்டாமா? அதுதானே தற்கால வாசகனுக்கு வேண்டும்? என்ன ஆச்சர்ய பிரகிருதி ஐயா நீர்'? என்று கேட்டேன்.

'இல்லை சார், நான் பத்திரிகை கனத்தைப்பற்றிச் சொல்ல வரவில்லை. எழுத்து கனத்தைப் பற்றிதான் சொன்னேன்' என்று மடக்கிப் பேசினார். அவர் 'எழுத்து கனம்' என்பது அவர் ஆங்கிலத்தில் கூறினதின் என் மொழி பெயர்ப்பு.

அவர், எழுத்து கனமாக இருக்கிறது என்றது, பத்திரிகையில் வெளியான விஷயங்களைப்பற்றி — கட்டுரைகளைப்பற்றி. அதாவது, வெகுவாக ஜீரணிக்க முடியாத சாமான்களைப்போல் அவைகள் இருக்கின்றன என்பது அவருடைய அபிப்பிராயம்.

அவருக்கு, முகத்தில் அடித்தாற்போல், 'ஸார், உங்கள் குடல் ரொம்ப பலஹீனமானது. ஜீரணம் ஆகாததற்கு அதுதான் காரணம்' என்று சொல்லி இருப்பேன். முகாலோகனத்துக்கு இடைஞ்சல் வரும் என்ற நினைப்பில் பின்வாங்கிவிட்டேன்.

நுனிப்புல் மேயும் மிருகத்துக்கு ஒப்புவமை காட்டும் ஒரு

வாசகக் கூட்டத்திற்கு இந்த வாசகர் ஒரு பிரதிநிதி. 'ஹெவியாக இருக்கு' என்று காயத்திரி செய்துகொண்டே காலமெல்லாம் ஓட்டிவரும் ஜன்மம்.

ஒரு கட்டுரையின் தலைப்பில், கொஞ்சம் நிதானித்து மனதைப் பதித்து, அதன் பொருளை கிரஹிக்க வைக்கும் இரண்டு வாக்கியங்கள் இருந்துவிட்டால், அதற்கு உரிய மனப்பக்குவம் இல்லாத சோம்பலில், அந்த கட்டுரையை அப்படியே புரட்டி 'இதெல்லாம் தத்துவார்த்தமானது' என்று தள்ளிவிடும். பார்வையில் விழுந்த க்ஷணத்திலே, மேலெழுந்தவாரியாக உதட்டு அசைவிலேயே அர்த்தமாகக் கூடிய, மூளைக்கு வேலை கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாத, ஒரு விஷயத்திலே கவனத்தை செலுத்தும்.

காலடி பாவாமல் நடந்தே பண்பட்டுப் போய்விட்ட ஒரு உள்ளம் அது. பொழுதுபோகாத நிலைமையில் சுவாரஸ்யத்தை மட்டும் முக்கியமாக கருதி, ரயில் பிரயாணத்தின் கட கட சப்தத்திடையேயும், மோட்டார் ஓட்டத்தின் குலுங்கலிலும் (எவ்வளவுதான் கிரஹிக்க முடியுமோ) நாலுவரிகள் இடையிடையே பிசகினாலும் முழுகிப்போய் விடாது என்ற நினைப்பிலேயே எழுத்துக்களை ஓட்டிவந்திருக்கும் மனசு.

வெறும் சுவாரஸ்யத்திற்காக மட்டும் படிப்பது எழுத்தின் நோக்கம் அல்ல. மனிதனின் மூளை பல துறைகளிலேயும் விரிவடைவதற்கும், புதுப்புது சிந்தனைகளை ஒன்றுக்குப் பத்தாக அவன் மனதிலே நினைத்துப் பார்க்க வழி செய்வதும்தான் எழுத்தின் நோக்கம்.

அதற்காகப் போடப்படும் வித்திலே ஒரு வலு, சொத்தையின்மை இருந்தால்தான், கிளம்பும் முளையிலே, விடும் துளிரிலே, லேசுவில் கருகிப் போய்விடாத ஒரு ஜீவசத்து இருக்கும்.

அஸ்திவாரத்தின் பலத்தைப் பொருத்துதான் இருக்கிறது மேலே அளாவிக் கட்டப்படும் மெத்தைகளின் ஸ்திரநிலை.

'அழுத்தமான வித்து வேண்டாம்' என்பது போலிருக்கிறது 'ஹெவியாக இருக்கு' என்று எழுத்தைப்பற்றி பேசுவது. அர்த்தமற்ற அபிப்ராயம் அது.

எந்த எழுத்தின் பகைப்புலனில் ஒரு ஆழ்ந்த தத்துவம் இருக்கத்தான் செய்கிறது. கீதையின் உபதேசத்தில், சங்கரர் வாக்கில், ஏன், எதிலும். அவைகளில் ஒரு வலு இருந்திராவிட்டால் அதன் அஸ்திவாரத்திலிருந்து கிளம்பிய எந்த ஒரு ஸ்தாபனமோ நிரந்தர ஸ்தானம் பெற்றுவிட முடியாது. மஹாத்மாவின் சத்யாக்ரக எழுத்தில், அஹிம்சை கருத்தில் எவ்வளவு வலிவு இருப்பதனால் அது நம்மை இவ்வளவு ஆகர்ஷித்து இருக்கிறது?

வெறும் சொல் அலங்காரமாக, சிந்தனையைத் தூண்ட முடியாத ஒரு வார்த்தைக் கட்டுக்கோப்பாக, மனோதத்துவத்தைப் பிடித்து இழுத்து வந்து கண்முன்னே நிறுத்தும் சக்தியற்ற ஒரு வாக்யத் தொடர்ச்சியாக மட்டும் எழுத்து அமைவதிலே, சிருஷ்டிக்கு ஒரு பிரபாவம் இல்லை; வாசகனுக்கும் ஒரு பிரயோஜனம் இல்லை.

அழுத்தமான கருத்துக்களை, ஆழ்ந்த உத்வேகம் கொண்ட மெய்ப்பாடுகளை, எடுத்து வெளியே கிளப்பித் தந்துதான் ஆகவேண்டும் சிருஷ்டி கர்த்தா. 'இதெல்லாம் மூளையை குழப்பக்கூடிய கருத்துக்கள்' என்று பக்கத்தைப் புரட்டிச் செல்லும் வாசகன் ஒழிய வேண்டும். எழுத்தின் போக்கில் சிந்தனையை வளரவிடும் வாசக மனது வளரவேண்டும்.

என்றுமே எதுவும் நிரந்தரமாக குழம்பி இருந்தது இல்லை. யுகப் பிரளயம் கூட தெளிந்துபோய் புதுப்புது சகாப்தங்கள் ஆரம்பமாகி இருக்கின்றன. பாற்கடலைக் குழப்பி, கடைந்து எடுத்த நிலையிலேதான் அமிர்தவகைகள் வெளிக் கிளம்பின. இந்தக் குழம்பிலிருந்து என்ன வரப்போகிறது என்று மலைத்து, விட்டுவிடவில்லை அவர்கள்.

மனதைப் பக்குவப் படுத்தி ஆழ்ந்த கருத்துக்களை ஓடவிட்டுப் பார்த்த முடிவு நிலையில்தான் லக்ஷியங்கள் மேலோங்கி வருகின்றன.

ஓரளவு மனப் பக்குவமாவது வாசகர்களுக்கு இருந்துவிட்டால், 'ஹெவியாக இருக்கு' 'மூளையைக் குழப்புகிறது' என்ற அர்த்த மற்ற வார்த்தைகள் பேச நா வராது. எதையும் லேகுவில் கிரஹித்துக் கொள்ளும் ஒரு சக்தி, துணிவு ஏற்பட்டிருக்கும்.

இந்த மனப்பக்குவம் சிறுகச் சிறுக படிப்பின் வழக்கத்திலே வர வேண்டும். வாழ்க்கையை மேலெழுந்த வாரியாகப் பார்க்காமல, அதன் மேடு பள்ளங்களை அலசிப் பார்க்கும் ஒரு அனுபவ நினைப்பிலே ஊறி வரவேண்டும்.

படிப்பின் ஆரம்பத்திலே சக்திக்கு மீறினதை ஜீரணிப்பது சிறிது கஷ்டம்தான்; ஆனால் கஷ்டம் என்பதற்காக அதற்குத் தாழ்ப்பாள் போட்டு விடுவது பெரிய ஆபத்தாகும். நேற்றை விட இன்றைய அறிவின் வளர்ச்சி விரிவானதுதான். இன்றைவிட நாளை இன்னும்—படிப்பிலும் சரி; அனுபவத்திலும் சரி.

படிப்பும், அனுபவமும் இந்த மனப் பக்குவத்துக்கு பகைப் புலன். இந்த மனப் பக்குவத்திலே ரசனை பிறக்கிறது. எதையும் ரசிக்கும் ஒரு தன்மை உண்டாகிறது. இந்த ரசனையிலே மனப் பக்குவத்துக்கு இன்னும் பலம் உண்டாகிறது.

மனப் பக்குவம் ஒரு நாளிலே அடைந்துவிடக் கூடியதுமல்ல; அதற்கு ஒரு எல்லைகட்டி பூரணத்வத்தை அடைந்துவிட்டதாக சொல்லிக் கொள்ளவும் முடியாது. ஆனாலும் அவரவரால் சாத்தியமான மட்டிற்கு அதை வளர்ப்பதிலே சிரத்தை காட்ட வேண்டியதுதான் கடமை. வாசகன் இதை உணர வேண்டும். 'ஹெவியாக இருக்கு' என்று சொல்வது அசட்டுத்தனமாகும்.

ஏன், இந்த கட்டுரையும் 'ஹெவியாகத்தானே இருக்கு,' என்று சொல்லப் போகிறீர்களோ என்னவோ?

யாருக்கு வெற்றி?

"ரஞ்சனன்"

"என்ன சார் வேண்டும்?" என்று கூவிக்கொண்டே, நிற்காமல் போய்க்கொண்டிருந்தான் "கிருஷ்ணு கபே"யிலுள்ள அந்த ஆள். நண்பரும் நானும் அவனை விறைத்துப் பார்த்தோம். அவன் லட்சியம் செய்யவே இல்லை. தூரத்தில் போய் நின்று கொண்டு, யாருக்காகவோ "மூன்று அரை கப் காபி, ஒரு ஐஸ் வாட்டர்!" என்று கத்தினன். என் நண்பர் "பொறுமை" என்னும் விஷயத்தை உபதேசத்திற்காக எடுத்துக் கொண்டார்; அவர் ஒரு கலாசாலை ஆசிரியர்,

நான் ஒரு கம்பெனி குமாஸ்தா. எனவே நாங்கள் இருவரும் சேர்ந்து காப்பிக் கிளப்புக்கு போனதே, எலியும் தவளையும் கழுத்தில் கயிற்றைக் கட்டிக்கொண்டு குளத்தில் இறங்கின கதைபோலத்தான். தவளை முழுகி முழுகி எழுந்தது. எலி இரண்டு தரம் முழுகி எழுந்தது. மூன்றுவது தரம் பிராணனை விட்டுவிட்டது. பள்ளிக்கூடம் கேட்

பார் அற்றுக் கிடக்கிறது. ஒருநிமிஷம் 'லேட்' டாகப் போய்விட்டால், உறுமுகிறான் துரை! இத்தனை கஷ்டங்களுக்கிடையில், ஹோட்டல் காரனும் சேர்ந்துகொண்டு கொடுத்த துன்பம் சகிக்க முடியவில்லை. பசியோ, அகியாயப் பசி. எதிரில் இருந்த சர்க்கரையை வாறித் தின்ன ஆரம்பித்தேன்.

இதை அவன் பார்த்துவிட்டான். "ஓஹோஹோ! தப்பான ஆளிடமல்லவா நாம் சர்க்கரைக் கிண்ணத்தை வைத்து விட்டோம்" என்ற யோசனை போலிருக்கிறது. மறு நிமிஷம் வெகு வேகமாக எங்களை நோக்கி ஓடிவந்தான். எனக்குள் சந்தோஷம் பொங்கிற்று. 'கடைசியில் அவனாகவே நம்மிடம் வரும்படி செய்து விட்டோமல்லவா' என்ற எண்ணம் வரவே, நண்பரைப் பார்த்துப் புன்னகை புரிந்தேன். அவரும் 'பேஷ்' என்று சொல்லுவதைப்போல் தலையை அசைத்தார்.

எங்கள் அருகில் வரும்வரையில் பேசாமல் வாயை மூடிக்கொண்டு ஓடிவந்தவன், எங்கள் மேஜையருகில் வந்ததும், 'என்ன சார், வேண்டும்?' என்றான்.

அவன் எங்கள் காது செவிடுபடக் கத்தினன். அடுத்த வினாடி சர்க்கரைக் கிண்ணத்தை எடுத்து அடுத்த மேஜையின்மேல் வைத்து விட்டு, நாங்கள், எங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுவதற்கு முன்னாடியே வெகுதூரம் போய்விட்டான்.

உண்மையாகச் சொல்லுகிறேன். நான் தான் எதிரிலிருந்த கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்தேனே! நிச்சயமாக, என் முகத்தில் அசடு வழியவில்லை! என்னுடைய நண்பர் முகத்தில்தான் ஈயாடவில்லை. என்னுடைய முகம், வேண்டுமானால் 'களைப்பாயிருந்தது' என வைத்துக் கொள்ளலாம். காலையில் எட்டுமணிக்குச் சாப்பிட்டது தானே. இப்போது மணி ஒன்றே முக்கால் ஆகவில்லையோ? பசிக்காமல் என்ன பண்ணும்!

"பொறுமையாக இரு" என்று உபந்நியாசம் செய்துகொண்டிருந்த என் ஆசிரிய நண்பர், "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்பதை உபதேசம் செய்யவில்லை. நிதர்சனமாய், செயலிலேயே காண்பிக்க ஆரம்பித்தார். ஜேபியிலிருந்து பென்சிலை எடுத்து வைத்துக் கொண்டு, அதன் பின்புறத்திலிருந்து கொஞ்சம், கொஞ்சமாய், சாப்பிட ஆரம்பித்தார். என்னிடம் பென்சில் இல்லை. ஆபீஸிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டேன். மேலும், சாப்பிடுவதற்காக

வென்று எங்கள் ஆபீஸில் பென்சல்கள் கொடுப்பதில்லை. நகத்தைக் கடிக்க ஆரம்பித்தேன்.

"ஏய்! பையா!" என்று கூவினேன்.

ஆளைக்காணும். ஆனால் எங்கிருந்தோ ஒரு குரல் 'இதோ வந்துட்டேன், சார்! என்ன வேணும்?" என்று மாத்திரம் கேட்டது. இதென்ன பெரிய இழவாக இருக்கிறது? காஞ்சீபுரம் உபசாரம் என்ற லோக பிரசித்தமான உபசாரத்தைப்போலல்லவா இருக்கிறது, இந்த சப்ளை! ஹூம்! இவனுக்கு என்ன இவ்வளவு அழுத்தம்? இவனுக்காகக் கத்திக் கத்தி உடம்பில் இருக்கிற சக்தி எல்லாம் போய் விட்டால் "பிறகு வந்தவன் இந்தக் காப்பிக் கிளப்பைவிட்டுக் கிளம்ப மாட்டான் என்ற தைரியமா?" நண்பரைக் கேட்டேன்: "ஏன் சார், இந்தப் பயகளுக்கு என்ன சார் இவ்வளவு கர்வம் வந்திருக்கு. ஏன் னமோ தர்மத்துக்கு 'டிபன்' கொடுப்பது போலல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!" என்று.

அவர் "சுவாமி! உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். கொஞ்சம் தயவு செய்து சட்டம் பேச ஆரம்பிக்காதேயும். கொஞ்சம் பொறுமையாக இருந்தால் அவனாக இரக்கப்பட்டு இன்னும் கால் மணிக்குள் ஏதாவது கொண்டுவந்து கொடுத்துவிடுவான். இல்லையோ... ஐயையோ, செத்தே போய் விடுவேன்! உயிர்ப்பிச்சை கொடும்' என்று கெஞ்சினார்.

"நல்ல வேளையாக எனக்கும் அப்பொழுது ஞாபகம் வந்தது. இன்றைக்கு அதனோடு கோபித்துக் கொண்டேனே, அவ்வளவுதான், தினந்தோறும் மத்தியானத்தில் ஏகாதசிதான். ஆபீஸுக்கு அரைமயில் சுற்றளவுக்குள் இதைத்தவிர வேறு காபி ஹோட்டல்களே கிடையாது. ஒரு பாலக்காட்டு 'ஐயர்' மாத்திரம் மத்தியானங்களில் 'டீ' என்று, என்னமோ, ஆபீஸ் அருகில் கொண்டுவந்து வைத்துக் கொண்டு விற்கிறார். அதைக் காட்டிலும் நிம்மதியாய் ஒரு ரூபாய் கொடுத்து, ஒரு டம்ளர் வெந்நீர் தீர்த்தத்தை வாங்கிச் சாப்பிட்டு விடலாம்!"

எனவே அடுத்த தடவை 'கிருஷ்ணா கபே' சப்ளையர் என் அருகில் வந்தபோது நான் அவனை "டேய்! அம்பி!" என்று கூப்பிடவில்லை. அவனைப் பார்த்துப் பசியுடன்கூடிய பரிதாபகரமான ஒரு சிரிப்பைச் சிரித்து விட்டுக் கீழே குனிந்து கொண்டேன். மேஜை

யின்மேல் கைகளை மடித்து வைத்துக்கொண்டு தலையை அதற்குள் வைத்துக் கொண்டேன். என் நண்பரும் மூச்சுவிடவில்லை. கடைசியில் காபி எடுத்துக் கொடுப்பவன், அவனாகவே எங்களிடம் வந்தான்.

"என்ன சார், வேணும்?" என்றான் சவாதானமாக.

"அப்பா! ஒன்றும் வேண்டாம்! என்ன அவசரம் இப்போது? அவசரமாக இருக்கிறவாளுக்குக் கொடுத்துவிட்டு, வாப்பா!" என்றேன். அவனுக்கு நிச்சயம் தூக்கிவாரிப்போட்டிருக்கவேண்டும். ஆனால் அவன் அதைக் காட்டிக்கொள்ளவில்லை.

மறுபடியும் நான் அவனைப் பார்த்தபொழுது, மணி மூன்றடித்தது. இனிமேல் எழுந்திருந்து ஆபீஸுக்குப் போவதென்ற சமாசாரம் என்னமோ, நடக்காத விஷயம். எழுந்திருந்தால் கண்ணை இருட்டிக்கொண்டு வருகிறது. அப்படித் தட்டித் தவறி எழுந்திருந்து வாசலைப் பார்க்கப்போய் விட்டாலும், முதலாளி வாசல்படியில் உட்கார்ந்துகொண்டே இருக்கிறான். அவன் விடமாட்டான். நிமிர்ந்த மாத்திரத்திலேயே, எதையும்பெற்று வந்த வழக்கத்தை அவரால் விட முடியுமா? உட்கார்ந்தேன், என்ன வந்தாலும் வரட்டுமென்று. தூரத்தில் காபி சப்ளை செய்யும் பையன் வருவது தெரிந்தது. என்னைக் கடந்து போகும்போது, அவனை கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். "என்ன, அம்பி! சௌக்யமா?" என்றேன், நல்ல வார்த்தையாக!

அவனை எனக்கு முந்திப் பிந்தித் தெரியாது.

இருந்தாலும் அவன் மிக்க அன்பாகவே எனக்கு பதில் சொன்னான், "இங்கே எப்பவுமே அப்படித்தான் சார் இருக்கும். என்ன வேண்டுமென்று சொல்லிவிடுங்கள், சார்!"

"ரெண்டு அரை கப் காபியைக் கொண்டுவந்து விடு" என்றோம் நாங்கள் இரண்டுபேரும், ஏகமனதாக.

மூன்றரை மணிக்கு ஆபீஸுக்குள் நான் நுழைந்தபோது, ஆபீஸ் துரை என்னைப் பார்த்து முறைத்தான்!

ஏன் மாட்டான்?

லூயி பாஸ்டர்.

[லூயி பாஸ்டர் என்பவர் பிரான்ஸ் தேசத்தில் பிறந்த ஒரு மேதாவி. வெறிநாய், வெறிபூனை முதலியவைகள் கடித்தால், நேரே, யமலோகத்துக்குப் போகவேண்டியதுதான் என்று முட்டாள்தனமாக எண்ணி, பயந்துகொண்டிருந்த உலகத்துக்கு, வெறிநாய்கடிக்கும், மருந்து உண்டு என்று, அபயம் அளித்த உத்தமன் பாஸ்டர் அவர்கள். அந்த மேதாவியின் வாழ்க்கையில் ஒரு பகுதி இந்த நாடகத்தில் சித்தரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை எழுதியவர் "பொன்னி".]

பாஸ்டர் (நடந்து கொண்டே) :—ஆமாம்! நல்லது செய்வதுதான் மனிதனுடைய கடமை; அறிவைத் தேடிக் கொடுப்பதுதான் அறிவாளிகளின் கடமை. ஆமாம்! அறிவைத் தேடிக்கொடுப்பதில், சன்மானம் கேட்கவாவது! வயிற்றை ஈடுவைத்து, அறிவை உலகத்துக்குக் கொடுக்கவாவது! அறிவு தேடிக் கொடுப்பதை, வியாபாரமாகச் செய்யலாமோ? இதைச் சொன்னால், என் மனைவிக்குக் கோபம் வந்துவிடும்.

(இதைக் கேட்டுக்கொண்டே, பாஸ்டரின் மனைவி மேரி வந்துவிடுகிறாள்.)

மேரி :—லூயி! என்ன சொன்னீர்கள்?

பாஸ்டர் :—உனக்குக் கோபம் வரும் என்று சொன்னேன்.

மேரி :—எதற்காக எனக்குக் கோபம் வரவேணும்! நல்லதைச் சொன்னாலும் கோபம் வரக்கூடியவர்கள் அசடர்கள் அல்லவா? அந்தக் கூட்டத்தில் என்னையும் சேர்த்து விட்டீர்களா?

பாஸ்டர் :—யாரையும் அசடு என்றும் யாரையும் போக்கிரி என்றும் சொல்லுவது என் கொள்கைக்கு விரோதமாகும். நம் நாட்டு மேதாவி, ரூஸோ சொன்னது போல, மனிதன் நல்ல குணங்களோடும் சுதந்திரத்தோடும் பிறக்கிறான். பிறகுதான் அவன் மாசு படிந்து போகிறான். ஆகவே, மனிதனையும் அவனுடைய வல்லமையையும் குறைத்துப் பேசும் கட்சியை நான் ஒருநாளும்

ஆதரிக்க மாட்டேன். தன்னை உயர்த்திக் கொள்வதற்கும் மனிதன் சக்தி படைத்திருக்கிறான். தன்னைத் தாழ்த்திக்கொள்வதற்கான துர்புத்தியையும் அவனால் சம்பாதித்துக்கொள்ள முடியும்.

மேரி:—இப்படி, மனிதனைப்பற்றி உயர்வாகப் பேசிக் கண்ட பயன் என்ன? "பாஸ்டருக்கும் அனுபவத்துக்கும் வெகுதூரம். பாஸ்டர் அனுபவசாலியே அல்ல. அவர், வெறும் கனவு காண்பவர். வீணன்" என்று உங்களுக்கு பட்டம் கிடைத்திருப்பதைத் தவிர, வேறு எந்த பயனையும் நாம் காணவில்லை.

பாஸ்டர்:—கண்மணி! நீவருத்தப்படலாமோ? நெருப்பு என்றால் வாய் வெந்து போகுமா? நாய் விற்ற காசு குலைக்குமா? இனமாக வந்த அறிவு விஷமாகி விடுமா? ஏதோ, சிலர், தெரியாத் தனமாக, எதையாவது சொன்னால், அதை வேதவாக்கியம் என்று நம்பிக்கை கொண்டு, நீ துக்கப்படலாமா? வீண் பொழுது போக்கும் பேர்வழிகளுக்கு, இப்படித்தான் பேசத் தெரியும்.

மேரி:—இப்பேர்ப்பட்ட பேர் வழிகளுக்கு, அறிவு இனமாகக் கொடுக்க வேண்டு மென்கிறீர்கள். அவர்கள் கேடு செய்தாலும், பிரதியாக நல்லது செய்யவேண்டும் என்கிறீர்கள். இதெல்லாம் கட்டுபடியாகிற தத்துவமாகத் தோன்றவில்லை.

பாஸ்டர்:—மேரி! நீ, தெரியாமல், பாபம் செய்யத் துணிந்து விட்டாயே! நீ எந்த தத்துவத்தைக் கேவலமாகப் பேசத் துணிந்தாயோ, அது என் தத்துவமல்ல; இன்றைய நேற்றைய தத்துவமல்ல. மனித வர்க்கத்தைக் காப்பாற்ற வந்த ஏசு நாதரின் தத்துவம் என்பதை உணராமல், பேசிவிட்டாய். அது, அனுபவத்துக்கு இசைந்ததில்லையானால், உலகம் அவரையும் அவரது திவ்ய உபதேசத்தையும் இன்றையவரையிலும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்குமா? எத்தனையோ போலி உபதேசங்கள் தோன்றி மறைந்து விட்டனவே! அனுபவத்தில் செய்து காட்ட முடியும், செய்து காண்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்த உபதேசங்களை, மனிதர்கள் இன்றைக்கும் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேரி:—அவைகளை மறக்கவில்லை என்று ஒப்புக் கொள்ளுகிறேன். அவைகளினால் திருத்தம் அடைந்தவர்கள் எத்தனை பேர்கள்?

உலகம் திருத்தம் அடைந்திருக்குமாகில், உங்களைப் பற்றிக் கேலியாகவும் தாக்கியும் பேசுமா?

பாஸ்டர் :—உனக்கு அன்பு இல்லாமல் போனாலும், பொறுமையாவது இருக்கப்படாதா? தாய்மார்களுக்கு பொறுமை அதிகம் என்று சொல்லுகிறார்களே, அந்தப் பொறுமை உனக்கு, இருக்க்கூடாதா?

மேரி :—பொய்யும் புனைசுருட்டும் பேசுகிறவர்களிடம் பொறுமை இருக்கவேண்டுமோ?

பாஸ்டர் :—பார்த்தாயா? கொஞ்சம் சூட்சுமமாக, நீ கவனிக்காமல், பேசிவிட்டாயே! உண்மை பேசுகிறவர்களிடம் உனக்கு, எதற்காக பொறுமை? சாதாரண காலத்தில், எதற்காக தைரியம்? நெருக்கடி காலத்துக்குத்தானே, தைரியம் வேண்டும்? எந்த சந்தர்ப்பத்தில் எந்த குணம் வேண்டும் என்று யோசிக்காமல் கூட, நீ பேசிவிட்டாய். பொறுக்க முடியாதவைகளைப் பொறுக்கும் திறமைக்குத்தான் பொறுமை என்று பெயர். பொறுக்க முடிந்ததை, பொறுப்பது கஷ்டமா?

மேரி :—எப்பொழுதும் போல, என்னை வாதத்தில் தோற்கடித்து விட்டீர்கள். நீங்கள் சாப்பிடுகிற நேரமாகிவிட்டது. சாப்பாட்டுக்கு எழுந்திருங்கள்.

பாஸ்டர் :—சாப்பாட்டுக்கா! இதோ பார்! இதோ பார்! ஆகாய முழுதும் கிருமிகள் மயம்! பூச்சிகள் மயம்! காயத்தைக் கழுவினல் போதுமானது, அது ஆறிவிடும் என்று வைத்தியர்கள்சொல்லுகிறார்களே! என்ன அபத்தம்! ஆகாயத்திலே உல்லாசமாக விளையாடிக்கொண்டிருக்கும் பூச்சிகள் உள்ளே நுழைந்தால், புண் ஆறுமா? பூச்சிகள் நுழையாமல், பந்தோபஸ்து வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். இந்தச் சிறிய விஷயத்தை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். அறிவு தேடுவதில், இத்தனை முட்டுக்கட்டைகளையும் மனிதன், தானே போட்டுக் கொள்ளவேண்டுமா?

மேரி :—இப்பேர்ப்பட்ட உலகத்துக்குத்தான், அறிவை, இனமாகக் கொடுக்கவேண்டும் என்று சற்று முன், சொன்னீர்கள்.

பாஸ்டர் :—சொன்னேன்! ஆகா! உனக்குத் தெரியவில்லையே! அறிவுக்கு, எப்படி விலையை மதிப்பிட முடியும்? எப்படி

விலை போட முடியும்? அதை யார் போடுகிறது? விற்பவனா அல்லது வாங்குகிறவனா? அல்லது மத்தியஸ்தமாக, ஒரு விலையைச் சொல்லுகிறதா? அறிவுக்கு விலை போடுகிறதும் விலை பேசுகிறதும் அபத்தமான வேலையாகும்.

மேரி:—நீங்கள் அறிவு, அறிவு என்று உங்கள் பிராணனை விட்டுவிட போகிறீர்கள். நீங்கள் அறிவைத் தேடுகிறீர்களா அல்லது நமது குடும்பத்தின் அழிவைத் தேடுகிறீர்களா? எது என்று தெரியவில்லை.

பாஸ்டர்:—மேரி! பயப்படாதே! எவன் தன்னை அழித்துக்கொள்ள தயாராயிருக்கிறானோ, தைரியத்தோடு இருக்கிறானோ, அவன்தான் அறிவைத் தேட முடியும். எவன் பயங்கொள்ளியாகவும் வீணனாகவும் இருக்கிறானோ, அவனுக்கு, இயற்கைத் தாய், தனது இரகசியப் பொக்கிஷமான அறிவை, கதவைத் திறந்து காண்பிக்கமாட்டாள்.

மேரி:—நீங்கள் சொல்லுவது எனக்கு பயமாகத்தானிருக்கிறது. அறிவைத் தேடுவதில், உங்கள் அழிவைத் தேடிக்கொள்ளவா வது? பிறகு, எங்கள் கதி என்னவாகும்?

பாஸ்டர்:—உன்னுடையது வீணான பயம்! பயந்துகொண்டே உயிர் வாழ்வது மனித குணமாகாது. பயந்துகொண்டு, எதையும் இன்பத்துடன் அனுபவிக்க முடியாது. பயந்தவர்களும் சுயநலப்பிரியர்களும் பயத்தையும் சுயநலத்தையும்தான் அனுபவிக்க முடியும். அவர்களுக்கு இன்பம் கிடையாது; மேன்மைகிடையாது; அவர்களுக்கு துக்கமும் துன்பமும்தான் மிச்சம்.

மேரி:—நீங்கள், இப்பொழுது சாப்பிட எழுந்திருங்கள். அறிவும் அழிவும் எப்படிப்போனாலும் போகட்டும்.

பாஸ்டர்:—மேரி! என் உடலைக் காப்பாற்றப் பார்க்கும் உனக்கு மிக்க வந்தனம். என் மனதில் ஊசலாடிக் கொண்டிருக்கும் எண்ணங்களை பங்கு போட்டுக்கொண்டு, எனக்கு உற்ற துணையாக இருக்கக்கூடாதா?

மேரி:—ஆயி! நீங்கள் காணும் கனவிலும் உங்களுடைய வாழ்க்கை இலட்சியத்திலும் எனக்கு சிரத்தை இல்லையா? ஒவ்வொரு நாளும், நீங்கள், சரியான வேளைக்குச் சாப்பிடாமல் இருந்தால், உங்கள் உடம்பு எதற்கு உதவும்? நீங்கள் காணும் கனவு எப்படி

பூர்த்தியாகும்? நீங்கள், வேளை தவறாமல், சாப்பிட்டால்தானே, உடம்பு நன்றாயிருக்கும்? உடம்பு சுகமாயிருந்தால்தான், நீங்கள் நாடும் அறிவு, உங்களுக்குக் கிட்டும்.

பாஸ்டர்:—சரி! சாப்பாட்டில் ரொம்ப நாழிகை மெனக்கிட முடியாது. எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொடுத்துவிடு அவைகளை, ஒரே அடியாகச் சாப்பிட்டு விடுகிறேன்.

(கதவுதட்டும் சத்தம். பாஸ்டரோடு, ஸயன்ஸ் ஆராய்ச்சிகளில் உழைத்துவரும் பீடர் ரூக்ஸ் என்ற சீடன், கதவைத் தட்டுகிறார்.)

மேரி:—யார் அங்கே?

பீடர்ரூக்ஸ்:—நான்தான் பீடர் ரூக்ஸ்

பாஸ்டர்:—பீடர்! வா! உள்ளே! உடனே வா! கடுமையான வாதம்!
(பீடர் ரூக்ஸ், உள்ளே வந்து, நாற்காலியில் அமர்கிறார்.)

ரூக்ஸ்:—காலை வந்தனம் டாக்டர்! காலை வந்தனம் அம்மா!

பாஸ்டர்:
மேரி: } —வாருங்கள்! காலை வந்தனம்.

ரூக்ஸ்:—ஏதோ, கடுமையான வாதம் என்றீர்களே! அம்மாவுக்கும் உங்களுக்குமா?

பாஸ்டர்:—ஆமாம்!

ரூக்ஸ்:— அப்படியானால், நான் அம்மா கட்சி.

பாஸ்டர்:—கட்சி விசாரிக்காமல் தீர்ப்பு சொல்லுவதாயிருந்தால், பிரதம நீதிபதி பதவிக்கு நீ லாயக்கு. நீ ஸயன்ஸ் ஆராய்ச்சிக்குத் தகுதி இல்லை.

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

மேரி:—பீடர்! கேளுங்கள். அறிவைத் தேடிக்கொண்டும், அறிவை சம்பாதிக்க வேண்டுமா?

ரூக்ஸ்:—அறிவு என்பது பொல்லாத தேவதை. பலிவாங்காமல், அறிவுக்கதவை, அந்த தேவதை திறந்து விடுவதில்லை.
(மேரி, ஒரேடியாக கூச்சல் போடுகிறாள்.)

மேரி:—என் அருமை ஞாயி, அறிவு தெய்வத்துக்கு பலியாகப் போகிறார் என்று, நீர் சொல்லுகிறீர்?

ரூக்ஸ்:—நான் அப்படிச் சொல்லவில்லையே? அறிவைத்தேடுபவர்கள், தங்களையோ, மற்ற பொருள்களையோ, பலி கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்றேன். காவு இல்லாமல், அறிவு தேவி பிரசன்னமாக மாட்டாள்.

பாஸ்டர்:—பீடர்! உண்மையை மறைக்காதே! மேரிக்காகக்கூட மறைக்காதே! அறிவுக்காக பலி கொடுப்பதை, உலகம் நிம்மதியுடன் ஏற்றுக்கொள்ளும் பழக்கத்தை, பழக்கிக் கொள்ள வேண்டும்.

ரூக்ஸ்:—அர்த்த மில்லாத போரில், களபலிகள் இலட்சக்கணக்கில் கொடுக்கும் பழக்கத்தைப் போலவா?
(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

பாஸ்டர்:—நீ நன்றாகச் சொன்னாய்? டாக்டர்களும் ஆராய்ச்சிக்காரர்களும், உயிர்களை, அவைகள் எவ்வளவு அற்பமாகக் கருதப்பட்டபோதிலும், காப்பாற்ற, தங்கள் உயிர்களையே கொடுக்கிறார்கள். அரசியல் வாதிகளோ, உயிர்களை நாசம் செய்வது என்று பல சமயங்களில் கங்கணம் கட்டிக்கொள்ளுகிறார்கள். நாம் ஒரு உயிரைக் காப்பாற்றினால், அவர்கள் ஒன்பது உயிர்களை நாசமாக்கிவிடுகிறார்களே!

மேரி:—அவர்களுக்குத்தான் பட்டமும் பெருமையும் சுகமும் செல்வமும்! உங்களுக்கோ, உங்கள் வாழ்நாள்வரையிலும் உங்களைப்பற்றி அவதூறு! நீங்கள் மறைந்துபோனபிறகு, புகழ்! புகழ் எதற்கு வேண்டியிருக்கிறது? புகழ், ஆகாரத்துக்கு உதவுமா? உடைக்கு உதவுமா?

பாஸ்டர்:—பழைய பேச்சுப்பேச ஆரம்பித்துவிட்டாயே! இந்த உலகத்தில், இதுவரையிலும், கோடீசுரர்களாக இருந்தபேர்கள் எத்தனை? அவர்கள் யார் என்று உன்னால் சொல்லமுடியுமா?

மேரி:—முடியாது.

பாஸ்டர்:—அப்படியானால், பணத்தைப் புகழ்ந்து பேசாதே! உலகத்துக்கு அறிவைத்தேடிக் கொடுத்து, உலக மக்களை பயத்தினின்றும் ஏக்கத்தினின்றும் விடுவிக்க முயற்சி செய்வதுதான் உத்தமர்களின் கடமையாகும். தேகம் அழிந்து போகலாம், அறிவு என்ற அகல்விளக்கு ஒருநாளும் அவியாது. அந்த

விளக்குக்கு எண்ணெய் வார்ப்பதுதான் மனிதனுடைய கடமை. வேறு எதைச் சொன்னாலும், என்காதில் ஏறாது. என் மூளையில் நுழையாது.

ரூக்ஸ்:—டாக்டர்! எனக்கு கண்திறந்துவிட்டதற்காக, என்றைக்கும் தங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள், பட்டுப்பூச்சிகளைக் கொன்ற விஷப்பூச்சிகளைக் கொன்று, பிரான்ஸ் தேசத்தின் பட்டு வியாபாரத்தைக் காப்பாற்றினதிலிருந்து, எத்தனை இலட்சம் ஜனங்கள் பிழைக்கிறார்கள்? தேசத்துக்கு, எவ்வளவு கோடி பிராங்க், லாபம்! பொது நன்மைக்காகத்தான் பாடுபட வேண்டும்.

(வெளியே, யாரோ அலறுகிற சத்தம் வலுவாகக் கேட்கிறது. எல்லோரும் பிரமித்துப் போகிறார்கள். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பலாத்காரமாய் உள்ளே பிரவேசிக்கிறார்கள்)

மேரி:—ரோஸி டென்மான்! வாருங்கள்! அலெக்ஸாண்டர் எர்ஸின் வாருங்கள்! ரோஸி! உங்களுக்கு என்ன உடம்பு? உங்களைப் பார்த்தால் பயங்கரமாயிருக்கிறதே!

எர்ஸின்:—ஆமாம்! அவர் சொல்லும் கதையைக் கேட்பது பயங்கரமாகத்தானிருக்கிறது.

பாஸ்டர்:—எர்ஸின்! நாம் அன்றைக்குச் செய்த, ஆராய்ச்சியில் ஏதோ, குறை இருக்கிறது போலத் தோன்றுகிறது.

ரோஸி:—மிஸ்டர் பாஸ்டர்! டாக்டர் பாஸ்டர்!

(மேலே சொல்ல முடியாமல், விம்மி விம்மி அழுகிறாள்)

பாஸ்டர்:—அம்மா! நீங்கள் ஏன் இப்படி விம்மி விம்மி அழுகிறீர்கள்? அழ அழ, துக்கம் நம்மை விரட்டி வேட்டையாடுமேயல்லாமல், லேசாக விட்டு விடாது. ஒன்று நேர்ந்தால், அதைப்பற்றி அழுவதும் துக்கப்படுவதும் நமது நோக்கமா? அதற்குப் பரிகாரம் தேடுவது அல்லது அது மாதிரி, இனியும் நேராமல் தடுப்பது, நமது நோக்கமா?

எர்ஸின்:—அமுத மொழிகள்!

ரோஸி :—எத்தனை அழுத்த மொழிகளாயிருந்தென்ன ! இறந்து போன என் குழந்தையின் உயிரை, நீங்கள் திருப்பித் தர முடியுமா ?

மேரி :—யார் ! உங்கள் குழந்தையா ? எப்பொழுது இறந்து போயிற்று ?

(ரோஸி மீண்டும் விம்மி அழுகிருள்)

பாஸ்டர் :—அம்மா ! அழாதேயுங்கள் ! என்னல் ஆனதைச் செய்கிறேன். என்ன சமாச்சாரம் ! சொல்லுங்கள். பதருமல் சொல்லுங்கள்.

ரோஸி :—என் அருமைச் குழந்தை லூஸியை உங்களுக்குத் தெரியுமே ! அவளுக்கு, இன்றோடு ஏழு பிராயம் பூர்த்தியாயிருக்கும். அவளை வெறி பூனை, பத்து நாளைக்கு முன் கடித்தது. விஷமேறி லூஸி, இரண்டு நாளைக்கு முன் இறந்து போனுள். அவள் போனுல் போகட்டும் ! மற்ற குழந்தைகளோ, மனிதர்களோ, இவ்வாறு இறந்து போகக்கூடாதே ! மேதாவி பாஸ்டரிடம் சொல்லி, முறையிட்டுக் கொள்ளலாம் என்று வந்தேன்.

பாஸ்டர் :—மேரி ! பார்த்தாயா ? உலகத்தின் அறிவைப் பெருக்க வேண்டும் என்று இதோ, தெய்வத்தின் கட்டளை வந்திருக்கிறது. இந்தக் கட்டளையைத் தள்ளிவிட்டு, நான் பணம் சம்பாதிக்கிறதோ ! இதோ, இங்கே இருக்கும் என் அருமை சிஷர்கள் பீடரும் எர்ஸினும், பணத்துக்காக, உயிரை விட்டு உழைக்கிறதா ? பீடர் என்ன சொல்லுகிருய் ? எர்ஸின் என்ன சொல்லுகிருய் ?

பீடர் :—உயிர் போனுலும், மனித வர்க்கத்தின் பொருட்டு, புதிய அறிவைத் தேடுவதுதான் மனிதனுடைய முதற் கடமையாகும்.

எர்ஸின் :—நேற்று இருந்தான், இன்று இறந்தான் என்று சொல்லும் கோஷ்டியினரைப் போல உயிர் வாழ்வதில், ஒருபயனும் இல்லை. நேற்று இருந்தான், இன்றும் இருக்கிருன், நாளைக்கும் இருப்பான் என்ற சிரஞ்சீவி கோஷ்டியைத் தான் சேரவேண்டும். உலகத்தைக் காக்கும் தொண்டர்களில் ஒருவனுக இருக்கத்தான்

எனக்குப் பிரியம், எனக்கு ஆவல். இயமனோடு போராடி வெற்றி கொள்ளும் அறிவைத் தேடுவதில் இருக்கிற புண்ணியமும், மகிழ்ச்சியும் ஊக்கமும் வேறு எதிலும் இல்லை. நீங்கள், காலால் இட்ட ஆராய்ச்சியை, என் தலையைக் கொடுத்தும் செய்து முடிக்கிறேன்.

ரோஸி :—ஆகா! என்ன தப்பிதம் செய்தேன்? என் குழந்தையின் மரணத்தை உங்களிடம் சொல்லி, உங்கள் உயிரையே, பறி கொடுக்கும் ஆராய்ச்சியில் குதிக்கும்படியாக, நான் செய்துவிட்டேனே? நான் பாபி! நான் மகா பாபி!

பாஸ்டர் :—அம்மா! நீங்கள் பாபி அல்ல. சோம்பிக் கிடந்த எங்களுக்கு எச்சரிக்கை செய்ய, ஈசன் அனுப்பிய தூது, நீங்கள். ஆண்டவன் பேரில் பாரத்தைப் போட்டுச் சொல்லுகிறேன். வெறி நாய் கடி, வெறி பூனை கடி—இந்த விஷங்களுக்கு, நான் மாற்றுதேடுவேன். மருந்து கண்டு பிடிப்பேன். எனது, உயிரையும் திறனையும் அதற்கென்று அர்ப்பணம் செய்வேன்!

மேரி:—ஹாயி! உங்களுக்கு உன்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? நாடு வாழவேண்டும் என்ற பைத்தியம் பிடித்து, உங்கள் வீட்டை, உங்கள் குழந்தைகள் உங்களையும் என்னையும் நம்பி வாழும், இந்த வீட்டைப் பாழாக்கத் துணிந்து விட்டீர்களா? நீங்கள், இந்த மாதிரி சங்கற்பம் செய்து கொள்ளக்கூடாது.

ரோஸி :—மிஸ்டர் பாஸ்டர்! டாக்டர் பாஸ்டர்! நான் தங்களிடம் பொய் சொன்னேன். என் குழந்தை இறக்கவில்லை. உங்கள் மனதைச் சோதிக்கவே, பொய் சொன்னேன்.

பாஸ்டர்:—நீங்கள் சொன்னது உண்மையானாலும் சரி, பொய்யானாலும் சரி, அது எனக்கு உண்மைதான். அது ஆண்டவனது எச்சரிக்கை! அவன் கட்டளையை மீற முடியாது. "பாஸ்டர்! அகம்பாவப்படாதே! நீ மனித வர்க்கத்தின் தொண்டுக்காகப் பிறந்திருக்கிறாய். சிறிய வீடு கட்ட அல்ல. சிறிய இன்பம் தேடுவதற்கல்ல. மலைக்காதே! சளைக்காதே! திகிலடையாதே! பொறுமையுடன் வேலையைச் செய்" என்று மனிதவர்க்கமே எனக்கு கட்டளையிட்டிருப்பதாக, எனக்கு மனதில் படுகிறது.

அந்தக் கட்டளையை மதிக்காவிட்டால், நான் மதியீனன் ஆவேன். வேஷக்காரனாவேன். சுயநலப்பிரியன் ஆவேன். மேரி! என்னைப் பார்த்து பரிதாபப் படாதே! என்னைப் பார்த்து பெருமைப்படு, சந்தோஷப்படு.

பீடர் :—நாங்கள், தங்கள் பணியாட்கள். எந்தக் குற்றேவல் செய்யவும் காத்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் சிறு ஜாடையே, எங்களுக்கு ஆணையாகும்.

எர்ஸின் :—டாக்டர்! பீடர் எனக்கும் சேர்த்துச் சொன்னதாக, நீங்கள் பாவித்துக் கொள்ளவேண்டும். மனிதவர்க்கத்துக்கு உழைக்கும் அரிய சந்தர்ப்பத்தை, எங்கள் கண்ணின் முன்னே காட்சியாகக் காண்பித்த உங்களை, நாங்கள் அல்லும் பகலும் அனவரதமும் பின்பற்றத் தயார். நீங்கள் எங்களை அந்த அருமையான சேவையில் ஈடுபடச் செய்து, எங்களை ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

ரோஸி:—இவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா?

மேரி (கோபத்தோடு):—பிள்ளையைக் கிள்ளிவிட்டுவிட்டு, தொட்டிலையும் ஆட்டபார்க்கிறுப்போ விருக்கிறதே!

பாஸ்டர்:—தாய்மார்களே! உங்களுக்குள் மனஸ்தாபம் வேண்டாம். உலகம் என்றால் என்ன? தேவி என்றால் என்ன? எல்லாம் தாய்மார்கள் தான். அவர்களுடைய கட்டளையை தலைமேல் கொண்டு நடப்பதுதான் குழந்தையின் கடமையாகும். நாங்கள் அஞ்சாமல், தனிவழி செல்லத் துணிந்த அறியாக் குழந்தைகள். எங்களை ஆசீர்வதித்து, வழி அனுப்புங்கள்.

மேரி, ரோஸி:—கடவுள் உங்களைக் காப்பாற்றுவாராக!

[சென்னை ரேடியோவில் (18—7—39) மாலை, இந்த நாடகம் நடிக்கப்பட்டது.]

வேண்டாத விடுதலை

(சி. சு. செல்லப்பா)

‘கிளியை சதா கூண்டில் அடைத்து வைத்திருக்கக் கூடாது. அடிக்கடி ஒரு அறையில் பறக்கவிடவேண்டும்’ என்றேன் நான்.

மாமா எனக்கு எதிர்க்கக்ஷி வீட்டில் எப்போதுமே. ‘சரிதான், கருப்புப் பூனைக்கு ஒரே கவ்வுதான். நல்ல யோசனை !’ என்பது அவர் ஆக்ஷேபணை.

இரண்டுக்கும் மேலெழுந்து பாட்டியின் தீர்ப்பு. ‘அந்தக் கண்றாவி வேறே வேண்டாம், பாவத்தைக் கட்டிக்க. கூண்டைவிட்டு ஒரு நிமிஷம் கூட வெளியே விடவேண்டாம்’ என்று விட்டாள்.

அந்த கிளிக்குஞ்சை பிடித்துக்கொண்டு வந்ததுமே, பாட்டி, ராமதாஸின் கதையை ஞாபகமூட்டினாள். ‘அவன், ஏன் வெகுகாலம் சிறையில் அவதிப்பட்டான் தெரியுமா ? பூர்வஜன்மத்தில் ஒரு கிளியை கூண்டிலே அடைத்துவைத்திருந்த கர்மபலனை அநுபவிக்க. ஜாக்ரதை’ என்று எச்சரிக்கை செய்து பார்த்தாள்.

ஆனால் நெடுநாளாக, கிளி ஒன்று வளர்க்கவேண்டுமென்ற ஆசையில், அதுவும் கைமேல் கிடைத்துவிட்ட உற்சாகத்தில் அதெல்லாம் எங்கள் காதில் விழவில்லை. ‘அடுத்த ஜன்மத்தில் தானே. பார்த்துக்கொள்வோம்.’ என்று சொல்லிவிட்டோம். உடனே ஒரு கூண்டு வாங்கிவந்து அதிலே அதை வைத்துவிட்டோம். வேறு வார்சு இல்லாத ஒரு குடும்ப கூட்டத்தில் வளர்க்கப்படும் ஒரே பிள்ளையைப்போல அதை பாதுகாப்பதிலே நாங்கள் ஈடுபட்டுவிட்டோம்.

ஆனால் அளவுக்கு மீறின சிரத்தை ஆளுக்கு ஆள், ஒன்றுக்கு மூன்று பேர்கள் காட்ட ஆரம்பித்ததிலேதான் சிக்கல்கள் வந்து சேர்ந்தன. எத்தனை சிக்கல்கள் வந்தால்தான் என்ன ? வீட்டிலே பாட்டியிடம் மாமா பேச்சுக்குத்தான் வலு.

கிளி விஷயத்திலும் அதேதான் நடந்தது. வால் இறக்கையே முளைத்து இன்னும் பறக்கத் தெரியாத அந்த குஞ்சு, இரும்புக் கிராதிக்கு உள்ளே குன்றிபோய், நடுக்கம்பியின் பிடியை விடாமல், கண்களை மூடி மூடித்திறந்து அசைவற்று இருக்கும். பொழுது போகாத நேரத்திலே அதை வெளியே விட்டு விளையாட்டுக்காட்டி உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும். என்று என் மனது துடித்துக்கொண்டிருக்கும். ஆனால். மாமாவுக்கு அது பறந்துபோய்விட்டால் என்ன செய்வது என்ற பயம்.

அந்தக் குஞ்சை நாங்கள் வெளியில் எடுப்பதே அபூர்வமாகி விட்டது. காலை எழுந்ததும் எழாததுமாக அதற்குப் பாலையும், ஒரு வாழைப்பழத் துண்டையும் ஒரு சிறு தகரமூடியில், கூண்டிற்குள் வைத்து, அதை தின்னச் சொல்லி போராடுவோம். அந்த திமிர்பிடித்த குஞ்சோ பழத்தை மூக்

கால் கொத்திக் கொத்தி சிதறிவிட்டு, பாலை அலகால் விசிறி விட்டு கூண்டிற்குள்ளே அமர்க்களம் பண்ணிக்கொண்டிருக்கும். அந்த வேடிக்கையை பார்த்துக்கொண்டிருப்போம், கூடத்தில் கூண்டைச்சுற்றி உட்கார்ந்துகொண்டு.

இது முந்தின விடுமுறையில்.

அடுத்த விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தேன். வாசற்படியில் காலெடுத்து வைத்து கூடத்திற்குள் நுழையவுமே என் கண்கள் சுதாவாக கூடத்தின் மத்தியில் தொங்கின கூண்டுப் பக்கம் பார்த்தன. 'கிளிக்குஞ்சு எப்படி இருக்கு?' என்பது முதலில் நான் கேட்ட கேள்வி. ஒவ்வொரு கடிதத்திலும்கூட, ஹாஸ்டலில் இருந்த அந்த இரண்டு மாதத்திலும் அதன் வளர்ச்சியைப்பற்றிக் கேட்டுக்கொண்டே இருந்தேன். இந்தத் தடவை போனதும், "கிளிக்குஞ்சு பெரிதாகி இறக்கை வளர்ந்திருக்கும். வீட்டில் எல்லோரிடமும் பழகிப்போயிருக்கும். அது வெளியே ஓடாது. பூனைக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்ளவும் அதற்கு சக்தி ஏற்பட்டிருக்கும். ஆகையால் அதை வெளியே தாராளமாக விட்டுப் பழகலாம்" என்றெல்லாம் நினைத்துக் கொள்வேன்.

சாமான்களை ஒரு ஓரம் வைத்துவிட்டு நேரே கூண்டின் பக்கம் சென்றேன். 'உன் கிளியைப்பார்' என்று சொல்லிக்கொண்டே மாமா பின்னால் வந்தார். சமயலறையிலிருந்து என் குரல் கேட்டதும் இரண்டு மூன்று சின்னக் குரல்கள் ஓடிவந்தன.

'அண்ணா! உன் கிளி மாதிரி அசடு ஒன்றுமே இருக்காது' என்றது ஒரு குரல்.

'ஊமைபோலிருக்கு. பேசவே தெரியவில்லை' என்று சீதா கூட கத்தினாள்.

'ஆமாம், அத்தான்! எல்லோரையும் வெடுக்வெடுக்கென்று பிடுங்கத்தான் அதுக்கு தெரிகிறது. வேறே ஒண்ணும் தெரியாதுபோனாலும்' என்றாள் ஸரஸா, அருகில் ஓடிவந்து முதுகைத் தொட்டுக்கொண்டு.

'பழகின கிளி அதெல்லாம் ஒன்றும் செய்யாதே' என்றேன் நான்.

'பழகின கிளியா? முசுறு இல்லையோ அது. உன் விரலை கொஞ்சம் கூண்டுக்குள்ளே நீட்டிப் பாரு, தெரியும்' என்றார் மாமா.

கூண்டின் உட்புறத்திலே கண்களைச் செலுத்தினேன். இந்த இரண்டு மாதத்தில் அது எவ்வளவு அழகாக வளர்ந்திருந்தது. முழுப்பச்சை அணிந்த உடல். வால் சிறகு நீளமாக வளர்ந்து அதன் கம்பீரத்தை எடுத்துக்காட்டியது. கூண்டிற்குள்ளேயே கம்பிக்குக் கம்பி மாறி மாறிப் பாய்ந்துகொண்டிருந்தது.

'அலங்காரந் தானப்பா மிச்சம் உன் கிளிக்கு' என்றார் மாமா. 'என் கிளி இல்லை. நீங்கள் வளர்த்த கிளிதான்' என்றேன்.

சொல்லிக்கொண்டே விரலை லேசாக உட்புறம் நீட்டினேன். கூண்டின் மறு மூலையிலிருந்து அலகுகளை விரித்துக்கொண்டு பாய்ந்து அது கவ்வினவேகத்தில், வலியால் கையை வெளியே இழுத்துக் கொண்டேன். என் விரல் நுனியில் ஒரு பொட்டுச் சிகப்பு தோன்றிற்று.

எல்லோரும் சேர்ந்து சிரித்தோம். இவ்வளவு நாள் அங்கிருந்தும் அது இன்னும் பழகவில்லை. காட்டுக்கிளியாகவே இருந்தது. இயற்கை சுபாவம்

போகவில்லை. 'நீங்கள் நன்றாக அதைப் பழக்கவில்லை. சதா கூண்டுக்குள்ளேயே அடைத்து வைத்து அதற்கு நம்மோடு ஒருவித "அன்யபாவத்தை' உண்டாக்கி விட்டீர்கள். அதனால் அது இவ்வளவு வேற்றுமை பாராட்டுகிறது' என்று அவர்கள்மீது குற்றம் சாட்டினேன்.

'இதோ பாரு, எங்களுக்குக் கிளி இப்படித்தான் வளர்க்கத் தெரியும். அதோடு கொஞ்சிக்கொண்டிருப்பதற்கு அவகாசம் எல்லாம் கிடையாது. நீ வேண்டுமானால் அதோடு கட்டிப் போராடிக்கொண்டிரு. இல்லையானால் வெளியே விரட்டிவிடு" என்றார் மாமா வேகமாக.

முன்பு அந்தக் கிளியை கொண்டு வந்தபோது இருந்த உற்சாகம், அவருக்கு இப்போது இல்லை யென்பதை அவர் வார்த்தைகள் தெளிவாக்கின. நானும் அதை பழக்க வெண்ணி கிட்டே கூண்டை எடுத்து வைத்துக் கொண்டு, இரண்டு மூன்று தரம் கையை அதனிடம் கொண்டுபோய் இறக்கைகளை தடவினேன். ஒவ்வொரு தடவையும் ஒருவித ஆத்திரத்துடனும் வெறியுடனும் பாய்ந்து பாய்ந்து கொத்த வந்தது அந்தக்கிளி. இவ்வளவு நாளாகியும் பழகாத கிளியிடம் எனக்குக்கூட கொஞ்சம் கசப்பேற்பட்டது, நான் சொன்னபடி அதை வளர்க்காத மாமாவிடம் கொஞ்சம் கோபம் இருந்த போதிலும்.

'ஏன், மாமா, இதை எப்போதாவது திறந்து வெளியே விட்டதுண்டா? என்று கேட்டேன்.

'நாங்கள் திறந்து விட்டதில்லை. சின்னச்சாமிதான் கூண்டை அலம்பும் போதெல்லாம் கையில் பிடித்துக்கொண் டிருப்பான். இந்த தரித்திரத்தின் கிட்ட யார் போகிறது' என்றார் மாமா.

பாட்டி கூடத்திற்கு வந்தாள். 'அதை எங்கேயாவது வெளியிலே விட்டுத் தொலையுங்களேன். பாபத்தை கட்டிப்பானேன். அது இருந்தும், இல்லாததும் ஒன்றுதான்' என்றாள்.

பழக்கத்துக்கு வாயக்கில்லாத கிளி, கூண்டுக்கு அலங்காரமாக எதற்கு என்று தான் எனக்கும் பட்டது. 'சரி, அப்படியானால் கொண்டுபோய் விட்டுவிடலாமா' என்றேன்.

எல்லோருக்கும் சர்வ சம்மதம். வீட்டின் பின்புறமுள்ள தென்னந்தோப்புக்கு கூண்டோடு எடுத்துச் சென்றோம். குழந்தைகளுக்கு மட்டும் அது போவது பிடிக்கவில்லை. கூண்டில் இருந்துகொண் டிருந்தால் போதும் என்ற திருப்தி அவர்களுக்கு. மாமாவுக்கு அது பழகாததிலே அதிருப்தி. எனக்கு, மாமா அதை பழக்கின முறையிலே மனதில் வருத்தம்.

மாமாவும் நானும் கூண்டருகே உட்கார்ந்து கொண்டோம். குழந்தைகள் அது பிடுங்கும் என்ற பயத்தில் சற்று எட்டி நின்று, 'விட்டு விடாதே, அண்ணா. அத்தான்! இருக்கட்டுமே,' என்று கெஞ்சிக்கொண்டிருந்தன. 'பேசாமல் இருக்கேளா இல்லையா' என்று மாமா தன் சுபாவப்படி அதட்டுப் போடவும், வாய்களை மூடிக்கொண்டு பார்வையின் மூலம் கெஞ்சலை வெளிக்காட்டிக்கொண்டிருந்தன.

சரேலென்று கூண்டின் கதவைத் திறந்து விட்டேன். கிளி வெளியே ஜிவ்வென்று பறந்து போவதை எல்லோரும் கண் கொட்டாமல் எதிர் பார்த்து இருந்தோம். நாங்கள் நினைத்தபடி கிளி அவ்வளவு ஆத்திரம் காட்டவில்லை. ஒரு தரம் இறக்கைகளை படபடவென அடித்துக்கொண்டு மறுபடியும் நிலையாக நடுக்கம்பியில் உட்கார்ந்துகொண்டது. 'சரி, இன்னும்

பயம் தீரவில்லை. வெளியே பறக்கப் பதுங்கி சமயம் பார்க்கிறது. இன்னும் சற்று நேரத்தில் சரியாகிவிடுமென்று' நாங்களும் அசையாமல் விலகி நின்றோம்.

ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டது. இன்னும் கிளி கம்பியை விட்டு அசைந்தபாடில்லை. குண்டுமணிக் கண்களை உருட்டி உருட்டி விழித்து அலகுகளை திருப்பிக்கொண் டிருந்ததே தவிர, பறக்க எதுவாக இறக்கை யடிப்பு சப்தமே கிளம்ப வில்லை.

அது எங்களை தப்பர்த்தம் செய்துகொண்டு விட்டதால் தான் அது வெளியேறவில்லை என்று தோன்றியது, இன்னும் என்ன செய்துவிடு வோமோ என்று பயந்தது போலும்! 'மாமா, ஒன்று செய்வோம்; அதை பிடித்துவெளியே விட்டுவிடுவோம்; அப்புறம் பறந்து போய்விடும். நாம் சுற்றி இருப்பதைக் கண்டு பயப்படுகிறது, என்றேன்.

கிளி பிராண்டிக் கொத்தாமல் இருப்பதற்காக கையை துண்டால் சுற்றிக்கொண்டு கூண்டுக்குள்ளே கையை விட்டு கிளியை நெருக்கினேன்.

கிளி ஆத்திரத்தில், அதன் உடலை அமுக்கின வேதனையில், அலகுகளை அகல விரித்துத் துணியைக் கொத்தி கொத்தி கவ்வினது. அத்தனை மட்டும் என் கையில் பட்டிருந்தால் ரத்த வெள்ளம் ஆகி இருக்கும்.

கிளியின் கழுத்தில் விரலை கொடுத்து நெருக்கினேன். கிளி அலறிக் கத்தி வெறியுடன் பிடுங்க ஆரம்பித்தது. துண்டைக் கூட துளைத்துக் கொண்டு என் உடலில் அந்த கவ்வு பதிய ஆரம்பித்தது. பயத்தில் கால்களை இரும்புக் கம்பியில் இறுகப் பற்றிக்கொண்டு வெளியே வர மறுத்தது. நான் விடவில்லை. பலமாக இழுத்து என் கைத்துணியின் இடுக்குகளில் அதை கூண்டுக்கு வெளியே எடுத்து விட்டேன். குழந்தைகள் பயத்தில் பின் வாங்கி ஓடின.

‘கொஞ்சம் எட்டிப்போய் விட்டுவிடு’ என்றார் மாமா.

கூண்டிலிருந்து தள்ளி சுமார் பத்தடி தூரத்தில் கொண்டுபோய் கிளியை கீழே பொத்தென்று போட்டுவிட்டு தள்ளிப் போனேன். கிளி இறக்கைகளை படபட வென்று அடித்துக்கொண்டு ஒரு தாம் எகிறித் தவ்வி விழுந்தது. அது உடனே பறந்துபோய் விடவில்லை. குழந்தைகள் அதன்பின் போய் ‘உஸ் உஸ்’ என்று கத்தி வீசி அதை விரட்டின. மறுபடியும் இரண்டு எட்டு வைத்து, இறக்கையை படபட வென்று அடித்துக்கொண்டு எகிறி மறுபடியும் கீழே தணிந்தது. பறந்து போகவில்லை.

நானும் இறக்கையைக் குத்தித் தூண்டினேன். அதற்கும் அதே ரீதி தான். ‘என்னடா, பறக்க மாட்டேன் என்கிறது. பறக்கத் தெரிய வில்லையா’ என்றார் மாமா.

‘எல்லாம் நீங்கள் பழக்கின வழிதான்’ என்றேன்.

‘பக்ஷிக்கு பறக்க பழக்க வேண்டுமாக்கும்’ என்றார் மாமா.

‘ஏன், குழந்தைக்கு நாம் நடக்க சொல்லித் தரவில்லையா! என்று சொல்லிக்கொண் டிருக்கும் போதே கிளி திடீரென்று பின்புறம் திரும்பி, கூண்டு இருந்த பக்கம் பார்த்தது. அடுத்த வினாடி மளமள வென்று எட்டு எடுத்து வைத்துக்கொண்டே கூண்டை நோக்கி தத்தினது.

‘அடேடே, கூண்டுக்குப் போகிறது’ என்று கத்தினார் மாமா. நான் பயந்து கூண்டைத் தூக்குவதற்குள் கிளி கூண்டுக்குள் போய்விட்டது. மறுபடி ஒரு இறகடிப்பு சப்தம். மத்திக் கம்பியில் ஏறி உட்கார்ந்து அசையாமல் இருந்தது.

என் தேகம் புல்லரித்துக் கொடுத்தது. வெளியே அதற்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை அது பொருட்படுத்த வில்லை. அதற்குப் பிடிக்க வில்லையா? உள்ளே அது அனுபவித்த கட்டுப்பாட்டை, குஞ்சுமுதலே அது அடைத்துக்கிடந்த ஒரு கூண்டுவாசத்தை அது மேலாக கருதினதா? எனக்குப் புரியவில்லை. திகைத்துப்போனேன்.

கூண்டுக் கதவு பின்னும் திறந்துதான் கிடந்தது. கிளி அந்த திறந்த கதவு வழியே வெளி உலகத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அனுபவிக்க அற்தகு இஷ்டம் இல்லாததுபோல்; ஏன்? பார்க்கவே பிரியப் படாததுபோல் கண்களை திறந்து திறந்து மூடிக்கொண்டு இருந்தது.

‘இன்னொருதரம் வெளியே பிடித்துவிடு’ பார்ப்போம், என்றார் மாமா.

துண்டைக் கையில் சுற்றிக்கொண்டு மறுபடியும் அதை வெளியே கிளப்புவதற்குள் எவ்வளவு கஷ்டமாகப் போய்விட்டது. ஆத்திரத்துடன் ‘போ தொலைந்து’ என்று உறுமிக்கொண்டே கிளியை இன்னும் தள்ளிப்

போய் விசிறிவிட்டு கூண்டுக் கதவை மூடப்போனேன். என் பின்னாலேயே திரும்பி கிளி கூண்டின் பக்கமாக தத்தி ஓடிவந்தது. பறந்து போவது என்ற ஒரு இயற்கை நியதியே தனக்கு இருப்பதாக அது கருதினதாக தெரியவில்லை. அதுவும் ஒரு பக்ஷி!

நான் பாய்ந்து கூண்டுக்கதவை மூடிவிட்டு நின்றேன். கிளி கூண்டருகில் அந்த கதவுக்குநேரே வந்து நின்றது. கம்பி அடைப்பைப் பார்த்துவிட்டு மூக்கால் கம்பி இடுக்குகளில் கொத்தி உள்ளே நுழையும் விருப்பத்தை காட்டினது. கம்பியை விலக்கி உள்ளே போக முடியவில்லை என்று கண்டதும், கூண்டைச்சுற்றி எந்த இடத்தில் வழியிருக்கிறது என்று ஆராய ஆரம்பித்து, சுற்றி சுற்றி வந்தது.

கூண்டிற்குள் நுழைய எவ்வளவு ஆத்திரப்பட்டது அது! 'என்னடா, வேடிக்கையாக இருக்கு' என்றார் மாமா. நான் பதில் சொல்லவில்லை. என் மனது அந்த கிளியின் ஒவ்வொரு அசைவிலும் திரும்பி இருந்தது. சரேலென்று கூண்டைக் கையில் எடுத்துக்கொண்டு நாலு எட்டு நகர்ந்தேன். என் கை பின்னாலேயே அந்த கூண்டை தொடர்ந்து தத்தி வந்தது அந்தக் கிளி.

கூண்டைக் கீழேவைத்தேன். மறுபடியும் கிளியும் அதைச்சுற்றி கம்பி இடுக்குகளில் மூக்கை கொடுத்து உள்ளேபோக வழி ஆராய ஆரம்பித்தது.

நான் ஸ்தம்பித்துப்போய் நின்றேன். அந்தக் கிளி இனி சுதந்திரத்தை விரும்பவில்லை. திறந்த பெரிய வெளி அதற்கு வேண்டாம். அந்த கூண்டு உலகத்திலே அதற்கு தரப்படும் ஆகாரம் போதும். கம்பியிலேயே தூங்குவதில்தான் அதற்கு விருப்பம். வான வெளியிலே சஞ்சரித்து பலவித இறைதேடிச் செல்ல அது விரும்பவில்லை. மரக்கிளைகளிலே தூங்க அத் விரும்பவில்லை.

ஏன் அப்படி ஒன்று இருப்பதாகவே அதற்கு தெரியவில்லை. தனக்கு புறம்பானது வெளி உலகம் என்று இந்த கூண்டு வாசத்திலே அதற்கு நினைப்பு வலுவடைந்துவிட்டது. செயற்கையான அந்தக் கூண்டு அதற்கு தனதாகிவிட்டது. இயற்கையான வெளி உலகம் அதற்கு அன்யமாகிவிட்டது. என்ன விபரீத மாறுபாடு, மரமரத்துப்போன உணர்ச்சி இந்த சிறிது காலத்தில்!

என் நினைப்பு உடலை ஒருதரம் நடுக்கி எடுத்து எதிரே நின்ற மாமாவைப் பார்த்து ஒரு தரம் விழித்தேன். 'இதுதான் நீங்கள் பழக்கின வழியின் பலன். அது கூண்டுக்கிளியாகவே இருக்க விரும்புகிறது" என்று ஆத்திரத்துடன் சொன்னேன்.

இப்போது என்ன செய்யலாம்?

'என்ன செய்வதா? இதுதான்' என்று சொல்லிக் கொண்டே கூண்டின் கதவை விறட்டென்று திறந்துவிட்டேன்.

அடுத்த க்ஷணம் கிளி கூண்டிற்குள் தத்தி ஏறினது. மறுபடி ஒரு சிறகடிப்பு சப்தம். யதாஸ்தானத்தில் மறுபடியும் ஏறி உட்கார்ந்து கண்களை மூடி மூடித் திறந்தது! அதன் பச்சைவால் கூண்டுக்கு வெளியே கூர்மையாக நீட்டிக்கொண்டிருந்தது. இருக்கிற இடம்தான் சுகம் அதற்கு.

இன்னும் அந்தக் கிளி கூடத்துக் கொக்கியிலே தொங்கும் கூண்டிலே அலங்காரப் பொருளாக இருந்துவருகிறது, வேளா வேளைக்கு நாங்கள் கொடுக்கும் ஆகாரத்தைத் தின்றுகொண்டு.

ஜென்ம நக்ஷத்ர பலாபலன்கள்

22-7-39 முதல் 30-7-39 வரை
ஜென்ம நட்சத்திர பலாபலன்கள்.

(1) அஸ்வனி-மகம்-மூலம்.

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை

மனக்கலக்கம், சிந்தனை, இஷ்ட காரியத்தடை, மயக்கம்.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-55 வரை.

மனோ உல்லாசம். எத்தனித்த காரியம் ஜெயம், நூதன காரியம் தொடருதற்குத் தகுதியான நாள், முக்கிய காரியமாக நூதன நேசர்களைக் காணின் ஜெயந்தரும், உத்தமம்.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

சேதியால் கலக்கம், தொழிலில் மந்தம். பிரயாணச் சோர்வு, இஷ்டரின் பகை, மறதி, களவு, இதனாற் கவலை. எதினும் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

தொழிலில் நன்மை, தக்கலாபம், இஷ்டகாரிய சித்தி, வழக்கு முதலிய பகைகளில் வெற்றி, கவலையில்லாமல் இந்நாள் கடக்கும், சமம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

மனோசஞ்சலம், கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும், எக்காரியத்திலும் யூகித்து நடத்தல் நலம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்கலாபம், காரியசித்தி, லாபந்தரத் தக்க காரியம் எது செய்யினும் (சூது தவிர), நஷ்டம் வாராது.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 3-30 வரை.

இடர்காயம், மனோவேதனை, சத்ருத்வம், பீதி, சகலகாரிய முடக்கம், நூதன நற்காரியங்கள் செய்யின் நன்மையுறா. முன் ஜாக்ரதையாயிருக்கின் துயருறா.

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

சுகம், போகம், எத்தொழிலிலும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள்வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-55 வரை.

மனக்கலக்கம், சிந்தனை, இஷ்டகாரியத்தடை, மயக்கம்.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

மனோ உல்லாசம். எத்தனித்த காரியம் ஜெயம், நூதன காரியம் தொடருதற்குத் தகுதியான நாள். முக்கியகாரியமாக நூதன நேசர்களைக் காணின் ஜெயந்தரும், உத்தமம்.

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

சேதியால்கலக்கம், தொழிலில் மந்தம்; பிராயணச் சோர்வு, இஷ்டரின் பகை, மறதி, பகை, இதனுற்கவலை. எதிலும் ஜாக்ரதையாய் இருக்கின் நலம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

தொழிலில் நன்மை, தக்க லாபம், இஷ்டகாரிய சித்தி, வழக்கு முதலிய பகைகளில் வெற்றி, கவலையில்லாமல் இந்நாள் கடக்கும், சமம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

மனோசஞ்சலம், கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும், எக்காரியத்தையும் யூகித்து நடத்துதல் நலம்.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 3-30 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்கலாபம், காரியசித்தி, லாபந்தரத் தக்க காரியம் எது செய்யினும (குதி தவிர) நஷ்டம் வராது.

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

இடர் காயம், மனோவேதனை, சத்ருத்தவம், பீதி, சகல காரிய முடக்கம். நூதன நற்காரியங்கள் செயின் நன்மையுறா. முன் ஜாக்கிரதையாய் இருக்கின் துயருறா.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-55 வரை.

சுகம், போகம், எத்தொழிலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

மனக் கலக்கம், சிந்தனை, இஷ்ட காரியத் தடை, மயக்கம்.

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

மனோ உல்லாசம், எத்தனித்த காரியம் ஜெயம், நூதன காரியம் தொடங்குதற்குத் தகுதியான நாள். முக்கிய காரியார்த்தமாக நூதன நேசர்களைக் காணின் ஜெயந்தரும், உத்தமம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

சேதியால் கலக்கம், தொழிலில் மந்தம், பிரயாணச் சோர்வு, இஷ்டரின் பகை, மறதி, களவு இதனால் கவலை. எதினும் ஜாக்கிரதையாயிருக்கின் நலம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

தொழில் நன்மை, தக்க லாபம், இஷ்ட காரிய சித்தி, வழக்கு முதலிய பகைகளில் வெற்றி, கவலை யில்லாமல் இந்நாள்கடக்கும், சமம்.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 3-30 வரை.

மனோசஞ்சலம், கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும், எக்காரியத்தையும் யூகித்துச் செய்தல் நலம்

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி லாபந் தரத்தக்ககாரியம் எது செய்யினும் (சூது தவிர) நஷ்டம் வாராது.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-55 வரை.

இடர் காயம், மனோ வேதனை, சத்ருத்வம், பீதி, சகல காரிய முடக்கம், நூதன நற்காரியங்கள் செய்யின் நன்மையுறா. முன் ஜாக்கிரதையாகயிருக்கின் துயருறா.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

சுகம், போகம், எத்தொழிலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம் தரும்.

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

மனக் கலக்கம், சிந்தனை, இஷ்ட காரியத் தடை, மயக்கம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

மனோ உல்லாசம், எத்தனித்த காரியம் ஜெயம், நூதன காரியம் தொடங்குதற்குத் தகுதியான நாள். முக்கிய காரியார்த்தமாக நூதன நேசர்களைக் காணின் ஜெயந்தரும், உத்தமம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-32 இரவு 12-53 வரை.

சேதியால் கலக்கம், தொழிலில் மந்தம், பிரயாணச் சோர்வு, இஷ்டரின் பகை, மறதி, களவு, இவைகளாற் கவலை, எதிலும் ஜாக்ரதையா யிருக்கின் நலம்.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 3-30 வரை.

தொழில் நன்மை, தக்க லாபம், இஷ்ட காரிய சித்தி, வழக்கு முதலிய பகைகளில் வெற்றி, கவலை யில்லாமல் இந்நாள் கடக்கும், சமம்.

(5) மிருகசிரம்-சித்திரை-அவிட்டம்.

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

மனோசஞ்சலம். கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும், எக்காரியத்தையும் யூகித்து நடத்துதல் நலமாம்.

23-7-39 மாலை 4-50 முதல்
23-7-39 மாலை 4-55 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்கலாபம், காரியசித்தி, லாபந்தரத்தக்க காரியம் எது செய்யினும் (சூது தவிர) நஷ்டம் வராது.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

இடர்காயம், மனோவேதனை, சத்ருத்வம், பீதி, சகல காரிய முடக்கம், நூதன நற்காரியங்கள் செய்யின் நன்மையுறா, முன் ஜாக்கிரதையாயிருக்கின் நலம்.

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

சுகம், போகம், எத்தொழிலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள்வரத்து, நற்காரியம் செய்யின் நலமாம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

மனக் கலக்கம், சிந்தனை, இஷ்டகாரியத்தடை, மயக்கம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

மனோ உல்லாசம், எத்தனித்த காரியம் ஜெயம். நூதன காரியம் தொடருதற்குத் தகுதியான நாள். முக்கிய காரியமாக நூதன நேசர்களைக் காணின் உத்தமம்.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 3-30 வரை.

சேதியாற் கலக்கம், தொழில் மந்தம், பிரயாணச் சோர்வு, இஷ்டரின் பகை, மறதி, களவு, இதனாற் கவலை. எதினும் ஜாக்கிரதை யாயிருக்கின் நலம்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

தொழில் நன்மை, தக்கலாபம், இஷ்டகாரியசித்தி, வழக்கு முதலிய பகைகளில் வெற்றி, கவலையில்லாமல் இந்நாள் கடக்கும், சமம்.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-45 வரை.

மனோசஞ்சலம், கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும். எக்காரியத்திலும் யூகித்து நடத்தல் நலம்.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்கலாபம், காரியசித்தி. லாபந்தரத்தக்க காரியம் எது செய்யினும் (சூது தவிர) நஷ்டம் வராது.

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

இடர்காயம், மனோவேதனை, சத்ருத்வம், பீதி, சகலகாரிய முடக்கம், நூதன நற்காரியங்கள் செய்யின் நன்மையுரு, முன் ஜாக்ரதையாய் இருக்கின் நலம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

சுகம், போகம், எத்தொழுலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

மனக்கலக்கம், சிந்தனை, இஷ்டகாரியத்தடை, மயக்கம்.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 3-30 வரை

மனோ உல்லாசம், எத்தனித்த காரியம் ஜெயம், நூதன காரியம் துடங்குதற்குத் தகுதியான நாள், முக்கிய காரியமாக நூதன நேசர்களைக் காணின் ஜெயந்தரும் உத்தமம்.

(7) புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

22-7-36 மாலை 5-29 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

தொழிலில் நன்மை, தக்க லாபம், இஷ்டகாரிய சித்தி, வழக்கு முதலிய பகைகளில் வெற்றி, கவலை யில்லாமல் இந்நாள் கடக்கும், சமம்.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-55 வரை.

மனோ சஞ்சலம், கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும், எக்காரியமும் யூகித்துச் செய்யின் நலமாம்.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்க லாபம், காரியசித்தி, லாபந்தரத் தக்க காரியம் எது செய்யினும் (சூது தவிர) நஷ்டம் வாராது,

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

இடர் காயம், மனோ வேதனை, சத்ருத்வம், பீதி, சகலகாரிய முடக்கம், நூதன நற்காரியங்கள் செய்யின் நன்மையுறு. முன் ஜாக்கிரதையாயிருக்கின் நலமாம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

சுகம், போகம், எத்தொழிலிலும் ஜெயம், ஆரோக்கியம். நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

மனக் கலக்கம், சிந்தனை, இஷ்டகாரியத் தடை, மயக்கம்.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 3-30 வரை.

மனோ உல்லாசம், எத்தனித்த காரியம் ஜெயம், நூதன காரியம் தொடருதற்குத் தகுதியான நாள், முக்கிய காரியமாக நூதன நேசர்களைக் காணின் ஜயந் தரும், உத்தமம்.

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

சேதியால் கலக்கம், தொழிலில் மந்தம், பிரயாணச் சோர்வு, இஷ்டரின் பகை, மறதி, களவு, இதனுற் கவலை, எதிலும் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-55 வரை.

தொழிலில் நன்மை, தக்க லாபம், இஷ்டகாரிய சித்தி, வழக்கு முதலிய பகைகளில் வெற்றி, கவலை யில்லாமல் இந்நாள் கடக்கும், சமம்,

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

மனோ சஞ்சலம், கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும். எக்காரியத்தையும் யூகித்துச் செய்தல் நலம்,

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்கலாபம், காரியசித்தி, லாபந்தரத்தக்க காரியம் எது செய்யினும் (சூது தவிர) நஷ்டம் வராது.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

இடர் -காயம், மனோ வேதனை, சத்ருத்வம், பீதி, சகல காரிய முடக்கம், நூதன நற்காரியங்கள் செய்யின் நன்மை யுரு, முன் ஜாக்கிரதையாய் இருப்பது நலம்.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

சுகம், போகம், எத்தொழிலினும், ஜெயம், ஆரோக்கியம், நல்லோர் நேசம், பொருள் வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

29-7-39 இரவு 12-53 வரை
30-7-39 இரவு 3-30 வரை.

மனக் கலக்கம், சிந்தனை, இஷ்டகாரியத் தடை, மயக்கம்.

(9) ஆயிலியம்-கேட்டை-ரேவதி.

22-7-39 மாலை 5-23 முதல்
23-7-39 மாலை 4-50 வரை.

மனோ உல்லாசம், எத்தனித்த காரியம் ஜயம். நூதன காரியம் தொடங்குவதற்குத் தகுதியான நாள், முக்கிய காரியார்த்தமாக நூதன நேசர்களைக்காணின் ஜெயந்தரும், உத்தமம்.

23-7-39 மாலை 4-50 முதல்
24-7-39 மாலை 4-55 வரை.

சேதியால் கலக்கம், தொழிலில்மந்தம், பிரயாணச் சோர்வு, இஷ்டரின் பகை, மறதி, களவு, இதனாற்கவலை. எதினும் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

24-7-39 மாலை 4-55 முதல்
25-7-39 மாலை 5-35 வரை.

தொழில் நன்மை, தக்கலாபம், இஷ்டகாரியசித்தி, வழக்கு முதலிய பகைகளின் வெற்றி. கவலை இல்லாமல் இந்நாள் கடக்கும், சமம்.

25-7-39 மாலை 5-35 முதல்
27-7-39 இரவு 8-30 வரை.

மனோசஞ்சலம், கலகம், அலைச்சல், தொழிலில் பிசகெய்தும், எக்காரியத்திலும் யூகித்து நடத்தல் நலமாம்.

27-7-39 இரவு 8-30 முதல்
28-7-39 இரவு 10-32 வரை.

சுகம், சௌக்கியம், தொழிலில் தக்கலாபம், காரியசித்தி, லாபந்தரத்தக்க காரியம் எது செய்யினும் (சூது தவிர) நஷ்டம் வராது.

28-7-39 இரவு 10-32 முதல்
29-7-39 இரவு 12-53 வரை.

இடர்காயம், மனோவேதனை, சத்ருத்வம், பீதி, சகலகாரிய முடக்கம் நூதன நற்காரியங்கள் செய்யின் நன்மையுறு, முன் ஜாக்கிரதையாயிருக்கின் துயருறு.

29-7-39 இரவு 12-53 முதல்
30-7-39 இரவு 8-30 வரை.

சுகம், போகம், எத்தொழிலினும் ஜெயம், ஆரோக்கியம், நல்லோர நேசம், பொருள்வரத்து, நற்காரியம் செய்யின் நலம்.

படுத்த படுக்கையில்

(ராஜம்)

ராயப்பேட்டை க்ஷயரோக ஆஸ்பத்திரியில் சோதனை செய்து பார்த்த பிறகு என்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள். சிறையில் உடம்பு அதிகமான வுடனேயே சர்க்கார் என்னை விடுதலை செய்து விட்டார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரியில் என்னுடைய வியாதி குடல் க்ஷயம் என்று நிதானிக்கப்பட்டது. சிகிச்சையும் நடந்தது. ஆனால் என் பலம் மட்டும் நாளுக்கு நாள் குன்றி வந்தது.

குன்றினால்தான் என்ன முழுகிப்போய்விட்டது? வாழ்க்கையில்தான் எனக்கு ஒருவிதமான பற்றும் கிடையாது. தேசத்தொண்டோ, நாடு இருந்த நிலைமையில், அவசியமில்லாமலேயே போய்விட்டது. எங்கும் காங்கிரஸ் ராஜ்யபாரம் வகிக்கிறபொழுது தொண்டனுக்கு என்ன வேலை இருக்கிறது? செய்ய வேண்டியதை ஏதோ கூடியவரை செய்தாய் விட்டது என்ற நிம்மதி மனதில் இருந்தது. அத்துடன் உயிர்போனால்கூட பாதகமில்லை தான். நோயால் எவ்வளவு நாள் தான் திண்டாடுவது? எதற்காக அப்படித் திண்டாடி உயிரைக் காப்பாற்றுவது என்றுகூட எனக்குத் தோன்றிவிட்டது.

ஒருநாள் காலை, வியாதியின் கொடுமை அவ்வளவு தெரியவில்லை. வயிறுகூட ஏதோ லேசாக இருந்தது. காலை ஆகாரத்தை உண்டுவிட்டுப் படுக்கையில் சாய்ந்து கொண்டிருந்தேன். நாலு படுக்கைகளுக்கு அப்புறம் ஒருவன் வலியால முனகிக்கொண்டிருந்தான். அவனிடம் எனக்குக் கோபம்கூட வந்தது. "ஏன் அப்படி ஊளையிடுகிறான்? கூட இவ்வளவு பேர் படுத்துக்கொண்டிருக்கிறார்களே என்ற ஞானம் இல்லை" என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். ஆனால் அந்தப் பக்கம் பார்க்கச் சகிக்கவில்லை எனக்கு.

சற்று நேரத்திற்கெல்லாம் அந்தப் பக்கத்திலிருந்து ஒரு பெண் குரல் கேட்டது. அதைக் கேட்டதுமே எனக்கு பளிச்சென்று ஒரு நினைவு உண்டாயிற்று. அது ஞானத்தின் குரல். ஆமாம்! எவ்வளவு வருஷங்கள் கழிந்தாலென்ன? வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டால் என்ன? அந்தக் குரலின் ஒலிப் பதிவு என் உள்ளத்திலிருந்து அழியுமா, என்ன?

அது அவள் குரல்தான். அவளுக்குத்தான் அந்தக் குரல். ஆனால், ஞானம் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எங்கே வந்தாள்? ஏன் வரக்கூடாது? நான் எப்படி வந்தேன்? திருச்சியும் சென்னையும் அப்படி என்ன வெகு தூரமோ?

இல்லையே! கலியாணமானவுடனேயே அவள் ரங்கூனுக்கல்லவா போய்விட்டாள் கணவனுடன்? போயிருந்தால் என்ன? சென்னைக்கு வரக்கூடாதா என்ன? பத்து வருஷங்களில் என்னென்ன தான் நடக்கக்கூடாது?

* * *

ஆமாம் பத்து வருஷங்களுக்கு முன்னால் நான் ஞானத்தைக் கடைசியாகப் பார்தேன். நாள்கூட, எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. பொழுதுகூட அப்படியே மனதில் இருக்கிறது. சாயங்காலவேளை. திருமஞ்சனக் காவேரி மணலில் மரப்பாலத்தின் அருகில் உட்கார்ந்திருந்தேன். கொஞ்ச தூரத்தில் சினேகிதர்கள் எல்லாம் 'பலிங் சடுகுடு' விளையாடிக்கொண்டிருந்தார்கள். எனக்கு எப்பொழுதுமே விளையாட்டுகளில் அதிகமாகப் பிரியம் கிடையாது. அன்று அதுவும் ஏதோ உடம்பு சரியில்லை. மணலிலிருந்து சின்னக் கூழாங்கல் ஒன்றை எடுத்து வாயில்போட்டுக்கொண்டு ஏதோ யோசித்துக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தேன்.

எதிரில் மாந்தோப்பு. மாமரங்களில் குரங்குகள் மாங்காய்களைப் பறித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்தன. தோப்புக்காரன் கையில் கவண் கல்லுடன் அவற்றை வெருட்டிக்கொண்டிருந்தான். குரங்குகள் மரத்துக்குமரம் தாவி அவனைப்படாத பாடு படுத்தினவே தவிர தோப்பைவிட்டு வெளியே போகவில்லை. அப்பொழுது அவன் சத்தமும் ஒவ்வொரு குரங்கு கத்தும் சத்தமும்தான் கேட்டன. பட்சிகள் ஓய்ந்து விட்டன. பக்கத்துப் படித்துறையில் பெண்கள் ஊற்றிலிருந்து ஜலம் எடுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள்.

ஞானம் எனக்குத் தெரியாமல் என் பின்னால் வந்து 'பே!' என்றாள். உடனே என் முன் வந்து விழுந்து விழுந்து சிரித்தாள்.

"எங்கேடி வந்தே?" என்றேன்.

"நீ எங்கே வந்தே?" என்றாள்.

"உங்கம்மா கிட்ட சொல்ரேன் இரு" என்றேன்.

"சொல்லேன், மோசமோ!" என்று முகத்தைத்திருப்பிக் கொண்டு சொல்லிவிட்டு உடனே தன் முந்தானையைக் காட்டினாள்.

"மடிலே என்ன இருக்கு சொல்லு!"

"மணல்!"

"ஐயைய! இது சொல்லத் தெரியலே!" என்று சொல்லிக் கொண்டு மடியிலிருந்து ஒரு மாம் பழத்தை எடுத்தாள். அது அணில் கொரித்துப்போட்டது. ஒரு பக்கம் பூராவையும் அது தின்றிருந்தது. அனால் பழம் உள்ளே செக்கச் செவேலென்று இருந்தது.

"நோக்குவேணுமா?" என்றாள்.

"எங்கே பாப்போம்!" என்று வாங்கப்போனேன். அவள் சட்டென்று கையை இழுத்துக் கொண்டு பழத்தைத் துடைக்கலானாள்.

"உனக்குத் தோல், நேக்குக் கொட்டை, ஊம்?" என்று கேட்டாள்.

என் சம்மதத்தைக்கூட எதிர்பாராமல் தோலைப் பிய்த்து எனக்குக் கொடுத்தாள். கொட்டையைத்தான் சூப்ப ஆரம்பித்தாள். அப்பொழுது அவள்

தலையிலிருந்த பூ நழுவி விழுந்து கொண்டிருந்தது.

“பூவை எடுத்துத் தலையிலே வைடாப்பா!” என்றாள் கொஞ்சும் குரலில்.

அதை எடுத்துச் சரியாக அவள் தலையில் வைத்தேன்.

பிறகு சிறிது நேரம் கழித்து ஊற்றில் கையலம்பிக்கொண்டு இருவரும் கைக்கோர்த்துக்

“பூவை எடுத்துத் தலையிலே வைடாப்பா!”

கொண்டு வீட்டுக்குப் போனோம்.

அப்பொழுது எனக்கு வயது பத்து; அவளுக்கு எட்டு.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு குரல் வந்த பக்கம் பார்த்தேன். அவள்தான்!

[illegible] சில நிமிஷங்களுக்கு முன் வாழ்க்கையில் ஒன்றுமில்லை, என்றல்லவா எண்ணினேன். சே! பிசகு! வாழ்க்கையில் எனக்கும் ஒரு இன்பம் உண்டு. ஆமாம், ஞாபகம் வந்தது. ஞானம் இருக்கும் உலகத்தில் எனக்கும் இடம் இருக்கவேண்டும். அவள் நினைவு இருக்கிற வரையில், அவளுக்கு என் நினைவு இருக்கிறவரையில் உயிர் வாழலாம்.

ஒருவரை யொருவர் சந்திக்காவிட்டால் என்ன? உள்ளத்தில் சாம்பலின் கீழ் கனல் போல அது கிடக்கும். ஒருதரம், ஒரு பார்வை அவள் பார்த்தால் போதும், அது பளிச்சென்று பிரகாசிக்க ஆரம்பித்து விடும்.

வாழ்க்கையில் இருவரும் கை பிடித்துக்கொள்ள முடியாமல் போய்விட்டால் என்ன மோசம்? அதனால் உள்ளம் தடைபடுமா என்ன? அவள் வார்த்தை ஒன்று போதுமே, அதைக் கிளறிக் கொள்ளை யாடுவதற்கு.

அவள் முகத்தை நான் மறக்கவில்லை; நான் அவள் குரலைக் கூட மறக்கவில்லை. அவள் நடையே எனக்குத்தெரியும். அவள் என்னை மறந்திருக்க மாட்டாள். எப்படி மறப்பாள்? மறக்கக்கூடியவாறு நாங்கள் பழகினோம்!

சிறு வயதாயிருந்தால் என்ன? அப்பொழுதே காலத்திற்கு முந்தி, உடல்கள் மலருவதற்கு முன், எங்கள் உள்ளங்கள், பொய்ப் பூக்கள் போல, மலர்ந்து விட்டனவே!

மலராமலா அவள் என் மனதை அப்படி மாய்த்தாள்?

வாழ்க்கையில் இவ்வளவு தொல்லைகளிலும் அவள் என் முகத்தை மறக்க முடியாது. அதன் பெருங்கூட்டத்தில் அவள் என்னை நிச்சயம் அடையாளம் கண்டுகொள்வாள்.

நான் முன் பார்த்த நோயாளியின் அருகில் அவள் நின்று கொண்டிருந்தாள். அவளுடன் ஏதோ பேசிக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தாள்.

ஆம்! ஆயிற்று! என்னைப் பார்த்து விடுவாள் அடுத்த நிமிஷம். தூக்கி வாரிப்போட்டு விடும் அவளுக்கு. அலறிவிடுவாள் வாய் விட்டுக்கூட என்று பயப்பட்டேன். முகத்தைத் திருப்பிக் கொண்டு விடலாமா என்று எண்ணினேன். ஆனால் சாவகாசம் இல்லை; மனதும் இல்லை.

அவள் என்னைப் பார்த்தாள்; ஆனால் அவள் பார்வையில் ஒன்றும் இல்லை. அவள் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை!

"ஞானம், இதோ பார், நான் இங்கே இருக்கிறேனே, உனக்கு அடையாளம் தெரியவில்லையா? நான்தான், ராஜம்! என்முகம் கூடவா உனக்கு மறந்து போயிற்று! ஞானம்!" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டேன்.

"இல்லை, இல்லை, யோசனை செய்கிறாள். எங்கோ பார்த்த ஞாபகம் இருக்கிறது அவளுக்கு" என்றும் எண்ணினேன். ஆனால்...

பிறகு எனக்கு சுயபிரக்ஞை வந்தபொழுது படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தேன். நர்ஸ் அருகில் இருந்தாள்.

சற்றுநேரம் கழித்து நர்ஸை விசாரித்தேன்.

"அந்தக்கேஸ் உபயோகமில்லை என்று சொல்லி விட்டோம். மனைவி வந்து வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய்விட்டாள். ஏன்?"

"அந்தம்மாள் பெயர்?"

"உங்களுக்கு என்ன?"

"சொல்லக்கூடாதா?"

"ஞானம்பாள்! ஓ, அதனால்... ......" என்று சொல்லி நிறுத்தினாள் நர்ஸ்.

சற்றுமுன் படுக்கையில எழுந்து உட்காரலாம் என்று ஒரு நம்பிக்கை பிறந்தது.

மறுபடியும் திடீரென்று ஓய்ச்சல் மேலிட்டுப் படுக்கையில் விழுந்தேன்.

படுத்த படுக்கையானுல்தான் என்ன அதற்குமேல்?

ஐயோ சமர்த்தே!

"எண்டா கிட்டு, எங்கடா காயம் பட்டது?" என்று கேட்டாள் கிட்டுவின் தாயார். சின்னக் கிட்டு, "கத்தியாலே நறுக்கிண்டுட்டேம்மா கையை" என்முன்.

"ஐயோ, சமத்தோல்லியோ நீ; அழாமே இருக்கயே" "நீ ஆத்திலே இல்லையாக்கும்னு அழல்லேம்மா ஆ ஆ ஆ ஆ ஆ ஆ.

* * *

புது மனுஷர்

தையல்காரன்:—(கூலி வாங்குவதற்கு முன்)ஸார், இந்தக் கோட்டையும் நிஜாரையும் போட்டுக்கொண்டு கொஞ்சதூரம் போய் விட்டு வாருங்கள். பிறகு நீங்கள் ஒரு புதுமாதிரி மனுஷராகி விடுவீர்.

அவரும் அப்படியே அவைகளைப் போட்டுக்கொண்டு போய் விட்டு வந்தார்.

தையல்காரன் "கூலி ஸார்" என்முன்.

"யாரப்பா நீ? என்ன விசேஷம்? எங்கே வந்தாய்?", என்று கேட்டார் கொஞ்சதூரம் போய்விட்டு வந்தவர்.

* * *

அவள் யுக்தி

"எங்காத்துக்காரருட்டே எப்படிப் பணம் வாங்கறதுன்று சுலபமான வழி கண்டு பிடிச்சுட்டேன்."

அதை எனக்குந்தான் சொல்லேன்"

"ரொம்ப சுலபம்; பணம் வேணுங்காப்போ ரொம்பக் கோபமா "நான் என் பிறந்தாத்துக்குத் தொலைஞ்சு போறேன்" என்பேன். உடனே அவர் என்கிட்டே ரயில் சார்ஜைக் கொடுத்து, "தொலை ஒழிஞ்சு போ" என்பார்.

அபாக்கியவதி

(பு. வே. சுப்ரமணியம்)

(பதினுயிரம் கனவு மலர்கள் புஷ்பிக்கும் மொக்கு வாடி, காய்ந்து, பொடியாகிக் காற்றில் கலக்கிறது. அத்துடன் வாழ்க்கையும் பொடியாகி விடுகிறதா? அல்லது கனவின் மறுமலர்ச்சியில் நம்பிக்கைகொண்டு, மனப்பூர்வமான காதலின் வைராக்கியத்தில் வாழ முடியுமா? இதுதான் கேள்வி!)

"லீலாவதி!"

"ஏன்?"

"இன்று, என் கையால் உனக்கு மருந்து கொடுத்து விடட்டுமா?"

"ஹிருதயத்திற்கா?"

"உடம்பிற்கு!"

"ஏன்?"

"என்ன ஏன்?"

"நீங்கள் ஏன் இன்றைக்கு மருந்து கொடுக்கவேண்டும்?"

"உனக்குத் தெரியாதா லீலாவதி?"

"தெரியும்!"

"பிறகு?"

"நீங்கள் பயப்படுகிறீர்கள்!"

"நானு?"

"ஆம்"

"எதற்கு?"

"எனக்காக!"

"சீ! என்ன உளருகிருய்!"

"நீங்கள் போய்விடப்போகிறீர்கள்!"

"லீலாவதி! ஆம்."

"பிறகு, என்ன உளருகிறேன்?"

"நீ இறந்துவிடுவாய் என்று, நான் சொல்லுகிறதாக நினைத்தாயோ, என்று எண்ணினேன்."

"அந்த பாக்கியம், உங்கள் கையில் மருந்து சாப்பிட்ட பிறகு கிடைக்குமா?"

"பேச்சில் அசடு வழிகிறது. வாயை மூடு!"

"இதற்குத்தானா இங்கே வந்தது?"

"லீலாவதி! என்னைக்கொன்று விடாதே! ஏன் உன் கண்களில் ஜலம் தளும்பி நிற்கிறது?"

"பனித்துளிகள், காலையில் சூரியனை வரவேற்கவில்லையா?"

"சூரியனின் தாபத்தையா நீ என்னிடம் காண்கிருய்?"

"கடைசியாகக் குதர்க்கம் செய்துவிட்டுத்தான் போகவேண்டுமா?"

"ஆ! என்ன?"

"........"

"செய்தி, என்னையும் முந்திக்கொண்டதா?"

"உங்களை நமஸ்காரம் செய்கிறேன். உண்மையின் தூய்மையை இன்னும் நான் காணவேண்டும், உங்களிடத்தில்."

"என்னை நம்பமாட்டாயா? லீலா!"

"எவ்வளவு நாளாக இப்படி ஒளிக்கிறீர்கள்?"

"ஒளிப்பதென்ன இருக்கிறது? கேவலம் கைகளின் ஒற்றுமைதான் இந்தக் கல்யாணத்தில். உயிர் உன்னுடன்தான் இருக்கிறது."

"ஐயோ! இதெல்லாம் என்ன!"

"சத்தியம்!"

"கடவுள் நாசமாய் போகட்டும்"

"லீலாவதி! நீதானா பேசுகிருய்!"

"ஆம்!"

"விலையில்லா முத்துக்கள் உதிர்ந்த வாயிலா, நாஸ்திகம் தாண்டவமாடுகிறது?"

"ஆசை, இதோ அர்த்தமற்று விடவில்லையா?"

"நான் துரோகி என்று நினைக்கிருயா?"

"என்னோடு இருக்கும் ஒவ்வொரு நிமிஷத்திலும் அவள் அப்படி நினைப்பாள்—உங்கள் ம-னை-வி!"

"அவளை தூஷிக்காதே-தயவுசெய்து!"

"மன்னிக்கவேண்டும்; தப்பு."

"தப்பு ஒன்று மில்லை லீலா! தெரியாதவளை தூஷிக்கலாமா!"

"எனக்குத் தெரியாதவளல்ல அவள். என் சத்துருவை எனக்குத் தெரியாம லிருக்குமா?"

"ஏன் அவளை உன் சத்துருவாக்கிக் கொள்ளுகிருய்?"

"பின், நான் என்ன செய்ய முடியும்?"

"ஏன்?"

"என்னுல் அவளைக் கொல்ல முடியாது!"

"ஐயோ!"

"அவளை நாசமாக்கும் சக்தி என் கையிலில்லை!"

"லீலாவதி!"

"ஏன்?"

"எனக்காக......ஐயோ! என் ஆசையில்தான் நீ நம்பிக்கை வைக்கவில்லையே..."

"ஆசை...ஆசை!"

"ஏன் இல்லை? போன பௌர்ணமியின் சௌந்தரிய வெள்ளத்தில்-ஞாபக மில்லையா உனக்கு?"

"என்னை அழவைத்தது தானே!"

"இதுதானா உனக்கு நினைவிருக்கிறது? கண்ணீர் ததும்பிய கண்கள் உன் அழகை பதினாயிரம் மடங்கு அதிகமாக்கியது லீலாவதி!"

"அதனால்தான் என்னை நிரந்தரமாக அழவைத்து அனுபவிக்கிறீர்கள்!"

"என்னால் இதைத் தாங்கவே முடியாது. நான் போகிறேன். நீ தூங்கு. உடம்பை......"

"இல்லை. இல்லை. நான் தூங்குகிறேன். அவள் விழித்துக்கொள்வதற்குள் நீங்கள் போய்விடுங்கள்!"

"அவளுடைய அழிவை நீ ஏன் விரும்புகிறாய்?"

"நான் வாழவேண்டுமென்று!"

"அழிவில்தான் வாழ்வு பிறக்கவேண்டுமா! உனக்கு - என்மேலுள்ள உன் ஆசைக்கு—என்றும் அழிவில்லை."

"..............."

"உன்மேலுள்ள என் ஆசைக்கும் என்றும் அழிவில்லை."

"...................."

"ஆத்ம சக்தியில் பிறந்த ஆசை அனந்தமானது. நீ அவளுக்குமேல் வெகு தூரத்திலிருக்கிறாய். அவளுக்கும் உனக்கும் போட்டியே இல்லை!" "போய் வரட்டுமா, லீலாவதி!"

"என்னைப்பற்றி நினைப்பீர்களா?"

"உன்னை என்னால் மறக்க முடிந்தாலல்லவா மறுபடியும் நினைப்பதற்கு, லீலாவதி!"

"அவள் சௌக்கியமாய் வாழட்டும்!"

"எவள்?"

"அவள்தான்! அவள் சௌபாக்கியத்தை அடையட்டும்!"

ஒரு நிமிஷக் கதைகள்

புடவை சரியில்லை.

"நீ அந்த ஜவுளிக்கடையில் ஏழு தரம் புகுந்து ஏழு தினுசான புடவைகளைக் கொள்ளை யடித்தாயாமே, வாஸ்தவம் தானா?"

"வாஸ்தவம் தானுங்க".

"ஏன் அப்படிச் செய்தாய்?

"முதல் ஆறு தினுசுப் புடவைகளும் என் மனைவிக்குப் பிடிக்கவில்லை".

* * *

சரிதான்.

ஒருவர்:—இந்த சட்டை தைக்கும் கூலியை இன்னும் ஒரு மாதம் கழித்துதான் தருவேன். என்ன சொல்கிறாய்?

தையல்காரன்:—ஓ! பேஷாய்க் கொடுங்கோ.

ஒருவர்:—சரி, சட்டை எப்போது தைத்துத் தருவாய்?

தையல்காரன்:—இன்னும் ஒரு மாதத்தில்.

* * *

நாற்பது பழங்களா?

வைத்தியர்:—(வியாதிஸ்தரிடம்) நீர் காப்பி என்பதைக் கண்ணாலும் பார்க்கக் கூடாது. அப்படி உமக்குக் காப்பியே ஞாபகம் வரும்போது ஒரு ஆரஞ்சுப் பழத்தை வேணுமானால் சாப்பிடுங்கள்.

வியாதிஸ்தர்:—என்ன வைத்தியரே, தினமும் என்னை நாற்பது ஆரஞ்சுப் பழங்களா சாப்பிடச் சொல்கிறீர்?

* * *

கவலைவேண்டாம்.

மனைவி:—நான் இன்று சாயந்திரம் வைத்திருந்த உப்புமாவைப் பூனை தின்றுவிட்டது. இதற்கு என்ன செய்வது?

கணவன்:—கவலைப்படாதே! வேறு பூனை வாங்கித் தருகிறேன்.

* * *

மாடிப்படி.

"ஆமாம்; வீட்டைப்பற்றிச் சொன்னாயே, அந்த வீட்டில் மாடிப் படிக்கட்டு எப்படிப் போகிறது?"

"மேலே இருக்கச்சே கீழே போகிறது. கீழே இருக்கச்சே மேலே போகிறது".

கோசார பலனென்பது என்ன?

ஒவ்வொரு வருஷ, மாத, தினங்களிலும் ராசிமண்டலங்களில் அண்டங்களாயுள்ள கிரகங்கள் பிரவேசித்திருந்து, மாறுவதை அறிந்துகொண்டு, ஒவ்வொருவரின் ஜனித்த ஜென்ம நட்சத்திரத்தைக் கொண்டு சந்திரனிருக்கும் ராசியைத் தெரிந்து, அதைக் கோசார லக்கினமாய் வைத்து அதுமுதல் முறையே (சந்திரலக்ன முதல்) 1, 2, 3, 4 5, 6, 7, 8, 9, 10, 11, 12 வீடுகளிலும் (கிரகங்கள்) செல்லுவதை அறிந்து, பலன் கீழ்க்காணும் சக்கரத்தின் முறையாய், தெரிந்து கொள்ளவும்.

பொதுவாய் ஒவ்வொரு வருஷ, மாத, தினப் பலன்களை அறிந்துகொண்டு காரியங்களில் ஜாக்கிரதையாய் இருப்பதற்கு உதவியா இருக்கும்.

இதில் முக்கியமாய் குரு, சனி, சந்திரன் இருக்கும் ராசியின் நன்மைதீமைகளை அறிந்து காலத்துக் கேற்றவாறு நடந்துகொள்வது நலமாம்.

சந்திரலக்கினத்திற்கு 8-இல் சந்திரனும், 7-ல் செவ்வாயும், 9-ல் ருகு, (1-ல்) ஜென்மத்தில் சனி, 3-ல் குரு, 5-ல் சூரியன், 6-ல் சுக்கிரன், 4ல் புதன், இப்படிக் கிரகங்கள் கோசார ரீதியாய் வருங் காலத்தில் மரண ஹானி, தனஹானி, குடும்பபேதம், ருணபயம், தொழில் ஹானி, ராஜபகை, சிறை முதலிய கொடூரங்களைச் செய்யும், திசைப்பலனறிந்து நிச்சயிக்கவும்.

இப்பலன் வலுவுற்ற திசாதிபதிகளால் கொஞ்சம் குறையும்.

மேற்கூறிய கோசார பலசக்கரம் பின் வருமாறு :

(கோசாரச் சக்கரம்.)

கிரகம்	1	2	3	4	5	6
சூரியன்	சலனம்	பயம்	சம்பத்து	பங்கம்	மதிமயக்கம்	சத்துரு நாசம்
சந்திரன்	க்ஷேமம்	தன விரயம்	சுகம்	கஷ்டம்	தன விரயம்	சுக லாபம்
செவ்வாய்	உடற்பிணி	பீதி	சௌக்கியம்	பகை	பயம்	சர்வ காரியசித்தி
புதன்	பரதனம்	லாபம்	பீடை	பயம்	சித்தி	ஹானி
குரு	சலனம்	வாபம்	பிரமாத துயர்	ஹானி	சம்பத்து	கிலேசம்
சுக்ரன்	சுகம்	பாக்கியம்	சுகம்	சுகம்	தன நாசம்	தாபம்
சனி	விபத்து	ஹானி	சம்பத்து	வியாதி	பயம்	ஜெயம்
ராகு	துக்கம்	நாசம்	சுகம்	விஷம்	துக்கம்	லக்ஷ்மி கடாட்சம்
கேது	கண்டம்	பயம்	லாபம்	பயம்	கஷ்டம்	சுகம்

(கோசாரச் சக்கரம்.)

கிரகம்	7	8	9	10	11	12
சூரியன	தாபம்	ரோகம்	பொருள் நாசம்	லாபம்	சுகம்	பிணி
சந்திரன்	நலம்	கஷ்டம்	துக்கம்	சவுக்கியம்	சுகம்	காரிய நாசம்
செவ்வாய்	பிரமாத துயர்	ருணம்	சமசுகம் ஸஸ்யம்	மனோபேதம்	லாபம்	கஷ்டம்
புதன்	ருணம்	தனம்	பீடிதம்	லாபம்	லாபம்	விரயம்
குரு	சுகம்	ஹானி	லாபம்	பங்கம்	சித்தி	துக்கம்
சுக்ரன்	லாபம்	பூஷணம்	சித்தி	பயம்	தனம்	ரோகம்
சனி	துற்போகம்	சந்தேகம்	ஆயாசம்	பீடிதம்	லாபம்	கஷ்டம்
ராகு	கஷ்டம்	துக்கம்	விசனம்	விசனம்	சுகம்	விரயம்
கேது	துக்கம்	சங்கடம்	ஹீனம்	கஷ்டம்	தனம்	பயம்

திரைப் படச் செய்திகள்

எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கும் "சகுந்தலா" ஆரம்ப விழா வன்று மதுரை ராயல் டாக்கீஸார் முன் நின்று சிரத்தையுடன் வேலை செய்ததைக் கண்டால், அவர்களே அதற்கு பண உதவி செய்திருக்கிறார்கள் என்று யூகிக்க இடம் தருகிறது.

* * *

ராயல் டாக்கீஸாரின் சக்குபாய் முடிவடைய, பண்டரிபுரம் கோவில் சீன் ஒன்றுதான் பாக்கி எடுக்கவேண்டி யிருக்கிறதாம். அதை நியூடோனிலேயே சிருஷ்டித்து வருகின்றனர்.

* * *

திருநீலகண்டர், எடிடிங்கில் கொஞ்சம் குறைகூற வந்தார். அதை நிவர்த்திக்கவே பாகவதர் ஓர் விருத்தத்தை இன்னும் இரண்டு தினங்களிலே பாடி முடிப்பார் எனத் தெரிய வருகிறது.

* * *

டெக்கான் சினிடோனில் குமார குலோத்துங்காவிற்காக, சோழன் தர்பார் ஒன்று போட்டு வருகின்றனர். அதுவுமன்னியில் இன்னும் அப்படம் முடிய இரண்டு செட்டிங்குகள் இருக்கின்றன வாம்.

* * *

வாகினி பிக்சர்சாரின் "நரபலி"க்கு ஸ்ரீ ராமனுதனும் சேகரும் ஒத்தாசை செய்வார்களாம். படம் ஒரு மாதத்தில் நியூடோனில் ஆரம்பிக்கப்படுமாம்.

* * *

எச். எம். ரெட்டியார் ஒரு சொந்த படம் ஒன்றை நேஷனல் மூவிடோனில் எடுப்பார் என ஓர் வதந்தி உலவுகிறது.

* * *

"கவி காளமேகம்" ஷூட்டிங் ஆரம்பமாக பதினைந்து தினங்கள் ஆகும் எனத் தெரியவருகிறது.

ராயபுரம் பிரைட்டன் டாக்கீஸ் புரொப்ரைட்டர் அவர்கள் திருநீலகண்டரை மதராஸ் பாரகன் டாக்கீஸிலே அவர்கள் மூலியமாய் ஓட்டுவார் எனத் தெரியவருகிறது.

* * *

சேலம் ஏஞ்சல் பிலிம்ஸார் "பரசுராம"ரை கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் எடுக்கப் போகின்றனராம்.

வி. வி. சடகோபன், எம். எஸ். ஸ்ரீ சுப்புலெக்ஷ்மி படத்தில் துஷ்யந்தன் பாகம் எடுத்துக்கொள்வார் என ஓர் வதந்தி கூறுகிறது.

* * *

நியூதியேட்டர் காமிரா மன் "கட்டக்" கூடிய சீக்கிரம் நியூடோனுக்கு வருவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

ஸ்ரீ ஒய். வி. ராவ். காஞ்சன்மாலா நடிக்கப் போகும் "மறுமணம்" என்னும் தெலுங்கு படம் 20உ யன்று ஷூட்டிங் ஆரம்பிக்கப்படும் எனச் சொல்லப்படுகிறது.

* * *

மயூரா பிலிம்சாரின் அதிர்ஷ்டத்திற்குச் சில ரீடேக்குகள் நியூடோனில் எடுக்கப்பட்டு வருகின்றன. சூர்யகுமாரி அதில் நடித்து வருகிறாள் எனத் தெரியவருகிறது.

* * *

ஹாலிவுட்டிலுள்ள நடிகர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசாக இருந்தால்தான் படத்தில் சோபிக்கிறார்களாம். உதாரணமாக, சில நடிகர்களின் லக்ஷணங்களைக் கவனியுங்கள் :—

(1) நெல்ஸன் எட்டி நீண்ட தலை மயிருடன் இருக்கவேண்டுமென்பது ஹாலிவுட் முதலாளிகளின் கட்டளை. ஆனால் எட்டிக்கு இது துளிக்கூடப் பிடிக்கவில்லை. என்ன செய்வது!

(2) ஜோன் கிஷ் போர்டுக்கு முக்கியம் பாந்தகண்களும், அழகிய வாயும்தானும்.

(3) வில்லியம் பவலும், கே. பிரான்ஸிஸும் நல்ல உடைகளைத் தரிக்க வேண்டுமாம், அது அவர்களுக்கு அழகாம்.

(4) பில்பர்க்குக்கு அசிரத்தை, ஞாபகமறதி இவ்விரண்டும் கூடப்பிறந்ததைப்போல் ஸ்வபாவமாய் இருந்து வரவேண்டுமாம், அவர் படங்களில் நடிக்கும்போது, இந்த இரண்டு அம்சங்களும் இருந்தால்தான் படம் சோபிக்கிறதாம்!

கார்போ மகா கருமி

கிரேடா கார்போவைப்பற்றி ஒரு ரஸமான செய்தி கிடைத்திருக்கிறது. அவள் மகா கருமியாம். ஒரு தம்படியும் வீணைக் செலவழிப்பவளல்லவாம் அவள்.

ஒரு சமயம் அவள் சொந்தத்தில் கார் வாங்கப்போவதாகக் கேள்விப்பட்டான் ஒரு மோட்டார் வியாபாரி. உடனே ஓடிவந்தான் கார்போ வீட்டிற்கு. பல மாதிரி உயர்ந்த கார்களின் படங்களை யெல்லாம் காண்பித்து எது வேண்டும் என்று கேட்டான்.

கார்போ ஒரே அடியாக “ தாங்கள் போய்விட்டு வரலாம்; நான் புதுக்கார் வாங்குவதாக உத்தேசமில்லை. விலை மலிவாக ‘ ஸெகண்ட் ஹாண்ட்’ கார் ஒன்று வாங்கிக்கொள்ளப் போகிறேன் ” என்றாள்.

அந்த வியாபாரிக்கு மகா கோபம் வந்துவிட்டது. “ கார்போ மகா கருமி ” என்ற பட்டத்தைக் கொடுத்துவிட்டான்.